Volume 8 : Issue 6

ஜூன் 2015 ஷாபான் 1436

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் : மு.குலாம் முஹம்மது. M.A.,

விலை : ரூ20



## பர்மா தொடரும்... படுகொலைகள்





## இந்து ராஷ்டிராவும் அம்பேத்கரும்





## கஷ்மீர் இன ஒழிப்புகள்

## ஐரோப்பாவின் அறிவியல் வழிகாட்டி இஸ்லாம்

# வைகறை வெளிச்சம்

ஜூன் 2015 - ஷாபான் - 1436

ஆசிரியர்

மு. குலாம் முஹம்மது

துணை ஆசிரியர்

கே.எம். இலியாஸ் ரியாஜி

**தனி இதழ் : ரூ. 20/-**

**ஆண்டுச் சந்தா:**

**உள்நாடு : ரூ. 240/-**

**வெளிநாடு : ரூ. 1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
DARUL ISLAM FOUNDATION TRUST
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



விளம்பரங்களுக்கு
VAIGARAI VELICHAM
52/1, Mannady Street,
Room No.7, Mannady,
Chennai - 600 001.
Tel.: 044-25224887

E-mail: darultrust@yahoo.com
Web : www.darulislam.in



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of chennai courts private circulation to promote the original issue


بسم الله الرحمن الرحيم


பர்மா – தொடரும் படுகொலைகள் ..................... 6

இந்து ராஷ்டிராவும் அம்பேத்கரும்! .................... 28

காஷ்மீரில் தொடரும் இன ஒழிப்புகள்! ................ 35

எது முதலில்?............................................ 39

ஐரோப்பாவின் அறிவியல் வழிகாட்டி இஸ்லாம் ..... 43

டீஸ்டா செடல்வாட் உடன் ஒரு நேர்காணல்.......... 49

ஜுஹு பட்டிணம் காவல் நிலையப்படுகொலையில்
உண்மையை சொல்லுமா காவல்துறை? .............. 52

குஜராத்தான ஹரியானா. . . ?....................... 53

தலித் மக்கள் வாழத்தகுதியற்றவர்களா? ............ 57

பெருமானார் (ஸல்) அவர்கள்
நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி ............... 60

தரீக்குல் குர்ஆன் ........................................ 62

உச்சநீதிமன்ற வழிகாட்டுநெறிமுறைகள்,
குப்பைக் கூடைகளுக்குத்தானா?........................ 65

தீன்சுடர் ஜனாப் டி.எம். உமர் ஃபாரூக்
அவர்களை அல்லாஹ் அழைத்து கொண்டான்! ..... 66


**குழப்பமும் கலகமும் நீங்கி மார்க்கம் அல்லாஹ்விற்காகவே ஆகும் வரை அவர்களிடம் போர் புரியுங்கள். எனினும், அவர்கள் விலகிக் கொண்டால் அநியாயக்காரர்கள் மீதே தவிர வேறெவருடனும் பகை எண்ணம் கூடாது.**

(அல்பகரா வசனம் - 193)

http:/www.facebook.com / vaigaraivelicham

தலையங்கம்

# பாசிசத்தின் கோரப் பிடியில் தலீத்கள்!

மே,16,2015 மராட்டிய மாநிலத்தில் தலீத் இளைஞன் ஒருவன் கோரமாகக் கொலை செய்யப்பட்டான். அவனுடைய கைப்பேசியில் அம்பேத்கரை புகழும் பாடலை கேட்கும் ஒலியாக வைத்திருந்தான் என்பதே குற்றம்.

அதே மராட்டிய மாநிலத்தில் ஜால்னா என்னும் மாவட்டத்தில் ஏப்பிரல் 3, 2014 இல் மற்றொரு தலீத் கொலை செய்யப்பட்டார். அவரது பெயர் மனோஜ் கசப். காரணம் மனோஜ் பஞ்சாயத்துத் தலைவர் ஆகிவிட்டார். அவருடைய தலைமையை ஏற்க முடியாது என ஆதிக்க ஜாதியினர் அவரைக் கொலை செய்து விட்டார்கள்.

அதே ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள் உமேஷ் அகால் என்ற தலீத் அவருடைய வீட்டுக்கு முன்னாலேயே அவரைக் கொலை செய்தார்கள். அவர் ஓர் ஆதிக்கஜாதி பெண்ணிடம் பேசினார் என்ற சந்தேகம் தான் காரணம். பின்னர் அது காதல் அல்ல, ஜாதி வெறியே என நிரூபிக்கப்பட்டது.

அதே ஏப்ரலில் 28ஆம் நாள் தலீத் இளைஞன் ஒருவனை அடித்து கொலை செய்து அவன் வீட்டிலேயே தொங்கவிட்டார்கள். இது அஹ்மத் நகர் மாவட்டத்தில் நடந்தது. நித்தின் ஆகி என்ற இந்த மாணவன் மராத்தி பெண் ஒருத்தியிடம் பேசினானாம். அதுதான் தவறு என்றார்கள்.

மே, 1 2014 இல்

பூனாவில் அம்பேத்கர் ஜெயந்தி, அம்பேத்கர் பிறந்த நாளைக் கொண்டாடிட முனைந்தார் மானிக் உடேஜ் என்ற தலீத். இதனால் அவரை 4 மராட்டியர்கள் அழைத்துச் சென்று கொலை செய்து விட்டார்கள். காவல் துறையினர் வழக்கே பதிவு செய்ய மாட்டோம் எனக் கூறிவிட்டார்கள். மக்கள் கடுமையாகப் போராடிய பின்னரே, வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

அதே மராட்டிய மாநிலத்தில் மே 16, 2014 அன்று சந்சேய் கோர்பராகாட் என்ற தலீத் சமூக ஆர்வலரை எரித்துக் கொலை செய்தார்கள். காரணம் அவர் புத்தவிஹார் ஒன்றை எழுப்பிட அரசு தந்த நிலத்தை உயர் ஜாதியினர் கைப்பற்றிட முனைந்ததைத் தடுத்தார்.

அக்டோபர் 21,2014 இல், நான்கு தலீத்கள் ஒரு பெண் உட்பட கொலை செய்யப்பட்டார்கள். காரணம், அவர்கள் வழக்கமாக வேலைக்குச் சென்று கொண்டிருந்த உயர் ஜாதிகாரரின் மணல் குவாரிக்கு வேலை செய்ய செல்லவில்லை.

ஜனவரி 1, 2015 இல் இதேபோல் நான்கு பேர் கொலை செய்யப்பட்டார்கள்.

இந்த வருடம் மட்டும இதுவரை 12 பேர் ஜாதியக் கொடுமைகளால் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

மராட்டிய மாநிலத்தில் பாரதீய ஜனதா கட்சி ஆட்சி அமைந்த பின் இது நித்திய நடப்பாகிவிட்டது என்கின்றார்கள்.

இந்தியாவிலேயே உத்திரப்பிரதேசம், மராட்டிய மாநிலம் அடுத்து நமது தமிழகம் இவற்றில்தான் தலீத்களுக்கு எதிரான குற்றங்கள் நடக்கின்றன என்கின்றது National Crime Bureau Records (NCBR)

உத்திரப்பிரதேசத்தில் கடந்த 10 ஆண்டுகளில் 26,378 வழக்குகள், மராட்டிய மாநிலத்தில் 1320, தமிழகத்தில் 10,845 வழக்குகள் என தலீத்கள் மீதான தாக்குதல்கள் தொடருகின்றன.

இந்த ஜாதிய வெறித்தாக்குதல்களிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள தலீத்கள் பல்வேறு உபாயங்களைக் கண்டெடுத்துப் பார்த்து விட்டார்கள். எவையும் பயனளிக்கவில்லை.

புத்தமதத்தை பெரிதாகத் தேர்ந்தெடுத்தார்கள். ஆனால் புத்த மதத்தையே இந்தியாவை விட்டு விரட்டி விட்டார்கள். இந்தப் பெருஞ் செயலை சங்கராச்சாரியார்களே முன்னின்று செய்தார்கள் என்கின்றார் தலீத் எழுத்தாளர் - ஆய்வாளர் ஜவரய்யா (Ambedkar Hindu Rashtra - By Dr. M.N. Javaraiah - A reply to satarkarï Golwalkar and Arun Shorie)

அங்கேயும் தலீத்கள் (Neo Buddhists) புதிய பௌத்தர்கள் என ஓரங்கப்படுகின்றார்கள்.

பொதுவுடமை வாதிகள், இந்த ஜாதியப் பிரச்னையையும் அதனால் தொடரும் வன்கொடுமைகளையும் தொழிலாளர் முதலாளி பிரச்சனை என்றே பார்க்கின்றார்கள்.

ஆனால் பொதுவுடமை என்ற கம்யூனிசம் இந்தியாவில் காலூன்றும் முன்பே உழைக்கும் வர்க்கத்திற்காக இயக்கம் அமைத்தவர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள்தாம். 1926 ஆம் ஆண்டே அவர் Independent Labour Party சுதந்திர உழைப்பாளர் கட்சி என்றொன்றை தொடங்கினார்.

இந்தப் பிரச்சினை ஜாதிய பிரச்னை தொழிலாளர் முதலாளி பிரச்சனை என்றால் அம்பேத்கர் அதனையே அனைவருக்கும் உபதேசித்திருப்பார். ஆனால் அவர் ஒரு மதத்தைத்தான் தேர்ந்தெடுத்தார். அவர் புத்தமதத்திற்கு போனது ஒரு தீர்வாக அமையவில்லை என்பதையும், அவர் எத்தகைய நெருக்கடியில் அப்படியொரு முடிவை எடுத்தார் என்பதையும், மறைந்த மேதை ஜனாப் டி.எம். உமர் பாரூக் அவர்கள் தனது நூலில் தெளிவுபடுத்தி இருந்தார்.

பொதுவுடமை பெரியார் வழி, அம்பேத்கர் அனைவரின் வழிமுறைகளையும் பார்த்து விட்டுத் தான் டி.எம். மணி அவர்கள் டி.எம். உமர் பாரூக் ஆனார்கள்.

அந்த வழி இஸ்லாத்தின் வழி. இஃதொன்றே இன இழிவு ஒழிய இருக்கும் ஒரே வழி.

ஏனெனில் இஸ்லாம் மட்டுமே மனிதகுலம் முற்றாக ஒரே அடிப்படையில் பிறந்ததுதான் தோன்றியதுதான் என்கின்றது. இறைவன் இதனை திருமறையில் பிரகடனப்படுத்துகின்றான்.

4:1 மற்றும் 49:12

இந்த அடிப்படையில் இஸ்லாத்திற்கு மட்டுமே மனித குலத்தை ஒன்றாகப் பிணைக்கும் வலிமையும் வரலாறும் உள்ளது. அது மனிதர்கள் அனைவரும் பிறப்பால் ஓரினம் என்பதால்தான் அது அதிகமாகத் தாக்கப்படுகின்றது என்பார். வி.டி. இராஜசேகர் என்ற தலீத் போராளி.

அந்த மார்க்கத்தை நிலைநாட்டுவோம். அனைவரும் ஒன்றுபடுவோம்.

இன்ஷா அல்லாஹ்.

**அடிப்படைத் தகவல்கள் - Front Line, June 26, 2015 லிருந்து எடுக்கப்பட்டவை.**

மனிதர்களே! உங்களுடைய இறைவனை நீங்கள் அஞ்சி நடந்து கொள்ளுங்கள். அவன் எத்தகையோன் என்றால் ஒரே ஆத்மாவிலிருந்து உங்களை அவன் படைத்தான். அதிலிருந்து அதனுடைய ஜோடியைப் படைத்து அவ்விருவரிலிருந்து ஏராளமான ஆன்களையும், பெண்களையும் பரவச் செய்தான். (எனவே) அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள். அவன் எத்தகையோன் என்றால் அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் உங்களுக்கு வேண்டியவற்றை கேட்டுக் கொள்கிறீர்கள். இன்னும் சொந்தங்களையும் பேணி ஆதரியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களின் மீது கண்காணிப்பவனாக இருக்கின்றான். ***(அன்நிசா வசனம் -1)***

**கவர் ஸ்டோரி**



# பர்மா

# தொடரும் படுகொலைகள்

## மே 28, 2012.

புத்தமதத்தைச் சார்ந்த பெண் ஒருத்தியை கற்பழித்து விட்டார்கள் என்றொரு புரளி. மூன்று முஸ்லிம் இளைஞர்கள் இது விவகாரத்தில் கைது செய்யப்பட்டார் கள்.இவர்களுக்கு, விசாரனைகள்எதுவுமின்றி, தண்டனை வழங்கப்பட்டு விட்டன.

புத்த பெண்ணை கற்பழித்ததாகக் கூறப்படும் முஸ்லிம்களை எங்களிடம் ஒப்படைத்திட வேண்டும் என்று புத்தமதத்தைச் சார்ந்தவர்கள் அவர்களைக் கைது செய்தவர் களிடம் கோருகின்றார்கள். அவர்களுக்கு நாங்கள் தண்டனையையும் அறிவித்துவிட்டோம். இந்நிலையில் அவர்களை நீங்கள் கேட்க வேண்டாம் என வாதிடுகின்றார்கள் அரசாங்கத் தினர்

.இதே வேளையில் ரங்கூனிலிருந்து வந்துகொண்டிருந்த பஸ் ஒன்றைவழிமறித்தார் கள் புத்தமதத்தைச்சார்ந்தவர்கள்.

பேருந்துலிருந்து 11 முஸ்லிம் இளைஞர் களை கீழே இறக்கிக் கண்ட துண்டமாக வெட்டிப் போட்டார்கள்.வாய் நிறைய மதுவை ஏந்தி அந்த சடலங்களின் மீது உமிழ்ந்தார்கள் .சடலங்களை சுற்றிச்சுற்றி வந்து ஆனந்த களிப்பில் ஆடினார்கள்.

புத்தம் என்றால் அகிம்சை, அவர்கள் எந்த உயிரினத்திற்கும் தீங்கிழைக்காதவர்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தவர்களுக்குப் பேரிடியாகி இருந்தது புத்தர்கள் செய்த கொலை பாதகம், அதன் பின் மதுவை வாயில் ஏந்தி உமிழ்ந்து போட்ட ஆட்டம் கொண்டாட்டம்! இந்த அளவுக்கு “பௌத்தர்கள்-அகிம்சாவாதிகள்” என அறியப்படுபவர்கள் கொலை பாதகங்களைச் செய்வார்கள்-பிணங்களின் மேல் நர்த்தன மாடுவார்கள் என்பனவற்றிற்கு இது உன்னதமான எடுத்துக்காட்டு1:

புத்த பெண்ணொருத்தியைக் கற்பழித்து விட்டார்கள். அதனால் தான் முஸ்லிம்களைக் கொலை செய்தார்கள் என்ற செய்திகளெல்லாம் பின்னர் காணாமற்போய்விட்டன. எந்த அளவுக்கு இந்தச் செய்திகள் காணாமற் போய்விட்டன என்றால்,அப்படியொரு நிகழ்வு நடந்ததா? என்பதே இப்போது ஐயத்திற் கிடமான ஒன்றாக ஆக்கப்பட்டுவிட்டது.



புத்தபெண்-ஐ கற்பழித்தவர்களைப் பழிவாங்க புத்த இனவாதம் பேசுவோர் தேடிச் சென்றார்கள். மியான்மர் (பர்மா) அரசு அவர்களை நாங்கள் கைது செய்துவிட்டாம் எனக் கூறி இருக்கின்றார்கள். அவர்கள் எத்தனை பேர் என்ற வினாவுக்கு மியான்மர் அரசே, அவர்கள் மூன்று பேர் என்றும். அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் .தண்டிக்கப்பட்டுவிட்டார்கள் என்றும் கூறி இருக்கிறார்கள்.

அவர்களைத் தேடிவந்த புத்த இனவாதிகளிடம் அவர்கள் தண்டிக்கப்பட்டு விட்டதால் உங்களிடம் ஒப்படைக்க முடியாது எனக்கூறி இருக்கின்றார்கள்.

மியான்மர் இராணுவம் சொன்னதைப் போல் அவர்கள் கற்பழித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள். இதற்குள் அவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தால், அவர்கள் விசாரிக்கப் படாமலே தண்டிக்கப்பட்டு விட்டார்கள் என்று பொருள்.

இதற்கு பர்மா என்ற மியான்மரில் எல்லா வாய்ப்புகளும் உண்டு. காரணம் குற்றம் சாட்டப்பட்டவர்கள் முஸ்லிம்கள். முஸ்லிம் களை குறிப்பாக மேற்கு பர்மாவில் வாழும் முஸ்லிம்களை, அந்த நாட்டுக் குடிமக்கள் அல்ல. அவர்கள் பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட வேண்டியவர்கள் என்றொரு வாதத்தை நீண்ட நாள்களாகவே பர்மாவை ஆட்சிச் செய்பவர்கள் முன்வைத்து வருகின்றார்கள். முஸ்லிம்கள், அந்நியர்கள் அவர்கள் பர்மாவின் பூர்வகுடிகள் அல்ல என்ற வாதத்தை *2011* வரை பர்மாவை ஆண்ட இராணுவ ஆட்சியாளர்கள் தாம் கூறிவந்தார்கள் என்றில்லை. *2012* இல் ஒரு ஜனநாயக ஆட்சி என்ற போர்வையால், இராணுவத்தின் துணையுடன் ஓர் ஆட்சி அமைக்கப்பட்டது. அந்த ஆட்சியின் தலைவர் தென்சிங் என்பவரும், அந்த முஸ்லிம்களை அந்நியர்கள், அகற்றப்பட வேண்டியவர்கள் என்றே கூறிவருகின்றார்.

அதே போல் அண்மையில் ஓர் அம்மை யார் வானளாவப் புகழப்பட்டார். மியான்மரின் ஜனநாயகத் தாய் எனப்புகழப்பட்டவர் அவர். அவருடைய திருப்பெயர், அங்க் சான் சூ கி! Aung San suu kyi அவரும் இந்த இனப்படு கொலைகளைப் பற்றிக் கனைத்துக்கூட காட்டிடவில்லை. ஆயிரக் கணக்கில் இறந்தவர் களுக்கு ஓர் இரங்கல் செய்தி கூட இல்லை. இந்த லட்சணத்தில் இந்த அம்மையாருக்கு அமைதிக்கான நோபல் பரிசும் வழங்கப்பட்டது.

இப்படி ஆட்சியில் இருப்பவர்களும், எதிர்கட்சியினரும் ஒன்றுபோல் பர்மா முஸ்லிம்களை அந்நியர்களாகக் கருதுவதுதான் பர்மா முஸ்லிம்கள் எதிர்நோக்கும் மிகப் பெரிய பிரச்சனை.



இதுதான் அவர்களை பிணங்களாகக் குவிப்பவர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்றது. இப்போது, புத்தப்பெண் கற்பழிப்பு,கொலை என்பனவற்றைத் திரும்பிப் பாருங்கள் .விசாரணையின்றி அவர்கள் தண்டிக்கப்பட்டிருந்தாலும் சரி. அல்லது அப்படி ஒரு சம்பவமே நடக்காமல் "மோடி" பானியில் புரளியைக் கிளப்பி முஸ்லிம்களைக் கொலை செய்திருந்தாலும் சரி. இரண்டு நிலையிலும் முஸ்லிம்களை இனப்படுகொலை செய்வதே நோக்கம் என்பது புலப்படும்.

## பர்மாவில் இதற்கு முன்னால் நடந்தவை:

இந்த நிகழ்வுகளை நாம் இங்கே சுட்டிக்காட்டுவதன் நோக்கம், பர்மாவில் முஸ்லிம்களைக் கொலை செய்வதற்குப் பெரிய காரணங்கள் எதுவும் தேவைஇல்லை, சாதாரண காரணங்களே போதும்என்பதை எடுத்துக் காட்டிடத்தான்.

பெப்ருவரி 2001 இலும், பர்மாவில் இப்போது முஸ்லிம்கள் கூட்டாகக் கொலை செய்யப்பட்டதைப் போல், கொலை செய்யப் பட்டார்கள். காரணம், ஏழு புத்தமதத்தைச்சார்ந்தவர்கள் ஒரு டீ கடையில் கேக்குகளைச் சாப்பிட்டார்கள். டீயும் குடித்தார்கள். டீக்கடையை நடத்திக் கொண்டிருந்தவர் ஒரு முஸ்லிம் பெண்மணி. இவர் குடித்த டீக்கு காசு கேட்டார். தரமட்டோம் என அடம் பிடித்தார்கள் புத்தமதத்தைச்சார்ந்தவர்கள். அத்தோடு அந்தப்பெண்மணியைத் தாக்கவும் செய்தார்கள்.

இதைத் தொடர்ந்து பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்கள் இனப் படுகொலைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அப்போது நடைபெற்ற கலவரம் சொன்ன செய்தி முஸ்லிம்களுக்குப் பர்மாவில் இடமில்லை, அவர்கள் அங்கே வாழ்ந்தால் இன படுகொலைகளுக்கு உள்ளாவார்கள் என்பதே.

ஐக்கிய நாடுகளின் சபை 1981இலேயே மேற்கு பர்மாவில் வாழும் முஸ்லிம்கள்,ரோங்கிய்யா முஸ்லிம்கள் பர்மாவின் பூர்வகுடிமக்கள் தாம் என அறிவித்துள்ளது .

ஆனால், பர்மாவில் வாழும் புத்தர்களும் ஆளும் வர்க்கத்தினரும் எதிர்கட்சியினரும் அவர்கள் பர்மாவிலிருந்து வெளியேற்றப்பட வேண்டியவர்கள் என்றொரு கருத்தைத் தொடர்ந்து பரப்பி வருகின்றார்கள்

.இப்போது ஜனநாயகரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதலைவர் எனப் போற்றப்படும்(தென் ஸியங்: ஜிபிணிமிழி ஷிணிமிழி)என்ற ஆட்சியாளன் 2012-ஜுனில் கலவரங்கள் நடந்துகொண்டிருக்கும் போதே-ரோங்னியா முஸ்லிம்கள் பர்மாவின் பூர்வ குடிகளல்ல அவர்கள் வெளியேற்றப்பட வேண்டியவர்கள் என அறிக்கைவிட்டார்.

இவரது அறிக்கை ஏற்கெனவே முழுஅளவில் கலவரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களை மேலும் உசுப்பேற்றி விட்டது.

## 2001 மே பாமியான் சிலைகளும் பர்மாவும்

2000 ஆண்டுகளில் ஆப்கானிஸ்தானின் பாமியான் பகுதியிலிருந்த சிலைகள் அகற்றப் பட்டன. அதற்குக் காரணம் ஆப்கானிஸ்தானில் ஆட்சிச் செய்து கொண்டிருந்த தாலிபான்கள் எனக் கூறப்பட்டது.

ஆனால் அதுவே, பர்மாவில் இன்னொரு இனப்படுகொலையை நடத்திட போதுமானதாக இருந்தது.

பாமியான் புத்த சிலைகளைக் காரணங் காட்டி பர்மாவில் ஒருபெரும் இனப்படு கொலையை நிகழ்த்தினார்கள்.



*300 பள்ளிவாசல்களை-மஸ்ஜித்களை தரைமட்டமாக்கினார்கள். எந்த அளவுக்கு இந்த மேற்கு பர்மாவில் பள்ளிவாசல்கள் தரைமட்டமாக்கப்பட்டன என்றால், அங்கு முஸ்லிம்கள் தொழுவதற்கு பள்ளிவாசல்களே இல்லாமல் போய்விட்டன. பல மாதங்கள் முஸ்லிம்கள் தொழுகைகளை தங்கள் இல்லங்களிலேயே நிறைவேற்றிட வேண்டியவர்களானார்கள்.*

பாமியான் சிலை உடைப்பை முஸ்லிம்களைக் கூட்டாகக்கொலை செய்திட வும், அவர்களின் வழிபாட்டுத் தலங்களை சுவடுகள் இல்லாமலாக்கிடவும் ஒரு வாய்ப்பாகவே பயன்படுத்தினார்கள் என்பதே உண்மை.

ஈவிரக்கமற்ற இந்தக் கலவரங்களை முன்னின்று நடத்தியவர்கள் பௌத்தர்கள்தாம்.

'தவ்கூட' என்ற இடத்தில் "ஹன்தா மஸ்ஜித்" என்றொரு பெரிய மஸ்ஜித் இருந்தது இந்தப் பள்ளிவாசலை அரசே இடிக்க வேண்டும். இல்லையேல் நாங்களே இடிப்போம். அந்தப் பள்ளிவாசலை இடிக்கும் வரை நாங்கள் ஓயமாட்டோம் எனப் பிடிவாதம் பிடித்தார்கள் புத்தர்கள்.

பள்ளிவாசலை இடிக்கும் சாக்கில் 400முஸ்லிம் குடியிருப்புகளையும் அழித்தார்கள். (Source: Reuters (via)HRKL.org)

பள்ளிவாசலை இடிக்க நெருங்கும் போதுபள்ளிவாசலுக்குள் தொழுது கொண்டிருந்தவர்களை அடித்தே கொன்றார்கள்.

## 1997 இல் நடந்தது

2012 இல் என்ன நடந்ததோ, இதுவே1997இலும் அப்படியே நடந்தது.

அப்போது 1997 இல் ஒரு கலவரத்தைத் திட்டம் போட்டு வைத்துவிட்டு இதே புரளியைக் கிளப்பிவிட்டார்கள். ஆமாம் புத்தமத பெண்ணொருத்தியை முஸ்லிம் ஒருவன் கற்பழித்துவிட்டதாக வதந்தியைப்பரப்பினார்கள். முஸ்லிம்களைக் கொன்று குவித்தார்கள்.

அன்று முஸ்லிம்களுக்கெதிரான கலவரத்தில் 1000 முதல் 1500 புத்தபிட்சுகள் கலந்து கொண்டார்கள்

.புத்தமத துறவிகள் கலவரக் களத்தில் இறங்கிடும் போதெல்லாம் ,பள்ளிவாசல்களையும், முஸ்லிம்களின் சொத்துக்களையும் வாகனங்களையுமே குறிவைத்தார்கள்.

100 புத்தமத துறவிகளைக் கைது செய்த போதே அன்றைய கலவரம் அடங்கியது.

இப்படி எடுத்ததெற்கெல்லாம் முஸ்லிம்களின் மேல் பாய்வதும் கொலை செய்வதும் கொள்ளையடிப்பதும், பர்மாவில் நிலவி வரும் ஒரு சூழல்.

எந்த அளவுக்கு, முஸ்லிம்கள் அந்நியர்கள், அதனால் அழிக்கப்பட வேண்டியவர்கள்,என்ற எண்ணங்கள் தழைத்தோங்கி நிற்கின்றன என்றால், இந்தோனேசியாவில் ஒரு சலனம் ஏற்பட்டால் கூட அடுத்தநாள் அதன் எதிர்ப்பையும், கொலைகளையும் கொள்ளைகளையும் பர்மாவில் எதிர்பார்க்கலாம் என்ற அளவுக்கு நிலைமை கனன்று கொண்டிருக்கின்றது.

## இதர கெடுபிடிகள்

பர்மாவில் வாழும் முஸ்லிம்கள் எப்போதாவது, ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிக் கொலை செய்யப்படுகின்றார்கள் என்பதோடு நின்றுவிடவில்லை. முஸ்லிம்கள்

மீதான கெடுபிடிகள், அடக்குமுறைகள் சர்வகாலமும், தொடர்ந்து கொண்டேதானிருக்கின்றன. அவர்களை-அதாவது முஸ்லிம்களை அங்கே வாழ்ந்திடும் உரிமையுள்ள முஸ்லிம்கள் என ஏற்றுக் கொள்ளாததினால் நிலங்களை வாங்குதல் வீடுகளைக்கட்டுதல் போன்ற பரிவர்த்தனை களில் அவர்கள் ஈடுபட இயலுவதில்லை. மேற்கு பர்மாவைப் பொறுத்த வரை அவர்கள் அப்படி நிலங்களை வாங்கினால் கூட அவர்கள் நிரந்தரமாக அங்கே வாழ்ந்திட இயலுவதில்லை. அவர்கள் சுதந்திரமாக சுற்றித்திரிந்திடவும் இயலுவதில்லை. திருமண நிகழ்வுகளைக்கூட ஆசுவாசமாக நடத்திட இயலுவதில்லை.

திருமணங்களைக் கண்காணிக்க வும் வருடத்திற்கு இத்தனை திருமணங்கள்தாம் என நிபந்தனை விதிக்கவும் புத்தமததுறவிகளைக் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் பெறுவதில் கூடபுத்தபிட்சுகள் ஒரு தம்பதியருக்கு இத்தனை குழந்தைகள் எனக் கட்டுப்பாட்டை விதித்துள்ளார்கள்.

அடிபட்டா லோ, அநியாயங்கள் நடந்தாலோ காவல் நிலையத்தில் புகார்களைப் பதிவு செய்திட இயலாது காரணம், அங்கே நீங்கள் இந்த நாட்டைச் சார்ந்தவர்களல்ல என விரட்டி அடித்து விடுகின்றார்கள். இதனால் மியான்மர் முஸ்லிம்கள் தினம் தினம் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றார்கள். முஸ்லிம்கள் எண்ணிக்கையில் மிகைத்து விடுவார்கள்

அவர்களைக் கொன்றொழிக்கா விட்டால் பர்மா முஸ்லிம் நாடாக ஆகிவிடும் என்றொரு பிரச்சாரம், அங்கிருக்கின்ற புத்தமதத்தைச் சார்ந்தவர்களால் இடைவிடாமல் செய்யப்பட்டு வருகின்றது. அதனால்தான் கலவரங்களின் போது அதிகமாக முஸ்லிம் குழந்தைகள் ஈவிரக்கமின்றி கொலை செய்யப் படுகின்றார்கள்.

## பர்மா கலவரங்களின் மூளையும் கையும்!

நமது கண்களுக்கு முன்னால் காட்டப் படும் கொலைகள், கலவரங்கள் இவற்றிற்குப் பின்அரசின் இயந்திரம் ஒன்று 'சதாசர்வகாலமும்' செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. அதன் பெயர், DIRECTORATEOF DEFENCE SECURITY INTELLIGENCE, டைரக்டரேட் ஆஃப் டிபன்ஸ் செக்கியூரிட்டி இன்டலிஜென்ஸ் இந்த அமைப்பு பர்மாவின் உளவுத்துறை. இந்த உளவுத்துறை பல மக்கள் அமைப்புகளை நிறுவி முஸ்லிம்களை பர்மாவை விட்டு விரட்டும் பணியை நிறைவேற்றி வருகின்றது.

இந்த உளவுத்துறையில் இயக்கப்படும் பிரதான அமைப்புகள் இரண்டு(1) UNION SOLIDARITY ANDDEVELOPMENT ASSOCIATION (USDA): ஐக்கிய ஒருமைப்பாடு மற்றும் வளர்ச்சிக் குழுமம்.(2) STATE PEACE ANDDEVELOPMENT COUNCIL. அரசு அமைதி மற்றும் வளர்ச்சிகுழு [SPDC].இந்த இரண்டு அமைப்புகளும் பெயரில் காணப்படுவது போல் அமைதியான அமைப்புகள் அல்ல. மாறாக அவை கலக மூட்டுபவை, கலகங்களை முன்னின்று நடத்துபவை. முஸ்லிம்களை சதாசர்வகாலமும் கண்காணித்து வருபவை. இப்போது நடந்த கலவரங்களை முன்னின்று நடத்தியதோடு. கலகங்கள் நடக்காத இடங்களுக்குப் பிரசுரங்களைப் பிரசுரித்து கலகங்களை உருவாக்கியவை.

2001 இல் நடந்த கலவரங்களின் போது பௌத்தர்கள் என்ற இனமே அழிக்கப்படவிருக்கின்றது என்ற துண்டுபிரசுரங்களை அதிக அளவில் விநியோகித்ததே, மேலே நாம் குறிப்பிட்ட இரண்டு அமைப்புகளுந்தான். அந்தப்பிரசுரங்களுக்கு இப்படிப் பெயர் வைத்திருந்தார்கள். "THE FEAR OFLOSING ONCE RACE ." நமது சொந்த இனத்தை இழந்துவிடும் அச்சம். [SOURCE:REUTERS PIC VIA: HRW.ORG.].

அதேபோல் இந்த 2011 கலவரங்களின் பின்னணியில் 300 பள்ளிவாசல்கள் இடிக்கப்பட்டன. முஸ்லிம்களின் வீடுகளும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டன. இவற்றை எல்லாம் இடித்ததும் தரைமட்டமாக்கியதும் இடிபாடுகளை அகற்றியதும் SPDC என்ற அமைப்பின் புல்டோசர்கள் தான். டாங்கூ 'Taungoo' என்னுமிடத்திலுள்ள பள்ளிவாசல்கள், 2002ஆம் ஆண்டு வரை மீண்டும் எழுப்பப்படாமலே இருந்தன. ஒவ்வொரு முறை கலவரங்கள்

நடந்திடும் போதும், பர்மாவின் உளவுத்துறையின் கீழ் இயங்கும் இந்த அமைப்புகள் SPDC & USDA. நேரடியாகக் கொள்ளையடிப்பதில் ஈடுபடுகின்றன. இப்போது 2012 இல் நடந்த கொள்ளை யடிப்புகளிலும் இந்த அமைப்புகள் நேரடியாக ஈடுபட்டன என்று BBC BRITISH BROAD CASTING CORPORATION பிரிட்டனின் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனம் உறுதி செய்தது.



(SOURCE: IBID & BBC News)

"Human Rights Watch" மனித உரிமைகள் கண் காணிப்பு மையம். முஸ்லிம்களுக்கெதிரான கலவரங்களை தூண்டுபவர்கள் SPDC & USPA என்ற அமைப்புகளைச் சார்ந்தவர்கள் தாம் எனத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்கள். பல இடங்களில் இராணுவத்தினர் நேரடியாக களமிறங்கி கொலைகளைச் செய்தார்கள். அம்னஸ்டி இன்டர் நேஷனல் இதனை உண்மைப்படுத்துகின்றது.

## சீனாவின் உதவிகள்:

பர்மாவின் மொத்த மக்கள் தொகை 6 கோடிதான். ஆனால் அதன் நிலபரப்பு மிகவும் பெரியது. அத்தோடு அதன் இயற்கை வளங்கள் இன்னமும் அகழ்ந்தெடுக்கப்படவில்லை. இதை மிகவும் இலாவகமாகப் பயன்படுத்துவது சைனாதான். பர்மாவில் ரெங்கூனுக்கு அடுத்தாற்போல் சிறந்த முக்கிய நகரம், 'Mandalay' மண்டாலே என்பதுதான். இதனை சின்ன "பீஜிங்" சைனாவின் இரண்டாவது தலைநகர் என்கின்றார்கள் .காரணம் இந்த இடத்தின் மொத்த வியாபாரத்தையும் சைனாவே காவுகொண்டுவிட்டது.

சீனர்கள் எந்தத் தங்குத்தடையுமின்றி இங்கே வருகின்றார்கள். வாழுகின்றார்கள். சீனர்களின் தொடர் கெடுபிடிகளால் இங்கேவாழ்ந்த பூர்வ குடிகள், நகர்புறங்களை விட்டு, கிராமப்புறங்களுக்கு ஓடிவிட்டார்கள். 40லட்சம் சீனர்கள் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். முஸ்லிம் களைப் பூண்டோடு ஒழிக்க நினைக்கும் புத்தமத வெறியர்களுக்குத் தங்குதடையின்றி ஆயுதங் களைத் தருகின்றவர்களும் சீனாவைச் சார்ந்தவர்கள்தாம். அஃது அவர்களுக்கு ஒரு வியாபாரமாகப் போய்விட்டது. நல்ல இலாபம் தரும் வியாபாரம். அன்றாடம் வந்து போகும் சைனாவைச் சார்ந்தவர்கள் பல்லாயிரம் எனக் கூறுகின்றார்கள்.

சீனாவைச் சார்ந்தவர்கள் செய்வதை யெல்லாம் வேடிக்கை பார்ப்பதைத் தவிர பர்மாவைச் சார்ந்தவர்களுக்கு இப்போது வேறு வழி இல்லை. மண்டாலேவின் உள்ளாட்சியில் நகராட்சி தலைவர்கள் போன்ற பல முக்கியப் பொறுப்புகளில் சைனாவைச் சார்ந்தவர்கள் இருக்கின்றார்கள். இதற்குப் பலக் காரணங்கள்: ஒன்று சைனாவைச் சார்ந்தவர்கள் தாங்கள் செய்யும் உதவிகளையெல்லாம் புத்தமதத்தின் சார்பில் செய்வதாகக் காட்டிக் கொள்கின்றார் கள். பௌத்த தீவிரவாதிகளுக்குத் தங்கு தடை யின்றி ஆயுதங்கள் கிடைத்துக் கொண்டிருக் கின்றன .இன்னொன்று, பர்மாவில் முஸ்லிம் களின் மேல் கட்டவிழ்த்து விடப்படும் கொடுமைகள், இனப்படுகொலைகள், இவற்றின்

பின்னணியில் பர்மாவின் ஆட்சியாளர்கள் உலக நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்திருக்க வேண்டும். ஆட்சியாளர்கள் தண்டிக்கப் பட்டிருக்கவேண்டும்.

அத்தனையையும் உலக அரங்கில் தடுத்துக் கொண்டிருப்பவர்கள், சைனாவைச் சார்ந்தவர்கள் தாம். இதற்கெல்லாம் கைமாறாக சைனா தனது உபரி மக்கள் தொகையை பர்மாவில்குடியேற்றிக் கொள் கின்றது. பர்மாவின் இயற்கை வளங்களைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்கின்றது. சைனாவிலிருந்து புற்றீசல் போல் வரும் மக்களைத் தடுத்திட இயலாது பர்மாவின் பௌத்தர்கள் சைனாவை சார்ந்தவர்களை இப்போது அநியாத்திற்குள்ளாகி நிற்கும் ரோகிங்னிய முஸ்லிம்கள் வாழ்ந்திடுமிடத்தில் குடியேற்றிட தயாராக இருக்கின்றார்கள். அவ்வாறு குடியேறிடும் சைனாவைச் சார்ந்தவர் களுக்கு வாழ்க்கை வசதிகளைச் செய்து தந்திட **2013-2014** இல் முடியுமளவில் எரிவுாயு குழாய் வசதிகள் வேகமாகப் புதைக்கப்பட்டு-இணைக்கப்பட்டுவருகின்றன.

SOURCE: BURMA KILLINGTWO BIRDS WITH A STONE OR WIN,WIN SITUATION BY KANBAZAZAWIN.www.bbc.co.uk/news/world asia 1892 1960.

நேர்மையாளர்கள், நடுவுநிலை யாளர்கள், இவர்கள் ரோக்னிய்யா முஸ்லிம்களை நிற்கதியாக ஆக்கிவிட்டு விடுவீர்களா? எனக்கேட்டால் அதிபதி தின்சைன் முதற்கொண்டு அனைவரும் முஸ்லிம்களை வெளியேற்றுவது மட்டுமே வழி என்கின்றார்கள். சில அதிகாரிகள் முஸ்லிம்கள் கிழக்குப் பர்மாவில் சென்று வாழட்டும் என்பதாகக் கூறி விடுகின்றார்கள். மொத்தத்தில் இப்போது அராக்கன் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட அதாவது மேற்கு பர்மாவிலிருந்து வெளியேற்றப் பட்ட முஸ்லிம்கள், அகதிகள் முகாம்களிலேயே இருந்திட வேண்டியது வரலாம் அல்லது படகுகளில் வைத்து கடலில் அனுப்பப்படலாம். அவர்கள் அந்த படகுகளிலேயே மடிவதுமுண்டு ,இந்தோனேசியா சென்று கரையேறுவதுமுண்டு. [இதனை,பிற்பகுதியில் விரிவாகத் தந்துள்ளோம்]



## மேலைநாடுகளின் போட்டி

பர்மா என்ற மியான்மரின் மொத்த இயற்கை வளங்களையும் சைனா கைப்பற்றிக் கொள்ளக் கூடாது தங்களுக்குத் தான் அவைவேண்டும் என்பதில் மேலைநாடுகள் மிகவும்கவனமாக இருந்து வருகின்றன. அதனால் மியான்மர் என்ற பர்மாவின் மேல்விதித்திருந்த பொருளாதார தடைகளை மேலைநாடுகள் தளர்த்தியுள்ளன .இவர்களால் உருவாக்கப் பட்டவர்தான் ஜனநாயகவாதியாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் அம்மணி டா அங் சான் சூ கீ.ஞிணீஷ் கிஹுஸீரீ ஷிணீஸீ ஷிஹுஹு ரிஹ்வீ ஆனால் பர்மாவின் ஆட்சியாளர்கள் இந்த அம்மணியைப் பக்கத்தில் கூட அண்டவிடாமல் பார்த்து வருகின்றார்கள்.

## அண்டை நாடுகளின் மனிதாபிமானமற்ற செயல்கள்.

பௌத்தர்களுடன் பர்மாவின் இராணுவ உளவுத்துறையும் இணைந்தே தான் மேற்கு பர்மாவின் ரோங்னிய்யா முஸ்லிம்களைக் கொலை செய்கின்றார்கள். திட்டம் போட்டு, அவர்களை வெளியேற்றுகின்றார்கள். முஸ்லிம் பெண்களைக் கொலை செய்வதற்கு முன்னால் கற்பழிக்கின்றார்கள் புத்தமத துறவிகள். குழந்தைகளையும் குரூரமாகக் கொலை செய்கின்றார்கள். இந்தக் கொடுமைகள் தாழாமல் முஸ்லிம்கள் படகுகளில் ஏறி தப்பித்துச் செல்லுகின்றார்கள். அந்தப் படகுகளை பர்மாவின் இராணுவத்தினர் விசைப்படகுகளில் சென்று கவிழ்த்துவிட்டு வந்து விடுகின்றனர். கடலில் மூழ்கடிக்கப்படுகின்றார்கள் அந்த மக்கள். இவற்றில், உயிர் பிழைத்தவர்கள் இந்தோனேசியா சென்றால் மட்டுமே, அவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றார்கள். பங்களாதேஷ்-ஐ சார்ந்த எல்லைப்பாதுகாப்புப் படையினர் அவர்களை ,பங்களாதேஷ்-க்குள் அனுமதிப்பதே இல்லை.

பங்களாதேஷ் முஸ்லிம்கள், நம்மை ஆதரிப்பார்கள். அரவணைப்பார்கள் .ஏனெனில் நாம் முஸ்லிம்கள் என்பதனாலேயே குறி வைத்துத் தாக்கப்படுகின்றோம், என நம்பி



செல்லும் பர்மா முஸ்லிம்கள் ஏமாற்றப் படுகின்றார்கள். மீண்டும் கடலில் குதித்துத்தான் தப்பித்தாக வேண்டும் என்ற கையறு நிலை. பல நேரங்களில் அவர்கள் மீண்டும் பர்மாவுக்கே திரும்பிட வேண்டும் என்ற நிலை. அங்கே சென்றால் புத்தமத துறவிகள்,தங்கள், பெண்களைத் தங்கள் முன்னாலேயே கற்பழிப்பார்கள் என்ற நிலை. இதனால் தங்கள் பெண்களை அப்படியே விட்டுவிட்டு, கடலிலே மூழ்கவிட்டுவிட்டு, வந்து விடுகின்றார்கள்.

இன்னும் சில செய்திகள் சொல்லும் நிலை நாம் இன்றளவும் கேள்விப்பட்டிறாத நிலையாகவே இருக்கின்றது. அதாவது தங்கள் பெண்களை ஆண்களே கடலில் தள்ளி விடுகின்றார்கள். காரணம், புத்தமத துறவிகளிடம் மானத்தையும் உயிரையும் இழப்பதை விட உயிரை இழப்பது சிறந்தது என அந்த ஆண்கள் முடிவு செய் கின்றார்கள். பங்களாதேஷ் அந்த மக்களைக் கைவிட்ட அவலத்தை இப்படிப்பதிவு செய்கின்றார்கள் .If the refugees thought a shared faith wouldget them, past the border, and into thewelcoming Bangladesh arms, they were in fora shock. உயிருக்குப் பயந்து ஓடிய அகதிகள், நம்மைப் போல் ஈமான் கொண்டவர்கள் தங்களை எல்லைக் கடக்க அனுமதிப்பார்கள், நம்மை அன்போடு அரவணைப்பார்கள் என்றெல்லாம் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்களுக்குப் பங்களாதேஷ் எல்லையில் அதிர்ச்சிகளே காத்திருந்தன. இன்னொரு பார்வையாளர் இப்படிப்பரிதாபப்படுகின்றார்.

"When these Muslim Flue to Bangladeshauthorities send them back to Burma., Wheremass rapes and brutalities have taken placeagainst women. Many Muslim men pushedtheir wives, daughter and other female familymembers into sea fearing consequences ofreturning to Burma with Women and girls whenauthorities in Bangladesh not allowed them toenter the shore of Bangladesh." Ýî£ó‹:Artice By ABDUL HANNAN SIWANINADWI: BURMA MUSLIMS AND BlindWorld. ahannan @111yahoo.co. BURMESEMUSLIMS AND THE BLIND WORLD.

அதாவது "இந்த முஸ்லிம்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள பங்களாதேஷ்-ஐ நோக்கி ஓடியபோது, பங்களாதேஷ் அதிகாரிகள் அவர்களை மீண்டும் பர்மாவுக்கே அனுப்பினார்கள். அந்த பர்மாவில் பெண்களைக் கற்பழிப்பதும் பெண்களைக் கொடுமைகளுக் குள்ளாக்கிடுவதும் தொடர்ந்து நடந்து கொண்டே இருந்தன. நிறைய முஸ்லிம்கள் தங்கள் மனைவி, மகள்களை, இன்னுமுள்ள பெண் உறுப்பினர்களை, கடலில் தள்ளினார்கள். அவர்கள் பர்மா திரும்பினால் நடக்கும் பயங்கரங்களை எண்ணி அஞ்சினார்கள். தப்பிச் சென்ற முஸ்லிம்களில் சிலர் தாய்லாந்து சென்றனர். அவர்களைப் படகுகளில் ஏற்றி, நடுக்கடலில் விட்டுவிட்டு வந்துவிட்டனர் தாய்லாந்து இராணுவத்தினர்.

பல படகுகளில் தப்பிச் சென்றவர்கள் திரும்ப வருவதாகக் கண்டால், அவர்களைப் பர்மாவிலுள்ள பாதுகாப்புப் படையினரே குண்டுகளை வீசி அழித்தார்கள். கலவரங்கள் தொடங்கிய மூன்று நாட்களுக்குள், 20,000 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். 90,000 முஸ்லிம்கள் அகதிளாக்கப்பட்டனர். புத்தமதத்தை ஏற்றுக் கொண்டால் விட்டுவிடுவோம் என்றொரு மதத் திணிப்பு எஞ்சியவர்கன் மீது செய்யப்படுகின்றது. நிச்சயமாக இத்துணை பெரிய இழப்பு,பர்மாவின் இராணுவத்தின் துணை, காவல்துறை புத்தத் துறவிகளுக்கு தொடர்ந்து ஆயுதங்கள் வழங்குதல் இவை இன் றிநிச்சயமாக நடந்திருக்கவியலாது.

# தாலிபான்கள் எச்சரிக்கை

இத்துணை பெரிய அநியாயங்கள் நடந்துகொண்டிருக்கும் போது, உலக நாடுகள் ஒலிம்பிக்- சிரியா என தங்களது கவனத்தைத் திருப்பிக் கொண்டிருந்தன. மேலைநாடுகள் பர்மாவின் மீதிருந்த பொருளாதார தடைகளைத் தளர்த்திக் கொண்டிருந்தின. நமது இந்தியா பர்மாவின் நல்வாழ்வுக்குப்பல பொருளாதாரத் திட்டங்களைஅறிவித்துக் கொண்டிருந்தது.

உலக ஊடகங்கள் மொத்தமாக இருட்டடிப்புச் செய்தன. இந்நிலையில், ஆப்கானிஸ்தானில், அமெரிக்க பயங்கர வாதத்தை எதிர்த்துக் கொண்டிருக்கும், தாலிபான்கள் ஓர் அறிக்கை விட்டார்கள்.அதில் பர்மாவில் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம்களுக்காக பர்மாவை பழிக்குப்பழி வாங்குவோம் எனக்கூறியுள்ளனர். தாலிபான்கள் சார்பில் அறிக்கைவிட்டுள்ள இஹ்ஷானுல்லாஹ் இஹ்ஷான்இப்படிக் கூறியுள்ளார்.

Regarding the current situation in Myammarwhere Muslims are going through their toughestdays, the talibans is with its brothers and sisterswe want to give a reminder to Muslim therethat we have not forgotten you, we will takerevenge of your blood".

அதாவது, மியான்மர் முஸ்லிம்கள் தங்கள் வாழ்நாளின் மிகவும் நெருக்கடியான காலத்தைக் கடந்து கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் எங்கள் சகோதரர்களுடனும், சகோதரி களுடனும் இருக்கின்றோம். நிச்சயமாக நாங்கள் உங்கள் இரத்தங்களுக்காகப் பழிவாங்குவோம். முல்லா உமர் அவர்கள் விட்ட அறிக்கையில் இது முஸ்லிம்களுக்கெதிரான குற்றம்மட்டுமல்ல மனித இனத்திற்கு எதிரான குற்றம் எனக் கூறியுள்ளார்கள். (rediff.com)

முஸ்லிம் நாடுகளின் கூட்டமைப்பு ரோக்ங்னியி முஸ்லிம்களை பர்மா தன்னுடைய குடிமக்கள் என அறிவிக்கவேண்டும் எனக் கூறியுள்ளது.

## யார் இந்த பர்மாவாழ் முஸ்லிம்கள்?

பர்மாவின் மேற்கு பகுதியிலுள்ள அன்காரா மாநிலம். அதில் பங்களாதேஷ் எல்லையோரம் வாழும் இந்த முஸ்லிம்களை ரோங்னிங்கா முஸ்லிம்கள் என அழைகின்றார்கள். இவர்களைத் தான் புத்ததுறவிகள், பர்மாவின் காவல்துறை, இராணுவம் இவையெல்லாம் இணைந்து கொலை செய்கின்றன. கேட்டால் அவர்கள் பர்மாவின் குடிமக்களல்ல எனக்கூறுகின்றார்கள். 1982 ஆம் ஆண்டில் பர்மாவில் குடிமக்கள் சட்டம் Citizenship Law குடிமைசட்டம்- என்றொன்று கொண்டு வந்தது. அதில் குடிமக்களை மூன்றாகப் பகுத்துக் காட்டியது. குடிமக்கள் Citizen, இணைக்குடிகள்Associate Citizen, இயற்கையான குடிகள்Natural Citizen இந்த மூன்று பிரிவினரும் குடிமக்கள் தாம். மூன்று பிரிவினருக்கும் எல்லா உரிமைகளும் உண்டு. இந்தப் பகுப்பல்லாமல், மற்றவர்களை வெளிநாட்டவர்கள் எனக் குறிப்பிடுகின்றது.

இவர்களும் தங்களைப் பர்மா அரசோடு பதிவு செய்து கொள்ளலாம். ஆனால் அரசு பதவிகளுக்கோ இதரப் பதவிகளுக்கோ உள்ளாட்சி பதவிகளுக்கோ தகுதியற்றவர்கள். ஆனால் முஸ்லிம்களைப் (ரோங்னிகா முஸ்லிம்களைப்) பற்றி எதுவுமே சொல்லவில்லை. அதனால் அவர்கள்'Stateless' நாடற்றவர்கன் என எடுத்துக் கொள்ளப் படுகின்றார்கள். அப்படியானால் அங்கே முஸ்லிம்கள் எப்போது எப்படி சந்தித்தார்கள் என்பது மிகவும் முக்கியம். அதனை சுருக்கமாகப் பார்ப்போம்.

## பர்மாவுக்கு இஸ்லாத்தின் வருகை!

பர்மாவின் வரலாற்றை வரைவோர் பலர்அனைவரும் பர்மாவின் வரலாற்றை 9 ஆம் நூற்றாண்டிலிருந்து தான் தொடங்குகின்றார்கள். இதனை பர்மாவின்றி ஸிணிபிமிஷிஜிளிஸிசீ பர்மாவின் முன்வரலாறு எனப்பெயரும் சூட்டுகின்றார்கள். இஸ்லாம், பர்மாவுக்கு வந்ததும் இதே 9ஆம் நூற்றாண்டில் தாம் என்பதற்கு அழுத்தமான ஆதாரங்கள் உண்டு. முதலில் வந்தவர்கள், இரண்டு அரபுவணிகர்கள் தாம். இவர்கள் வணிகர்கள் என்றாலும் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வதே இவர்களின் நோக்கம்.

இவர்களின் பெயர்கள் (1) BYAT WIBYAT TA, பய்யாத் வி பய்யாத்தா இவை பர்மீஸ் மொழிப் பெயர்கள் இவர்கள் இருவரும் ஒட்டிப்பிறந்த சகோதரர்கள். இவர்களை பர்மாவின் வரலாற்றில் Two Arab Muslim Sailors இரண்டு அரபு முஸ்லிம் பயணிகள் எனக் குறிப்பிடுகின்றார்கள். இஸ்லாத்தை இகமெங்கும் பரப்பிட போந்த இலட்சிய செல்வங்கள், அந்த இடங்களிலேயே உறைந்து திருமண உறவுகளை வளர்த்து அங்கேயே இறைவனிடம் சென்றார்கள். அதேபோல்தான் இந்த இரண்டு இலட்சிய வீரர்களும் பர்மாவிலேயே வாழ்ந்து-மணந்து-இஸ்லாத்தைப் பரப்பினார்கள். அங்கே தங்கள் வாழ்க்கையை முடித்துக் கொண்டார்கள்.

இவர்கள் பர்மாவுக்கு வந்தது இதேஅன்காரா மாநில ரக்கின் பகுதி என்றும் அன்று அது Ayzavadi River Delta. ஆய்சாவாடி படுகை என்று பேசப்பட்டது. இதனை CHRONICLES OF CHINA 860AD-முதல் 1055 வரை என்ற வரலாற்று பதிவு செய்கின்றது. முதல் முஸ்லிம்கள் வந்து இறங்கிய இந்த இடந்தான் இப்போதுகலவரப் பூமியாகத் திகழ்கின்றது. இவர்களின் காலம் 1044 AD கி.பி. எனக்குறிப்பிடப்படுகின்றது. இதனை பதிவு செய்கின்ற அனைத்து வரலாற்று ஏடுகளும் முஸ்லிம்கள் அங்கே வந்த காலக்கட்டத்தை Prior to the Establishment of FIRST BURMESE EMPIRE 1055 AD. என்றே குறிப்பிடுகின்றன. 'அதாவது 1055 இல் முதல் பர்மீய சாம்ராஜ்யம் நிலை நாட்டப்படுவதற்குமுன்பு' என இஸ்லாத்தின் வருகையை அடையாளப் படுத்துகின்றார்கள். அன்றைய நாட்களில் முஸ்லிம்களை'Pathi' பதி என அழைத்தார்கள்.

இஃது பாரசீக மொழியாகிய 'Bago' பாகோ என்பது "மறுவி" வந்தது எனவும் குறிப்பிடுகின்றார்கள். இஃது பர்மீய மொழி வளர்ச்சியில் முஸ்லிம்களுக்கும், பாரசீ மொழிக்கும் சிறந்த பங்குண்டு என்பதை தெள்ளத் தெளிவாக விளக்கும். முதல் பர்மீய

சாம்ராஜ்யத்தைக் கட்டி எழுப்பியவர் மன்னர் அனாத்வாறா 'Anatwara' தான் இவர்தான் இந்த சாம்ராஜ்யத்தைக் கட்டியெழுப்புவதில் முஸ்லிம்களை தாராளமாகப் பயன்படுத்தினார். இதனிடையே சீனாவை நோக்கிப் பயணம் செய்த அரபுக்கள் பலர், பர்மாவின் கரையோரம் வந்து இளைப்பாறுவது வழக்கம். இவர்களில் பலர் பர்மாவிலேயே தங்கிவிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களை தங்கள் படைகளில் பர்மீய மன்னர்கள் தாராளமாகப் பயன்படுத்தினார்கள். தங்கள் பட்டாளத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காக மத்திய பர்மாவின், வளமான பகுதிகளில் இவர்களுக்கு வீடுகளும், மனைகளும் இதர வழிகளும் செய்து தரப்பட்டன.ப ர்மீய சாம்ராஜ்யத்தின் மூன்றாம் மன்னன் (3rd King) என அழைக்கப்படும், கியான்ஜோத்தா. இப்படி முஸ்லிம்களை வாழவைத்தவர்களில் ஒருவர். பர்மீய படைகளில், பணியாற்றிய முஸ்லிம் வீரர்களுக்கு 'ஹலால்' உணவுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பர்மா மன்னர்கள் நடத்திய சில போர்கள் இந்தியாவுடனும் நடந்தது. இந்தப் போரில் இந்தியர்களின் படைகளுடன் போராடிய முஸ்லிம்கள் கைதிகளாக பர்மீய படைகளிடம் சிக்கியது முண்டு. அவர்கள் பர்மா முஸ்லிம் களோடு இணைக்கப்பட்டு அங்கே வாழ வைக்கப் பட்டார்கள்.

இதனால் European Chronicle, ஐரோப்பியர்களின் வரலாற்றுச் சுவடுகள்,Chinese Chronicle சைனாவின் வரலாற்றுவரைவுகள், அனைத்தும் முஸ்லிம்களின் வருகையை குறிப்பிடும் போது முஸ்லிம்கள், போர்வீரர் களாகவும், (Military Permnet)adventures-சாதனை வீரர்களாகவும், பலவிஷயங்களில் புதுமையைக் கண்டு பிடித்துக் கொண்டு வந்தவர்களாகவும் "PIONEERS"கைதிகளாகவும் வந்தார்கள் என்றே குறிப்பிடுகின்றார்கள்.

பர்மாவை கட்டியெழுப் பிடும் முயற்சியில் பர்மாவின் மன்னர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது அவர்களின் படைகளில் இரண்டு கப்பல்களை இணைத்தவர்களும் முஸ்லிம்கள் தாம் அந்தக் கப்பல்களின் பெயர்கள், Ahlakaree& Salamath அஹ்லாகரி மற்றும் சலாமத். இவை இரண்டும் அரபு இஸ்லாமியப் பெயர்கள். சா, நேமின் கி என்ற மன்னர்,முகலாய மன்னர் ஷ ஆலத்திற்கு பரிசில்களை அனுப்பி வைத்தார். அதில் இந்த இஸ்லாமியப் பெயருடைய கப்பலே அனுப்பப்பட்டது. அதற்கு தலைவனாகச் சென்றவர் ஓர் அரபுதான் இஃது 17 ஆம்நூற்றாண்டில் நடந்தது.

முஸ்லிம்களின் நேர்மை நிர்வாகத்திறமை இவற்றைப் போற்றி அவர்களுக்கு நிருவாகத்தில் அனேகப் பொறுப்புகளை வழங்கி இருந்தார்கள். 1846-1853க்கு இடைப்பட்டக் காலத்தில், பேகன் மின், என்ற மன்னன் பர்மாவின் அப்போதைய தலைநகர், அம்மாராபுராவின் ஆளுநராக பர்மாவைச் சார்ந்த ஒரு முஸ்லிம்,"**யூ. ஷவியாஹ்**"(u. shweoh) ஐதான்நியமித்திருந்தார். மன்னருடைய தனிமைச் செயலாளராக u.Paing, யு. பெங்க் என்ற பர்மாவைச் சார்ந்தமுஸ்லிம்தான் நியமிக்கப் பட்டிருந்தார்.

இந்த மன்னருடைய தனிமைச் செயலர் தன்னுடைய பங்காக, 'தாவங்தாமான்' என்ற ஆற்றைக் கடக்க இரண்டு மைல்கள் நீளமுள்ள ஒரு பாலத்தைக் கட்டி பர்மாவுக்கு அர்ப்பணித்தார்.1850களில் இந்த ஏரியைச் சூழ்ந்த பகுதிகளின் கவர்னராக பர்கான் என்பவர்தான் இருந்தார். அவர் ஒரு முஸ்லிம். பர்மாவின் மன்னர்கள் தங்களுடைய அந்தரங்க செயலாளர்களாகவும், நம்பிக்கைக்குரியவர் களாகவும் முஸ்லிம்களையே வைத்திருந்தார்கள்.

அரசவை ஆலோசகர்கள் மெய்க்காப்பாளர் கள் தகவல் தொடர்புகளைப் பரமாரிப்பவர்கள். மொழிபெயர்ப்பாளர்கள் அரசவைக்கு வரும் வெளிநாட்டு தூதர்கள், விருந்தினர்கள் இவர்களின் பாதுகாப்பு, பராமரிப்பு, நல்லுறவு அனைத்தும் முஸ்லிம்களின் கண்காணிப்பின் கீழ்தான் விடப்பட்டிருந்தன. இந்தப் பணிகளையெல்லாம் செய்யும் முஸ்லிம்கள் 20,000 முஸ்லிம் குடும்பங்கள் அரசவைக்கு பக்கத்தில் 'INNER CIRCLE' உள்வட்டாரத்தில் வாழ்ந்தன. 1781-1819க்கும் இடைப்பட்டக் காலத்தில், மன்னர் பாடாவாப் பாயா

(Badawapayah!) பல்வேறு அரசாணை களைப் பிறப்பித்தார்.

இவற்றின் வழி முஸ்லிம்களின் குடியுரிமையை உறுதி செய்தார். Royal decrees to recognize MuslimCitizenship. அன்றைய நாள்களில் 20,000 குடும்பங்களின் பராமரிப்பு என்பது எளிதான விவகாரமல்ல என்பதை எல்லோரும் புரிந்திட இயலும். இந்தக் குடும்பங்களுக்கிடையே, எழும் வழக்குகளை இஸ்லாமிய ஷரீஅத் இன்அடிப்படையில் தீர்த்து வைத்திட ஒரு தலைமை நீதிபதியை மன்னர் நியமித்து அவருடைய தேவைகளையும் நிறைவேற்றி வந்தார். அந்த தலைமை நீதியின் பெயர்ஆபித்ஷா ஹிஷைனி. இவருடைய அடக்கம், நேர்மை எளிய வாழ்க்கை இவை பர்மீய மக்களிடையே இஸ்லாம் இன்னும் வேகமாகப் பரவிட வகை செய்தன. இவருடைய அடக்கஸ்தலம், அம்மாராபுராவில் இன்றளவு மிருக்கின்றது. மன்னருடைய படையிலுள்ள கப்பல்படைக்கு முஸ்லிம்கள்தாம் “எல்லாம்” என்றிருந்ததைப் போல் குதிரைப் படைக்கும் முஸ்லிம்கள் தாம், என்றொரு நிலை இருந்தது.

குதிரைப்படையிலிருந்த 70பிரிவுகளுக்கும் அப்துல் கரீம்கான், வாலிகான் ஆகியோர்தான் பொறுப்பு. அப்போது சைனாவின் பர்மீய தூதராக நஸ்ரத்கான் சாகிப் என்பவர்தான் நியமிக்கப்பட்டிருந்தார்.1824இல் ஆங்கிலேயர் களோடு நடந்தபோரில் 100 குதிரைப்படைகளை வழிநடத்திச் சென்ற கான் சாஹில் போ என்பவரின் வீரதீரங்களே வெற்றியைப் பெற்றுத் தந்தன. இதனால் போர்களத்திலிருந்து திரும்பிய கான் சாஹில் போ அவர்களை வரவேற்று சிறப்பு சிவப்புக் கம்பளங்கள் தருவிக்கப்பட்டு வழியெங்கும் விரிக்கப்பட்டன. இதனை வெல்வெட்கர்ப்பட்டா விரிப்பு என்றும் சில வரலாற்று ஆசியர்கள் குறிப்பிடுகின்றார்கள். முஸ்லிம் குடும்பங்கள்வாழ்ந்த பகுதிகளில், பல்வேறு கட்டடக் கலைகளில் வடிவமைக்கப் பட்ட மஸ்ஜித்கள் பள்ளிவாசல்கள் கட்டப் பட்டிருந்தன .

இவற்றுள் ஜீஸி மஸ்ஜித் என்பது மிகவும் கீர்த்தி வாய்ந்தது. இஃதுமான்டோலே டே நகரில் 27 ஆம் தெருவில் இருக்கின்றது. இந்த மண்டோலே நகரை கட்டியெழுப்புவதில் 400 முஸ்லிம்கள் முழுமையாக உழைத்தார்கள். பர்மீய மொழியில் அரபுமொழியின் கலப்பும் சேவையும் ஏராளம். இப்போது கலவரப் பகுதியாகிய அன்காரா மாநிலம் ரோக்னிங்கா முஸ்லிம்கள், அரபுக்கள், மங்கோலியர்கள், இந்தியர்கள், சைனர்கள் என பல்வேறு நாட்டவர்களால் ஆனவர்கள். இவர்கள் மிகப்பெரியதொரு முஸ்லிம் சமுதாயமாக வாழ்ந்து வளர்ந்தவர்கள்.

இப்படி பர்மாவின் வரலாறு பாரம்பரியம், பண்பாடு, மொழி கலாச்சாரம், வளம், வாழ்வு அனைத்திலும் இரண்டற கலந்தவர்கள் முஸ்லிம்கள். அவர்களை அந்நியர்கள் என அந்நியமாக்குவதும், அவமானப்படுத்துவதும், அழிப்பதும் அடாத செயல்கள் அவர்கள் அந்தநாட்டுப் பூர்வீகக் குடிகள். அவர்களை அங்கேயே பாதுகாப்பாக வாழ வைப்பது பர்மா மக்கள் தங்களுக்குத் தாங்களே செய்திட வேண்டிய நன்றிக் கடன். இடையில் வந்த பௌத்தம் அதற்குக் குறுக்கே நின்றிடுமேயானால், அதனை அப்புறப்படுத்து வதே சிறந்தது.

## பர்மாவின் இடைக்கால வரலாறு!

ஆங்கிலேயர்கள் இந்திய பெருநாட்டில் காலெடுத்து வைத்த நாள் முதலே பர்மாவையும் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வந்திட முயற்சிகளை மேற்கொண்டார்கள்.1885-இல் பர்மாவை தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்திடவும் செய்தார்கள். 1930இல் பர்மா மக்கள் இந்தியர்கள் வெளியேறிட வேண்டும் என்றொரு பெரும்கலவரத்தை நிகழ்த்தினார்கள். அதிலும் முஸ்லிம்களே அதிகமாகக் குறி வைத்துத் தாக்கப்பட்டார்கள்.

1937 இல் பர்மா பர்மா மக்களுக்கே என்ற இயக்கம், ஆங்கில இந்திய ஆதிக்கத்திருந்து வெளியேறியது.1937 இல் பர்மா பிரிந்தது என்று மக்கள்கூறினாலும், ஆங்கிலேயர்கள் (Separately Administered domain) தனியாக நிருவகிக்கப் பட்ட தன்னாட்சி பகுதி என அழைத்தார் கள். அப்போது நடந்த கலவரத்திலும் முஸ்லிம்கள் தாம் குறிவைக்கப்பட்டார்கள்

.பின்னர் பிரிட்டனின் அதாவது ஆங்கில ஆதிக்கத்திலிருந்து முற்றாக விடுபடும் போராட்டத்தை நடத்தினார்கள்.

1948 இல் ஆங்கில ஆதிக்கத்திருந்து முற்றாக விடுபட்டார்கள் அதாவது இந்தியா விடுதலையடைந்து ஒரு வருடத்திற்குப் பின் விடுதலை அடைந்தார்கள். ஆனால் அது ஒருவித சர்வாதிகார ஆட்சியாக அமைந்தது. அந்த ஆட்சியை அகற்றிட சர்வாதிகார எதிர்ப்பு அணியொன்றை தொடங்கினார்கள் பர்மா மக்கள். அதில் முஸ்லிம்கள் BMC என்ற பெயரில் பர்மா முஸ்லிம் கவுன்சில் என்ற பெயரில் தங்களை ஒருங்கிணைத்து அதில் கலந்து கொண்டார்கள். இஃது தளபதி "நூ" என்பவரின் தலைமையின் கீழ் நடந்தது .சர்வாதிகாரத்திற் கெதிரான இந்தப் போர் 1962 இல் பெரும் வெற்றியைப் பெற்றது.

ஆனால் அந்தப்போரில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட முஸ்லிம்கள் வஞ்சிக்கப் பட்டார்கள். ஜெனரல் நூ புத்தமதமே பர்மாவின் மதம் என அறிவித்தார். BMC என்ற பர்மா முஸ்லிம் கவுன்சிலை கலைக்கப்பணித்தார். இராணுவ ஆட்சியைப் பிரகடனப்படுத்தினார். முஸ்லிம்களை தொடர்ந்து கொடுமைப் படுத்தினார். 1982 இல் நடைபெற்ற தேர்தல் களின் பின்னணியில் தென்சியாங் ஆட்சியாளர் President ஆனார்.

இராணுவத்தின் பிரதிநிதியாகத்தான் அவரைப் பார்க்கவேண்டும். ஏனெனில் பர்மாவிலிருக்கும் ஜனநாயகத்தை (Military packed democracy) இராணுவம் பின்னணி யிலுள்ள ஜனநாயகம் என்றே அனைவரும் அழைக்கின்றார்கள். அவர் முஸ்லிம்களின் பிரச்சனைக்கு, அவர்களை நாடு கடத்துவதே ஒரே வழி என மே 28 கலவரத்திற்கு முன்னும்- கலவரத்தின் போதும் அறிவித்தார்.

அந்த முஸ்லிம்கள், உலக முஸ்லிம்களின் பாதுகாப்பின் கீழ் வந்திட வேண்டும், என்ற துருக்கியின் என்ரோகனின் அறிவிப்புபொருள் பொதிந்தது.



## பர்மாவின் தற்போதைய நிலை

காலங்காலமாக இந்த நாட்டில் வாழ்ந்து வருகிறீர்கள். பிறந்தது இந்த ஊரில் தான், வளர்ந்ததும் இந்த ஊரில் தான். திடீரென்று ஒரு நாள் உங்களிடம் அரசாங்கம் நீயோ அல்லது உன் மூதாதையரோ 190 வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் தான் வாழ்ந்து வந்தீர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும், இல்லையெனில் அகதி முகாம்களுக்கு சென்று இந்த நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்று கூறினால் உங்கள் நிலை எப்படி இருக்கும். இரத்தம் கொதிக்கும் அல்லவா? அதை விட கொடுமை இதை எவ்வாறு நிரூபிப்பது?

அரசாங்கம் கேட்பது எட்டு தலைமுறைக்கான தகவல் அல்லவா? இவ்வாறு யாரிடம் கேட்டாலும் இருக்காதே? ஆனால் அரசாங்கம் ஏன் நம்மிடம் மட்டும் இவ்வாறு கேட்கிறது? என்ற எண்ணம் உங்களை அழுத்தும் அல்லவா?

அதுதான் பர்மா ரோஹிங்யா முஸ்லிம்கள் விஷயத்தில் நடந்தது. பர்மாவின் சொந்த மக்களான ரோஹிங்யா முஸ்லிம்களை அந்த நாடு குடிமக்களாக அங்கீகரிக்க வேண்டும் என்றால் 1823ஆம் ஆண்டிற்கு முன்னதாக அவர்கள் இந்த நாட்டில் வாழ்ந்து வந்ததை அவர்கள் நிரூபிக்க வேண்டும். இல்லையெனில் நாட்டை விட்டு வெளியேறிவிட வேண்டும்.

இது முழுக்க முழுக்க நம்மை நாட்டை விட்டு துரத்துவதற்காக செய்யப்படும் முயற்சி, இது அநியாயம், இது அக்கிரமம், இதை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

நமக்கு மட்டும் ஏன் இவ்வாறு நடக்கிறது. ஏன் யாருமே இதைப்பற்றி கேள்வி கேட்க முன்வரவில்லை?

இது பர்மா முஸ்லிம்களின் மனதில் உள்ள கேள்வி.

## முஸ்லிம்களை ஏன் கொலை செய்கிறோம்?

இதற்கான பதிலை அஹிம்சா மூர்த்திகள் பர்மாவின் புத்த பிட்சுகள் தந்துள்ளனர். அஷின் விராத்து என்ற புத்த மடாதிபதி (969 என்ற இயக்கத்தை சேர்ந்தவன்) இவ்வாறு கூறுகிறான், "புத்த மதம் அஹிம்சையை தான் போதிக்கிறது அதற்காக வெறி நாய்களுடனும் விஷ பாம்புகளுடனும் (முஸ்லிம்களுடன்) உறங்க முடியாது."

"இவர்கள் அதிகமாக பிள்ளைகளை பெற்றுக்கொள்கின்றனர். புத்த மதத்தை சேர்ந்தவர்களை மதம் மாற்றுகின்றனர். இதனால் இவர்களின் (முஸ்லிம்களின்) மக்கள் தொகை பெருகி விட்டது. இவர்கள் கூடிய விரைவில் பெரும்பான்மையாகிவிடுவார்கள். இதனை தடுத்தேயாக வேண்டும்."

"முஸ்லிம்கள் நம் நாட்டை, நம் மக்களை, புத்த மதத்தை அழித்து விட்டனர்"

"அது மட்டுமல்ல முஸ்லிம்கள் பெரும்பான்மை புத்தமதத்தை சேர்ந்தவர்களுக் கெதிராக ஜிஹாத் செய்வார்கள்"

இந்த கோஷத்தோடு தான் பர்மா முஸ்லிம்கள் கொல்லப்படுகின்றனர். இந்த கோஷம் பர்மாவில் மட்டும் தான் கேட்கிறதா? இந்த கோஷங்களை நாம் ஏற்கனவே கேட்டது போல் உள்ளதா? ஆம் இதே கோஷங்கள் தான் இந்தியாவிலும் கேட்கிறது. இதே கோஷங்கள் குஜராத்திலும் கேட்டது. ஏன் இதே கோஷங்கள் உலகெங்கம் கேட்கின்றது. இதன் பின்னணியில் இருப்பது என்ன? கலாச்சாரங்களின் மோதல் (Clash of Civilisation) என்ற புத்தகத்தில் தெளிவாகவே சாமுவேல் ஹன்டிங்டன் என்பவன் இதனை கூறுகிறான்.

"உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் அதிகமான பிள்ளைகளை பெற்றுக் கொள்கி றார்கள். இதனால் 2025ம் ஆண்டில் உலகில் முஸ்லிம்களே அதிகமான மக்கள் தொகையில் இருப்பார்கள். மேலும் 2025ல் உலகின் சக்தியாக முஸ்லிம் இளைஞர்களே இருப்பார்கள். எனவே, இது தடுக்கப்பட்டாக வேண்டும், முஸ்லிம்கள் எண்ணிக்கை குறிப்பாக முஸ்லிம் குழந்தைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டாக வேண்டும்."

எனவே, தான் உலகெங்கும் முஸ்லிம்கள் தாக்கப்படுகிறார்கள். குழந்தைகள் கருவறுக்கப் படுகின்றன. பாலஸ்தீனத்திலும் இதுவே தான் செயல்படுத்தப்படுகின்றது.

எனவே, இதற்கு யூதம், கிறிஸ்தவம், இந்து, பௌத்தம் என்ற பாகுபாடு எல்லாம் கிடையாது. முஸ்லிம்களை கருவறுக்கும் பணியில் இவர்கள் அனைவரும் தங்களை இணைத்து கொள்வார்கள். முஸ்லிம்களை எதிர்க்கும் பணியில் இவர்கள் ஓரணியில் நிற்பார்கள் என்பதே உண்மை.

இவர்களுக்கான அஜென்டா கொடுக்கப் பட்டாகிவிட்டது. இங்கே மோடி, அங்கே அஷின் விராத்து என ஆட்கள் வேண்டுமானால் மாறலாம். ஆனால் காட்சிகள் மாறாது. இஸ்ரேல், இந்தியா, இலங்கை, பர்மா என நாடுகள் மாறலாம். ஆனால் படுகொலை ஒரே விதமாகவே நடத்தப்படும்.

அஷின் விராத்து தன்னை பர்மாவை காக்க வந்த ஆபத்பாந்தவனாக காட்டிக் கொள்ள முதலில் முயன்ற போது மக்கள் இவனை ஒதுக்கவே செய்தார்கள். ஆனால் நாளடைவில் இவன் செய்து வந்த தொடர் விஷ பிரச்சாரம் மக்கள் மனதில் நஞ்சை ஏற்படுத்தவே செய்தது.

"ஜேம்ஸ்பான்டை உங்களுக்கு தெரியுமா? அவன் தகவல்களை பெறுவதற்காக பெண்ணு டன் படுக்கையை பகிர்ந்து கொள்வான். இதனை அவன் செய்வது விரும்பி அல்ல, தன்

நாட்டிற்காக, அது போலவே தான் நானும் இந்த நாட்டிற்காக முஸ்லிம்களை படுகொலை செய்கிறேன்" என்று தன் செய்கைகளுக்கு இவன் தரும் வியாக்யானம் கேவலமானது.

அஷின் விராத்துவிற்கு 25 வருட கடுங்காவல் தண்டனை முதலில் கொடுக்கப் பட்டது. ஆனால் பின்னர் 10 ஆண்டுகளுக்குள் இவன் பர்மிய அரசால் விடுதலை செய்யப்பட்டான். பர்மாவின் ஆட்சியாளர் தான் சேன்-இன் செல்லப்பிள்ளையாகி விட்டான்.

பர்மாவில் 50 ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வந்த இராணுவ ஆட்சி 2011ல் முடிவுற்றது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசோ முஸ்லிம்கள் விஷயத்தில் மிக மோசமாகவே நடந்து கொண்டது. பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வரும் மக்களை குடிமக்கள் இல்லை என்றது. அவர்களை நாட்டை விட்டு வெளியேறும் படி கூறியது. அவர்களுக்கெதிராக அரசு பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துவிட்டது.

தற்போது அரசு முஸ்லிம்களுக்கு உள்ளாக நடத்தப்படும் திருமணத்திற்கு அரசின் அனுமதி பெற வேண்டும், மதம் மாற அரசின் அனுமதி பெற வேண்டும் எனபது போன்ற சட்டங்களை முஸ்லிம்களுக்கெதிராக கொண்டு வர திட்டமிட்டுள்ளது. மேலும் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கான ஒரே அரசாங்க அடையாளமான வெள்ளை அட்டையை சரண் செய்ய உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் பர்மாவில் முஸ்லிம்கள் (ரோஹிங்யா) நடமாடுவதே இயலாத நிலை உருவாகி விட்டது. இவர்கள் படிக்க முடியாது, வியாபாரம் செய்ய முடியாது. மொத்தத்தில் ஒன்றுமே செய்ய இயலாது.

http://www.latimes.com/world/asia/la-fg-ff-myanmar-monk-20150524-story.html#page=1

## கடலில் முஸ்லிம்களின் நிலை

"இன்னும் 8000க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கடலில் தத்தளித்து கொண்டிருக் கிறார்கள். இவர்கள் உயிருடன் இருக்கிறார்களா அல்லது கடலுக்கு இறையாகிவிட்டார்களா என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்" என்று கூறுகிறார் ஜெப்ரி லாபோவிட்ஸ் என்ற புலம்பெயர்பவர்களுக்கான பன்னாட்டு நிறுவனத்தின் தாய்லாந்து தலைவர்.

ஆனால் நிலைமை இன்னும் மோசம். எண்ணிக்கை 50000க்கும் மேலாக இருக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஒரு படகில் சிலர் உயிர் தப்பி வந்தனர், ஆனால் கிட்டத்தட்ட 100 பேருக்கு மேல் பசியாலும் மற்ற காரணங்களாலும் உயிரிழந் தனர்.

"இந்தோனேஷிய கடற்படை தண்ணீர் தந்தது, நூடுல்ஸ் தந்தது ஆனால் உதவவில்லை, மலேசிய கடற்படை தண்ணீர் தந்தது, நூடுல்ஸ் தந்தது ஆனால் உதவவில்லை, கடைசியில் 5 நாட்களுக்கு பிறகு அசே கடல் அருகில் இந்தோனேஷியாவில் மூழ்கடிக்கப்பட்டது. மீன்பிடி படகுகளே சில உயிர் பிழைத்தவர்களை காப்பாற்றியது" என்று கூறுகிறார் கோயெஸ் என்பவர்.

http://www.latimes.com/world/asia/la-fg-ff-indonesia-boat-people-20150520 story.html#page=2

பல மாதங்களாக தண்ணீர் இன்றி உணவு இன்றி உயிர் பிழைத்து வருபவர்களையும் ஆளைகடத்தும் குற்றவாளிகள் கடத்தி சென்று சித்ரவதை செய்து கொத்தடிமைகளாக பயன்படுத்துகின்றனர். இவ்வாறு சித்ரவதை செய்து கொலை செய்யப்பட்ட 30 உடல்கள் தாய்லாந்தின் காட்டுப்பகுதியில் கண்டெடுக்கப் பட்டுள்ளது. இவை அனைத்தும் பர்மா முஸ்லிம்களின் உடல்களே. இதற்கு தாய்லாந்து நாட்டின் இராணுவ லெட்டினன்ட் ஜெனரல் மானாஸ் கோங்பேன் என்பவனும் உடந்தை. உலகெங்கும் பலத்த சர்ச்சை கிளம்பிய பிறகு தற்போது அவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

http://www.bangkokpost.com/news/general/579131/arrest-of-senior-army-adviser-sought-for-human-trafficking

http://www.cbc.ca/news/world/thailand-military-officer-arrested-in-human-trafficking-probe-1.3098072



## ரோஹிங்யா முஸ்லிம் பெண்கள் விபச்சார அடிமைகளாக

இவ்வாறு தாய்லாந்திற்கு தப்பி வரும் பெண்கள் அங்குள்ள பதாங் பெசார் என்ற இடத்தில் விபச்சார அடிமைகளாக விற்கப் படுகிறார்கள்.

நூர் கைதா அப்துஸ் சுகூர் என்ற 24 வயது பெண் தனது குழந்தையுடன் இந்த முகாமில் அடைபட்டிருந்தார்.

"இங்கு கைது செய்து வைக்கப்பட்டி ருக்கும் முகாமில் இருந்து தினமும் 2 அல்லது 3 இளம் வயதுடைய அழகான ரோஹிங்யா பெண்கள் ரகசியமான இடத்திற்கு இழுத்து செல்லப்படுவர்."

"அவர்கள் கூட்டமாக கற்பழிக்கப் படுவார்கள், இவ்வாறான பெண்கள் முகாமிலேயே கருவுற்றனர்."

"அவர்கள் முகாமின் காவலர்களால் இழுத்து செல்லப்பட்ட பிறகு இரண்டு மூன்று நாட்களுக்கு அவர்களை பார்க்க முடியாது. பின்னர் அவர்கள் திரும்பி வரும் போது அவர்களிடம் என்ன நடந்தது என நான் கேட்க மாட்டேன். ஆனால் என்ன நடந்திருக்கும் என்பது எனக்கு தெரியும்"

"சில பெண்கள் 6 மாதம் வரை அடைத்து வைக்கப்பட்டு கற்பழிக்கப்பட்டார்கள்"

"பல இரவுகள் அவர்களுடைய அலறல்களையும் அழுகுரல்களையும் எங்களால் கேட்க முடிந்தது. ஏனெனில் அவர்களை கற்பழித்த இடம் எங்களுக்கு அருகாமையில் தான் இருந்தது. ஆனால் இரவின் இருட்டின் காரணமாக எதையும் எங்களால் பார்க்க முடியாது"

இவ்வாறு கூறி கதறுகிறார் நூர் கைதா. இவர் பின்னர் அங்கிருந்து தப்பி மலேசியா வந்து விட்டார்.

http://www.rohingyablogger.com/2015/06/women-in-camp-used-as-sex-slaves-by.html#sthash.9aKHGVnk.dpuf

## ஆங் சு கிஇன் மன்னிக்க முடியாத மௌனம்

ஆம் இப்படித்தான் தலைப்பிட்டு கட்டுரை வெளியிட்டது அல்ஜசீரா. அவர் அமைதிக்கான நோபல் பரிசை வென்றது உண்மை தான். ஆனால் கசப்பான உண்மை என்னவென்றால் அவர் இப்போது அரசியல் வாதியாகி விட்டார். 2012ல் நோபல் பரிசு பெற்ற போது அவர் கூறியது "நமது லட்சியம் என்னவென்றால் பலவந்தமான இடம் பெயர்தலை, நம்பிக்கையின்மையை, வீடுகள் இல்லாமல் இருப்பதை தவிர்த்ததொரு உலகை உருவாக்குவது"

ஆனால் அம்மையாரிடம் தற்போது கோரப்படுவது என்னவெனில் தயவு செய்து இத்தகையதொரு உலகு வேண்டாம் குறைந்த பட்சம் ரோஹிங்யாவையாவது உருவாக்க முன்வாருங்கள்.

http://www.aljazeera.com/indepth/opinion/2015/05/aung-san-suu-kyi-inexcusable-silence-150524085430576.html

ஆனால் அம்மையார் இதனை செய்ய முன்வரவில்லை மாற்றாக அவரின் அறைகூவல் வேறு விதமாக உள்ளது.

"முஸ்லிம்களுக்கு எதிராக மட்டும் கலவரம் நடைபெற வில்லை. புத்த மதத்தினரும் தாக்கப்பட்டுள்ளனர். நான் ஒத்திசைவு (சமாதானம்) செய்ய விரும்புவதால் எந்த பக்கமும் பேச முடியாது"

இந்த நொண்டி சமாதானத் திற்காகவா உங்களுக்கு சமாதானத் திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

## மியான்மர் முஸ்லிம் இராணுவம்

இப்படி ஒன்று செயல்படுவதாக புதிய கதை ஒன்றை பரப்பி வருகிறது பர்மிய அரசு. ஆனால் இதனை அந்நாட்டு வழக்கறிஞர்கள் மற்றும் பாதுகாப்பு நிபுணர்கள் மறுத்துள்ளனர். அவ்வாறு ஒன்று கிடையவே கிடையாது என்று கூறியுள்ளனர்.

https://firstlook.org/theintercept/2015/05/25/myanmar-muslims-arrested-joining-terror-group-doesnt-exist/

ஆனால் அப்படி ஒன்று இருந்திருந்தால் முஸ்லிம்கள் இவ்வாறு கொல்லப்பட்டிருக்கப் பட மாட்டார்கள்.

## யாங்கி லீ

பர்மாவில் Rohingya இஸ்லாம் மக்கள் சந்திக்கும் பிரச்சனைகளையும், அவர்களின் மோசமான நிலைமையும் நேரில் சென்று எடுத்துரைக்க,ரிப்போர்ட் தயாரிக்க உலக நாட்டாமை UN ஆல் அனுப்பப் பட்டவர் Yanghee Lee (சவுத் கொரிய நாட்டை சேர்ந்த பெண்) அவர் தந்துள்ள அறிக்கை பின் வருமாறு

- இஸ்லாமியர்களுக்கு எதிராக அரசு உருவாக்கி இருக்கும் சட்டங்கள் தவறு
- 2011 இராணுவ ஆட்சி முடிந்து பின்பு தற்பொழுது மியான்மர் குடியரசு நாடு என்ற அங்கீகாரத்தில் இருந்து நழுவி பின்னோக்கி செல்கிறது
- Rohingya இஸ்லாம் (சுமார் 100,000) மக்களின் நிலைமை அகதிகள் முகாமில் மிகவும் கவலைக்கிடமாக உள்ளது (disease and malnutrition)
- Rohingya Muslims ஒடுக்கப்பட்டு துன்பங்களை அனுபவிக்கிறார்கள், ஆகையால் மியான்மர் அவர்களுக்கு குடியுரிமை வழங்கவேண்டும் என்ற தீர்மானம் கடந்த வாரம் UN-இல் நிறைவேற்றப்பட்டது

அவருக்கு எதிராக ஒரு புத்த துறவி இப்படி பேசுகிறார்

***" Ms Lee she should have sex with Muslim Rohingya minority if she liked them so much" ."Don't assume you are a respectable person, just because you have a position in the UN," he said. "In our country, you are just a whore."***

"லீ, அவள் ரோஹிங்யா மைனாரிட்டி முஸ்லிம்களை அதிகம் விரும்புவாளேயானால் அவர்களோடு படுக்கையை பகிர்ந்து கொள்ளட்டும். நீ UN-இல் பதவியில் இருப்ப தனால் மதிக்கப்படும் நபர் என்று எண்ணிக் கொள்ளாதே, எங்கள் நாட்டை பொறுத்தவரை நீ ஒரு விபச்சாரி"

இவ்வாறு சொல்பவன் அஷின் விராத்து என்ற புத்த துறவி தான். இவன் தூண்டி விட்ட கலவரங்களின் மாதிரிகள் சில...

- ஒரு புத்த வேலைபெண்ணை இரு இஸ்லாமியர்கள் கற்பழித்துவிட்டனர் என்ற குற்றசாட்டின் பேரில், ஒரு கும்பல் அந்த இருவரையும் கொன்றுவிட்டது. பெரிய கலவரம், போலீஸ் வேடிக்கை. பின் அந்த பெண்ணே அது நாடகம், காசை கொடுத்து நடிக்க சொன்னார்கள், சொல்ல சொன்னதை சொன்னேன் என்று விசாரணையில் ஒப்புக்கொண்டார்
- ஒரு நகைக்கடை வாய் தகராறை மையமாக வைத்து ஒரு கலவரம் 40 பேர் கொலை
- ஒரு இஸ்லாமிய சிறுமி சைக்கிளில் ஒரு புத்த பிக்குவை இடித்ததால் ,70 வீடுகள் , மசூதிகள் எரிப்பு ,ஒரு கொலை ,பலர் காயம் , etc

## துருக்கியின் உதவி

இத்தகைய சூழ்நிலையில் உதவ முடிந்தது இஸ்லாமிய தலைமை மட்டுமே. கிலாஃபத் மட்டுமே அதற்கான தீர்வாக இருக்க முடியும். துருக்கியிடம் அதற்கான பண்புகள் தெரியவே செய்கின்றன.

மே 19 2015 அன்று நிருபர்களிடம் பேசிய துருக்கியின் பிரதமர் அஹ்மத் தவுதோக்லு இவ்வாறு கூறினார், "துருக்கி மிளிவி (International Organization for Migration ) உடன் இணைந்து கடலில் ரோஹிங்யா முஸ்லிம்களை அடைய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இதற்காக துருக்கியின் ஆயுத படைகள் அந்த பகுதியில் கடலில் பயணம் மேற்கொண்டுள்ளது."

source: hurriyetdailynews

http://burmatimes.net/turkish-military-ship-joins-efforts-to-reach-rohingya-muslims/

"மேலும் ரோஹிங்யா முஸ்லிம்கள் தாய்லாந்தை அடையவும் மலேசியாவை அடையவும் இந்தப்படை உதவி செய்யும்" எனவும் துருக்கி பிரதமர் கூறியுள்ளார்.

இதற்கிடையே பர்மாவில் தற்போதுள்ள மனித உரிமைகள் மீறலைப்பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சில் இரகசிய பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தலைவர் ஜைத் ராத் அல் ஹூசைன் அவர்கள் பர்மாவில் உள்ள தற்போதைய நிலைமையை குறித்த மிகத் தெளிவான உரையொன்றை தந்தார்கள்.

ஆனால் பர்மாவின் மீது நடவடிக்கை மேற்கொள்ள இரண்டு நிரந்தர உறுப்பு நாடுகள் தயக்கம் காட்டுவதாக தெரிகிறது.

http://burmatimes.net/un-security-council-gets-first-ever-briefing-on-rohingya/

## ஒஸ்லோ மாநாடு

இதற்கிடையே நார்வே நாட்டின் ஒஸ்லோவில் உள்ள நார்வேஜியன் நோபல் இன்ஸ்டிடியூடில் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. இதில் பர்மாவை சேர்ந்த புத்த பிட்சுகள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், மனித



உரிமை ஆர்வலர்கள், பன்னாட்டு ராஜதந்திரிகள் போன்றோர் கலந்து கொண்டனர்.

இதில் முத்தாய்ப்பாக 7 நோபல் பரிசு பெற்றவர்கள் (மைரெட் மேகுயர்- வடக்கு ஐயர்லாந்து, ஜோடி வில்லியம்ஸ் - அமெரிக்கா, தவக்கோல் கர்மன்-யெமன், ஷிரின் இபாதி-ஈரான், லெய்மாஹ் போவீ-லைபீரியா, அடாடல்ஃபோ எஸ்குவெல்- அர்ஜென்டினா) (Mairead Maguire from Northern Ireland, Jody Williams from the USA, Tawakkol Karman from Yeman, Shirin Ibadi from Iran, Leymah Gbowee from Liberia, and Adolfo Pérez Esquivel from Argentina ) பர்மா ரோஹிங்யா படுகொலைகளை அரசு நடத்தும் இனப்படுகொலைகள் என வர்ணித்தனர்.

## ஒஸ்லோ மாநாட்டில் மஹாதீர் முஹம்மது அவர்களின் வீர உரை

மியான்மரில் தற்போது நடந்து வரும் நிகழ்வுகள் என்னை மிகவும் வருத்தத்திற் குள்ளாக்கி உள்ளன. மியான்மரை தென்கிழக் காசிய நாடுகளின் கூட்டமைப்பில் உறுப் பினராக்க நான் மிக முக்கிய கருவியாக இருந்தேன். மியான்மர் கண்டிப்பாக பூகோளரீதியாக தென்கிழக்கு ஆசியாவின் ஒரு பகுதியே அதை தவிர்ப்பது தென்கிழக்கு ஆசியாவின் ஒற்றுமை என்பதற்கு முரணாகி விடும். ஆனால் தற்போது நாம் மியான்மரை நடத்தியது போல் மியான்மர் தன் சொந்த மக்களை நடத்தவில்லை.

நாம் மியான்மரை அகற்றவேண்டும் என்று விரும்பவில்லை. ஆனால் மியான்மர் ரோஹிங்யா முஸ்லிம்களை அகற்ற நடவடிக்கை களை மேற்கொண்டு வருகின்றது. அவர்கள் 800



வருடங்களாக அங்கே வசித்து வருகின்றார்கள். அவர்கள் பர்மாவின் குடிமக்களாக இதற்கு முன் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள். மியான்மர் பர்மாவின் தொடர்ச்சி என்பதால் அவர்களும் ரோஹிங்யா முஸ்லிம்களை குடிமக்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தற்போது மலேசியாவில் பல நாட்டை சேர்ந்தவர்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் கடந்த 200 ஆண்டுகளில் இங்கே வந்து ஐக்கிய மானவர்கள். அவர்கள் மலேசிய குடிமக்களாக ஆக உரிமை உள்ளதாக நாங்கள் முடிவு செய்தோம். அரசியல் உரிமை வழங்க, பயிற்சி அளிக்க, தொழில் தொடங்க உரிமை உள்ளதாக கருதினோம். அவர்களை எங்கள் சொந்த குடிமக்களாக ஏற்றுக்கொண்டோம்.

மலேசியா போல் அல்லாமல் மியான்மர் ரோஹிங்யாவினரை குடிமக்களாக ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. இது அரசு செய்துள்ள மிகப்பெரிய அநியாயம். எங்கள் போராட்டங் களினால் பயன்பெற்ற அதன் மூலம் மியான்மர் அரசினால் விடுதலை செய்யப்பட்டவர்கள் (உதாரணம் ஆங் சான் சு கி) இன்னும் சில மியான்மர் மக்கள் ரோஹிங்யாவினருக்காக குரல் கொடுப்பார்கள் என நான் எதிர்பார்த்தேன். ஏனெனில் ரோஹிங்யாவினரும் அந்நாட்டு குடிமக்கள் தானே.

புத்த மதத்தினர் மேலாதிக்கம் செலுத்தும் இந்த நாட்டின் குடிமக்களாகிய ரோஹிங்யா முஸ்லிம்களுக்காக சர்வதேச சமூகம் தன் கவனத்தை செலுத்தும் என நம்புகிறேன். அவர்கள் உயிர் வாழ வேண்டும். எந்த வித அழுத்தங்களுக்கும் உட்படுத்தப்படாமல் மியான்மரில் வாழ அனுமதிக்கப்படவேண்டும்.

மீண்டும் நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன், மலேசியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் நாடு என்றாலும் மற்ற மத நம்பிக்கை கொண்டவர்களையும் கருத்தில் கொண்டே வாழ்கிறோம். நாங்கள் அவர்களுக்கு மலேசியாவின் குடிமக்களாக ஆகும் உரிமையை கொடுத்துள்ளோம். சர்வதேச சமூகம் ரோஹிங்யா முஸ்லிம்கள் விஷயத்தில் கவனம் செலுத்தும் என நம்புகிறேன். அவர்கள் மற்ற நாடுகளுக்கு கடலில் தப்பிச் செல்ல பலவந்தப்படுத்தப்படுகிறார்கள். அவ்வாறு செல்லும் போது நல்ல கப்பல் கிடைக்காத காரணத்தினால் கடலில் மூழ்கி இறக்கிறார்கள்.

இது ஒரு மனித இனத்தின் சோகம். துரதிருஷ்டவசமான இந்த மியான்மர் மக்களுக்கு சர்வதேச சமூகம் உதவும் என நான் நம்புகிறேன். ஒரு நாடு என்றே சொல்ல முடியாத அளவிற்கு இவர்களிடம் பாரபட்சம் காட்டியுள்ளது ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டதாக சொல்லும் இந்த நாடு. நன்றி.

:http://www.rohingyablogger.com/2015/05/the-speech-of-dr-mahathir-mohamad at.html#sthash.54uidZU9.dpuf

## மியான்மரின் நிகழ்வுகள் வரிசைக்கிரமமாக

May 28, 2012: அரகான் மாநிலத்தில் ராம்றி என்ற நகரத்தில் ஒரு பர்மிய பெண் மூன்று முஸ்லிம்களால் கற்பழித்து கொலை செய்யப் பட்டதாக கூறி, மூன்று பேரை போலிஸ் கைது



செய்கிறது. ஒருவர் போலிஸ் நிலையத்தில் தற்கொலை செய்து கொண்டதாக போலிஸ் சொல்கிறது. மற்றைய இரண்டு பேருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது

June 3: முஸ்லிம்கள் பயணம் செய்து கொண்டிருந்த ஒரு பஸ் வண்டியொன்றை நூற்றுக்கணக்கான பர்மிய பெரும்பான்மை பௌத்தர்கள் தொங்கோப் என்ற இடத்தில் இருக்கும் போலிஸ் சோதனை சாவடியில் வைத்து தடுத்து நிறுத்தி பயணிகளை தாக்க ஆரம்பிக்கிறார்கள். இதில் பத்து முஸ்லிம்கள் கொல்லப்படுகிறார்கள். பக்கத்தில் நின்ற போலீசாரோ அல்லது இராணுவமோ இந்த கலவரத்தை தடுத்து நிறுத்தாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள்.

June 3: ஜூன் 3ஆம் திகதி 10முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதை விசாரிப்பதற்காக 16பேர் கொண்ட விசாரணை குழு ஒன்றை பிரதி உள்விவகார அமைச்சர் தலைமையில் பர்மிய அரசு அமைக்கின்றது. ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்பாக விசாரணை அறிக்கையை ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கவேண்டும் என்று கட்டளை இடப்படுகிறது. எனினும் இந்த விசாரணை அறிக்கை மூன்று வருடம் கழித்தும் இன்னும் வெளியாகவில்லை

June 8: ரோஹிங்கியா முஸ்லிம்கள் செறிந்து வாழும் மங்டொவ் நகரத்தில் இருக்கும் பௌத்தர்களின் சில வீடுகள் தீக்கிரையாக்கப் படுகிறது. பழியை ரோஹிங்கியாக்கள் மீது போடுகிறது அரசும் பத்திரிகைகளும்.

June 8-12: சித்வே என்ற நகரத்தில் பௌத்தர்களுக்கும் ரோஹிங்கியக்களுக்கும் இடையில் பெரும் கலவரம் மூளுகின்றது. பாதுகாப்பு பிரிவினர் இந்த கலவரத்தை தடுத்து நிறுத்தாமல் முஸ்லிம்களுக்கு எதிரான கலகக் காரர்களின் பக்கம் நிற்கின்றனர். ஒரு இலட்சத்திற்கும் அதிகமான ரோஹிங்கியா மக்கள் சித்வே நகரத்தில் இருந்து இடம்பெயர்கின்றனர். பல நூற்றுக்கணக் கானவர்கள் கொல்லப்படுகின்றனர். முஸ்லிம் களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்படுகின்றது. போலீசார் பல நூற்றுக்கணக்கான ரோஹிங்கியா முஸ்லிம்களை வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று கைது செய்கின்றனர்

June 10: பர்மிய ஜனாதிபதி தியான் சயான் அரக்கேன் மாநிலத்தில் அவசரகால சட்டத்தை பிரகடனபடுத்துகிறார். பொலிசாருக்கு மேல திகமாக இராணுவம் வரவழைக்கப்பட்டு பல நகரங்களில் காலவரையற்ற ஊரடனங்கு சட்டம் பிறப்பிக்கப்படுகிறது.

June-October: இந்த இடைப்பட்ட காலங்களில் பெரும்பான்மை பௌத்த அரசியல் தலைவர்களும் பிக்குகளும் முஸ்லிம்களுடன் எந்த ஒரு வர்த்தக தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம், முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களை புறக்கணியுங்கள் என்று என்று தமது மக்கள் மத்தியில் பகிரங்கமாகவே பிரச்சாரப்படுத்துகின்றனர். சிலர் சில இடங் களில் இருந்து முஸ்லிம்களை இனவழிப்பு செய்யவேண்டும் என்றும் கூக்குரல் இடுகின்றனர்.

July 6: பர்மிய அரஸு கைது செய்திருக்கும் 10 ரோஹிங்கியாக்களை சார்ந்த ஐநா மற்றும் தொண்டு நிறுவன பணியாளர்களை விடுவிக்கும் படி பர்மிய அசாங்கத்தை ஐநா கேட்டுக் கொள்கிறது. இதில் ஐந்து பேர் விடுதலை செய்யப்படுகின்றனர். இன்னும் ஐந்து தொடர்ந்தும் தடுப்பு காவலில் இருக்கின்றனர்.
July 12: அரக்கேன் மாநிலத்தில் தொடரும் பிரச்சினைகளுக்கு "ஒரேயொரு தீர்வாக" அங்கு இருக்கும் "சட்டவிரோதமான" ரோஹிங்கியாக் களை ஒன்றில் நாடு கடத்தவேண்டும் அல்லது ஐநா அகதிகள் நிறுவமான ஹிழிபிசிஸி இன் மேற்பார்வையில் பங்களாதேஷில் அகதி முகாம்கள் அமைத்து அங்கு குடியேற்ற

வேண்டும் என்று பர்மிய ஜனாதிபதி அதிரடியாக அறிவிக்கிறார். இந்த முன்மொழிவை ஹிழிபிசிஸி மறுக்கிறது.

August 10- அன்றைய துருக்கிய வெளிவிவகார அமைச்சர் அஹ்மத் தாவுதொக்லு அவர்களும் அன்றைய பிரதமரான எர்டோகானின் மனைவியும் பர்மாவுக்கு விஜயம் செய்து ரோஹின்கியா மக்களை நேரில் சந்தித்து தமது உதவிகளை கையளிக்கின்றனர்.

Aug 12 - சவூதி அரசு 50 மில்லியன் டாலர் உதவிகளை பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்காக கொடுக்கின்றது.

Aug 15- ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கான உதவிகளை எப்படி மேற்கொள்வது என்பது தொடர்பாக முஸ்லிம் ஒத்துழைப்பு நாடுகளின் மக்காவில் ஒன்று கூடி தீர்மானம் மேற்கொள்கின்றனர். இதில் தமது பிரதிநிதிகளை உடனடியாக பர்மாவுக்கு அனுப்புவது, ரோஹிங்யாக்களுக்கு முழு பிரஜா உரிமை வழங்குவதற்கு ஐநாவின் உதவியை நாடுவது என்பதுடன் பர்மாவில் தமது அமைப்பின் கிளை ஒன்றை அமைக்கவேண்டும் என்று தீர்மானம் மேற்கொள்ளப்படுகிறது.

துருக்கியர்களின் விஜயம், சவூதியின் நன்கொடை, ளிமிசி இன் தீர்மானத்தால் ஆத்திரம் அடைந்த பௌத்தர்கள் ,இதற்கு பழிவாங்கும் நோக்கில் மேலும் பல ரோஹிங்கியா கிராமங்களை தீ வைத்து அழிக்கின்றனர்.

August 17: சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்ததும் அரக்கேன் மாநிலத்தில் இடம்பெற்ற கலவரத்தை கண்டறிவதற்காக 27பேர் கொண்ட விசாரணை ஆணைக்குழுவை பர்மிய ஜனாதிபதி நியமிக்கிறார்.

October 21-24: ஒரே நேரத்தில் வெவ்வேறு பகுதிகளில் இருக்கும் ஒன்பது நகரங்களில் ஒரே நேரத்தில் மீண்டும் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை வெடிக்கிறது. தற்போது ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கு மேலதிகமாக கமன் இனத்தை சார்ந்த முஸ்லிம்களுக்கும் எதிராகவும் வன்முறை நிகழுகிறது. கிட்டத்தட்ட 40,000 முஸ்லிம்கள்



இடம்பெயருகிறார்கள். இந்த முறையும் பொலிசாரும் பாதுகாப்பு படையும் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றதற்கு மேலதிகமாக அவர்களும் வன்முறையில் பங்குபற்றுகிறார்கள். ஆகக்குறைந்தது 28 குழந்தைகள் உட்பட நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள்.

October 25: “எதிர்பாராத வகையில் வன்முறை நிகழ்ந்தது” என்று அரசு கதைவிடுகிறது. மொத்தம் 12பேர் மாத்திரம் கொல்லப்பட்டதாக அரசு அறிவிக்கிறது. சில தனியார்களும் நிறுவனங்களும் வன்முறையின் பின்னால் இருப்பதாகவும் நடக்கும் சிறு சம்பவங்களையும் ஊதிப்பெரிதாக்குவதாகவும் அரசு அவர்கள் மீது குற்றம் சாட்டுகின்றது.

November 15: முஸ்லிம் ஒத்துழைப்பு நாடுகளின் (ளிமிசி) பிரதிநிதிகள் பர்மாவை வந்தடை கின்றார்கள். இவர்களை அங்குள்ள பௌத்த பிக்குகளின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் ரோஹிங்கியா மக்களை சந்திகின்றார்கள். பர்மிய அரசிடம் தமது அலுவலகம் ஒன்றை திறப்பதற்கான முயற்சியை மேற்கொண்டு தற்காலிக அனுமதியை பெறுகின்றார்கள். மேலும் ரோஹிங்கியாக்களுக்கு பிரஜா உரிமை வழங்கி அவர்களை உரிய முறையில் மீள்குடியேற்றம் செய்யவேண்டும் என்று வலியுறுத்திறார்கள்.

November 16: பர்மிய ஜனாதிபதி பாராளு மன்றத்தில் உரையாற்றும் போது “உணர்ச்சி வசப்படுவதே எல்லாத்திற்கும் காரணம் “என்றும் “ தனது அரசு ரோஹிங்கியாக்களை உரிய முறை



யில் மீள் குடியேற்றம் செய்வதற்கும், அவர் களுக்கு பிரஜா உரிமை வழங்குவதற்கும், வேலை பத்திரம், பிறப்பு சான்றிதழ், நாட்டின் எல்லா பகுதிகளுக்கும் செல்வதற்கான அனுமதி போன்றவற்றை பெற்றுக்கொடுப்பதற்கு தயாராகி வருவதாக" அறிவிக்கிறார்.

November 19: பராக் ஒபாமா பர்மா வந்தடைகிறார். ரங்கூன் பல்கலைகழத்தில் இடம்பெற்ற சொற்பொழிவில் பர்மாவில் இடம்பெறும் வன்முறைகள் 'அபாயகர கட்டத்தை அடைந்து இருப்பதாக" குறிப்பிடுகிறார்.

November 2012-April 2013: அங்காங்கு தொடர்ந்தும் ரோஹிங்கியாக்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் தொடருகின்றது. இதில் பெரும்பாலும் பாதுகாப்பு பிரிவினரே சம்பந்தப்படுகின்றனர். ரோஹிங்கியா பெண் களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும் இடம்பெறுகின்றன. பல இலட்சக்கான ரோஹிங்கியா முஸ்லிம்கள் தொடர்ந்தும் இடைத்தங்கல் முகாம்களில் பெரும் சிரமத்திற்கு மத்தியிலும் எந்தவொரு வாழ்வாதார உதவிகள் இன்றியும் வாழ்கின்றார்கள். இந்த நிலையில் இவர்கள் படகுகள் மூலம் நாட்டைவிட்டு தப்பி பங்காளாதேஷ், தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளுக்கு செல்லும் சம்பவங்கள் தொடரு கின்றன. இதில் பல ஆயிரக்கான மக்கள் மலேசியாவை வந்தடைந்த அதே நேரம் பல நூற்றுக்கணக்கான மக்கள் கடலில் இறந்து போவதும் தொடர்ந்து நடக்கும் அவலமாகும்.

30 Dec 2014 - ஐநா பொதுச்சபையில் ரோஹிங்கியாக்களுக்கு முழு பிராஜா உரிமை வழங்கவேண்டும் என்று தீர்மானம் கொண்டு வரப்பட்டு பெரும்பான்மை வாக்குகளுடன் அந்த தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

20 Jan 2015 - இந்த தீர்மானத்தின் பிறகு சீற்றமடைந்த சர்ச்சைக்குரிய பிக்குவான அசின் விராது பர்மா தொடர்பான ஐநாவுக்கான விஷேட பிரதிநிதி யங்கி லீ அம்மையாரை "விபச்சாரி "என்று பகிரங்கரமாக திட்டுகிறார். மீண்டும் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக கலவரங்கள் நடத்தப்படுகின்றன.

March- April 2015- ரோஹிங்கியா அகதிகள் கடலில் தத்தளிப்பதும் பக்கத்தில் இருக்கும் எந்தவொரு நாடும் அவர்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதும் மீண்டும் ரோஹிங்கியா சார்பான அலையை உலகில் தோற்றுவித்து இருக்கிறது.

Source : http://madawalanews.com/70825

**ஆக்கம் : ரஹ்மத்துல்லாஹ்**

# இந்து ராஷ்டிராவும் அம்பேத்கரும்!

டாக்டர். அம்பேத்கர் அவர்கள், தாழ்ந்தப்பட்ட மக்களுக்காகவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் தன் வாழ்நாளை அர்ப்பணித்த வர்கள்.

அவருடைய கடுமையான உழைப்பு, தியாகம் இவற்றால் தீண்டதகாத மக்கள், மனித உரிமைகளுள் பலவற்றைப் பெற்றார்கள். எனினும் சமூக அந்தஸ்து இன்றளவும் எட்டாத கனியாகவே இருந்து வருகின்றது.

இதற்குள், அண்ணல் அம்பேத்கர் அவர்களை, பாசிஸ்ட்டுகள் தங்கள் தலை வராக்கிட தங்களால், இயன்றதை யெல்லாம் செய்து வருகின்றார்கள்.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள், தாங்கள் வாழ்ந்த நாட்களில் பெரும் பகுதியை, இந்து மதத்தை விமர்சனம் செய்வதிலும், அதை எதிர்த்து எழுதுவதிலும் செலவிட்டார் கள். இந்துத்துவா என்ற பாசிசத்தை அவர் விமர்சித் ததைப் போல் வேறு யாரும் விமர்சித்திருக்க முடியாது.

ஒவ்வொரு தாழ்த்தப்பட்டவனும், தீண்டத்தகாதவனும் முதலில் செய்திட வேண்டிய வேலை இந்து மதத்தை விட்டு வெளியேறுவது என்பது தான்.

இப்படி இந்து மதத்தை விட்டு வெளி யேறுவதன் முதல் செயல்முறை விளக்கமாக, அவர் இந்து மதத்தை விட்டு வெளியேறினார். பௌத்தத்தை ஏற்றுக் கொண்டார்.

இத்தகைய அம்பேத்கரை இந்துத் துவாவைப் பேசிடும் பாசிஸ்ட்டுகள் அவரையும் தங்களவர் எனக் கூறிடத் தலைப் பட்டு விட்டனர்.



**கன்னட மாநிலத்தில்,**

நமது அண்டை மாநிலமான கன்னட மாநிலத்தின் தான். இதற்கான முயற்சியை முதன் முதலில் தொடங்கினார்கள், நமது பாசிஸ்ட்டுகள்.

அங்கே சுவரெல்லாம், ஒரு பக்கம் அம்பேத்கரின் படம், இன்னொரு பக்கம் கல்விக்கடவுள் என அவர்கள் நம்பும் சரஸ்வதியின் படம், எனத் தங்கள் பம்மாத்து வேலைகளைத் தொடங்கினார்கள்.

இதனால் விழித்துக்கொண்ட கன்னட மக்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள், இதனை எதிர்த்தார்கள். பல இலக்கியங்களையும் படைத்தார்கள். அவற்றை மக்கள் ஏற்றார்கள். இந்துத்துவ வாதிகள் தோற்றார்கள். அவற்றுள் மிகவும் பிரபல்யமான இலக்கியத்தை முனைவர்.எம்.ஜவரய்யாஹ் என்பவர் படைத்தார். அதன் பெயர் அம்பேத்கரும் இந்து ராஷ்டிராவும்.

இந்த நூலில் ஒரு முக்கிய வரலாற்றுக் காலக் கட்டத்தைக் குறிப்பிடுகின்றார். அதில் இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பொறுத்தவரை அவர்கள் "பெஷாவா" என்ற மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் ஓர் அறிவிக்கப்படாத இந்து ராஷ்டிரா ஆட்சியில்தான் இருந்தார்கள் என்கின்றார். ஏனெனில் "பெஷாவா" மன்னர்கள் "மனு" என்பவரால் எழுதப்பட்ட சட்டங்களைத் தான் செயல்படுத்திக் கொண்டிருந்தார்கள். அந்த பெஷாவா மன்னர்களின் ஆட்சியில் இந்து ராஷ்டிராவின் ஆட்சிதான் நடந்து கொண்டிருந்தது. காரணம் மனுஷ்மிருதி அதன் அனைத்து வடிவங்களிலும் செயல் படுத்தப்பட்டது. இதனை, முனைவர் ஜவரய்யாஹ், இப்படிக் குறிப்பிடுகின்றார்.

இந்தியாவின் விடுதலைப்போரில் சில பெயர்கள் கீர்த்தியோடும், கித்தாப்போடும் பேசப்படுகின்றது. அவை பெஷாவா பாஜிராவ், பூனாவின் மன்னன், ஏ.னு. சவார்கர், நாதுராம், கோட்சே, கோல்வால்கர், இவர்கள் அனைவரும் பிராமிணர்கள். இவர்கள்தாம் இந்து ராஷ்டிரா, ஹிந்துத்துவா என்பன வற்றைக் கண்டுபிடித்தவர்கள். இவர்களின் திட்டமெல்லாம், இந்து ராஷ்டிராவை உருவாக்குவதுதான்.

நாம் ஏற்கெனவே சுட்டிக் காட்டியதைப் போல் இந்து ராஷ்டிரா என்ற கொள்கையைத் தோற்றுவித்தவர் வி.டி.சவார்கர்தான். இவர் பெஷாவா மன்னர்களின் ஆட்சியை வானளாவப் புகழ்ந்தவர். ஏனெனில், பெஷாவா மன்னர்களின் காலத்தில் தான் மனுஸ்மிருதி என்ற மனுவின் சட்டங்கள் முழு அளவில் இந்தியாவில் செயல்படுத்தப்பட்டன. இதனால் வி.டி. சவார்கர் பெஷாவா மன்னர்களை வானளாவப் புகழ்ந்தார். அவர்களை பற்றி எழுதிடும் போது, உணர்வும், உற்சாகமும் பொங்க, தம் எழுத்துக்களை ஓட்டினார்.

**இந்த பெஷாவாக்களின் ஆட்சியில்**

1. தலீத் மக்கள் தீண்டத்தகாத மக்கள், தெருக்களிலே நடந்திடக் கூடாது என்ற சட்டம் இருந்தது. அவர்கள் தெருக் களிலே நடந்துவந்தால், அவர்களின் நிழல் பிராமணர்களின் மேல் வீழ்ந்து விடும், அல்லது பட்டுவிடும், அதனால் அந்தத் திருமேனிகள் தீட்டுப்பட்டு விடும். அதனால் தாழ்த்தப்பட்ட மக்கள், தெருக்களிலேயே நடக்கக்கூடாது என்ற சட்டம் கண்டிப்புடன் செயல்படுத்தப் பட்டது.

2. தாழ்த்தப்பட்ட மக்கள், தங்கள் கைகளில் அல்லது தங்கள் கழுத்தில் ஒரு கறுப்புக் கயிற்றைக் கட்டிக் கொள்ள வேண்டும், இதனால் ஏனைய மக்கள் தவறுதலாக அல்லது நினைவுக் குறைவாக, தாழ்த்தப்பட்ட மக்களை அதாவது தலீத்களைத் தொட்டுவிடும் அவலம் தவிர்க்கப் படும்.

3. பூனாவில் அதாவது பெஷாவா, மன்னர்களின் தலைநகரில், தலீத் மக்கள் நடந்தால் அவர்கள் தங்க ளுக்குப் பின்னால் ஒரு நூலை ஒரு குறிப்பிட்ட தூரம் வரை விட்டு இழுத்துக்கொண்டு வரவேண்டும். இதனால் பின்னால் வருபவர்கள் கொஞ்சம் இடைவெளி விட்டு வருவார்கள். இதனால், தலீத்கள் நடக்கும் போது கிளம்பும் தூசு அவர்களைத் தொடாது. அதனால் பின்னால் வருபவர்கள் மீது தீட்டுப் பட்டுவிடாது.

4. தலீத்கள் பெஷாவா மன்னர்களின் தலைநகர், பூனாவில் நடந்துசெல்லும் போது, கழுத்தில் ஒரு பானையை - ஜாடியைக் கட்டுக்கொண்டு வர வேண்டும். அவர்கள், எச்சில் வந்தால் அந்த ஜாடிக்குள் - பானைக் குள் துப்பிட வேண்டும். அவர்கள் தரையில் துப்பி னால் பின்னால் வரும் உயர் ஜாதிக்காரர் ஒரு வேளை அதைமிதித்திடலாம். இதனால் அதே உயர் ஜாதிகாரர் அவரை அறியாமலே தீட்டுப்பட்டு விடுவார். இந்த நிலையை தடுத்திட தவிர்த்திட தலீத்கள் தங்கள் கழுத்தில் ஒரு பானையைக் கட்டிக்கொண்டு நடக்க வேண்டும்.

இப்படி தலீத்கள் தொடர்ந்து அவமானப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த போதுதான் பெஷாவா மன்னருக்கும், நம் நாட்டை அடிமைப்படுத்திக் கொண்டிருந்த ஆங்கிலேயர்களுக்கும் போர் தொடங்கியது.

ஆங்கிலேயர்களின் அணியில் பல தலீத்படை வீரர்கள் இருந்தார்கள். ஓர் படைப்பிரிவுக்குப் மஹார் படைகள் 'Mahar Rggiment' என்று பெயர். இதன் தளபதி, சுடமன் என்ற மஹார்.

மராட்டிய மாநிலத்தில் தலீத்களுக்கு மறு பெயர், மஹார்,

பெஷாவா மன்னர்களுக்கு எதிரான போரில், மஹார் பிரிவு படைகளைத் தான் ஆங்கிலேயர்கள் அதிகமாக நம்பி இருந் தார்கள்.

இதில் ஆங்கிலேயர்கள் ஒரு போர்த் தந்திரத்தைக் கையாண்டார்கள்.

மஹார்கள் - என்ற தலீத்கள் பெஷாவா மன்னர்களால் நீண்ட நெடுங்காலமாக, அத்தனை அநீதிகளுக்கும் ஆளாக்கப்பட்டு வந்தார்கள்.

அநீதிகளுக்கு மட்டுமல்ல அவமானங் களுக்கும் ஆளாக்கப்பட்டார்கள். அதனால் மஹார்கள் இயல்பாகவே பெஷாவா ஆட்சியின் மீது வெறுப்புக் கொண்டி ருந்தார்கள். அதனால் மஹார் படைப்பிரிவை ஏவி பெஷாவா மன்னர்களிடமிருந்து பூனாவில் ஆட்சியை பறிப்பது எனத் திட்டம் தீட்டி இருந்தனர்.

ஆனால், ஆங்கிலப் படைகளின் மஹார் படைப் பிரிவின் தலைவர் "சுடமான்' ஆங்கிலேயர்களின் நாடு பிடிக்கும் பேராசைக்கு நாமும் துணைபோவதா என எண்ணலாயினார். ஆகவே மஹார் படைப் பிரிவைச் சார்ந்த ஏனைய படை களைக் கலந்தாலோசித்தார்.

ஆலோசனையின் முடிவில் நாம் ஆங்கிலேயர்களின் அணியில் நின்று பெஷாவா மன்னருக்கு எதிராகப் போராடிட வேண்டாம் என்றும், இதனை பெஷாவா மன்னரிடம் இரகசியமாச் சென்று சொல்லிட வேண்டும் என்றும். பெஷாவா மன்னர் அனுமதித்தால் பெஷாவா மன்னரின் படையில் சேர்ந்து, ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடிட வேண்டும், என்றும், முடிவு செய்தார்கள்.

ஆனால் இந்த உதவிகளுக்குக் கை மாறாக தலீத் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள அவமானமான சட்டங்களையும் நடை முறைகளையும் அகற்றிட வேண்டும். அவர்களையும் ஏனைய மனிதர்களைப்போல் வாழ்ந்திட அனுமதித்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். இதற்கு பெஷாவா மன்னர் ஒத்துக்கொண்டால், நாம் ஆங்கிலேயப் படைகளைப் புறந்தள்ளிவிட்டு பெஷாவா மன்னர்களின் ஆட்சியை நிலைபடுத்திட வேண்டும் என்றும் மஹார் படைப்பிரிவின் ஆலோசனைக் குழுவில் முடிவெடுத்தார்கள்.

மஹார் படைப்பிரிவின் இறுதிக்கட்ட ஆலோசனையாக, இந்த முடிவுகளை பெஷாவா மன்னனிடம் யார் சென்று சொல்வது என்ற கேள்வி எழுந்தது.

இதனை ஆங்கிலேய மஹார் படைப்பிரிவின் தலைவர் 'சுடமான்' தான் செய்ய வேண்டும் என்று முடிவானது.

‘சுடமான்’ எப்படி பெஷாவா மன்னரை சந்திப்பது? என்ற வினாவுக்கு, ஆங்கிலேயர்களிடமிருந்து இரகசிய தகவலைக் கொண்டு வரும். ஓர் உயர்மட்ட அதிகாரி என்ற பெயரில் பெஷாவா மன்னரைச் சந்தித்திட வேண்டும், என்ற பதில் தந்தார்கள்.

இந்த அடிப்படையில், பெஷாவா மன்னரை பூனாவில் அவருடைய வாராவாடா மாளிகையில் சந்தித்திட புறப்பட்டார்.

எதிரிப்படைகளான ஆங்கிலேய படைகளிடமிருந்து ஒரு செய்தி என்றவுடன் பூனாவை ஆண்ட பெஷாவா மன்னன் Bajirao Peshawaw! பாஜிராவ் பெஷாவாரின் மந்திரி சபையை அவசர, அவசரமாகக் கூட்டினார். சுடமானை அழைத்தார்கள், செய்தியைச் சொல்ல சுடமானும், மந்திரி அவையில் ஆஜரானார். ஆனால் அந்த நிமிடம் வரை சுடமான் ஓர் மஹார் அதாவது தலீத் என்பது அவர்களுக்குத் தெரியாது.

சுடமான் தான் கொண்டு வந்த செய்தியை விரிவாகச் சொன்னார். செய்தியைச் செவிமடுத்தப் பின்னர், பாஜிராவ் பெஷாவா நீ யார்? எனக் கேட்டார்.

நான்தான் ஆங்கில படைகளின் மஹார் பிரிவின் தலைவன் என்றார் சுடமான்.

நீ ஒரு ....... அசிங்கமான சொற்றொடரை உதித்து நீ எப்படி? எங்கள் மாளிகைக்குள் வரலாம். மொத்த மாளிகையும் தீட்டுப்பட்டுவிட்டது உடனேயே ஓடிவிடு. என விரட்டி அடித்தார் பெஷாவா மன்னர் பாஜிராவ்.

தலைதப்பியது பெரிது என அங்கிருந்து வேகமாக வெளிவந்து, தன்னுடைய இடத்தை வந்தடைந்தார் சுடமான்.

சுடமான் புகுந்த மாளிகையை கங்கை தீர்த்தம் கொண்டு சுத்தப்படுத்தினார்கள், பெஷாவா மன்னரின் ஆட்கள்.

சுடமான் மீண்டும் மஹார் பிரிவு படைகளைச் சந்தித்துச் செய்தியைச் சொன்னார்.

நடந்ததை விளக்கமாக விவரித்தார். பெஷாவா மன்னர்களின் ஜாதி வெறி அனைவரிடமும் ஓர் அசாதாரண வருத்தத்தை வரவைத்தது. வேதனையால் தலை சாய்ந்தனர்.

வேறுவழி இன்றி ஆங்கிலப் படைகளின் அணியிலே நின்று போர் செய்தார்கள்.

இமைப்பொழுதில் பெஷாவா மன்னரின் படை, மஹார் படையினரிடம் மண்டியிட ஆங்கிலேயர்களுக்கே அறுதி வெற்றி என்றானது.

பெஷாவா மன்னன் ஆங்கிலேயருக்கு அடிமை சாசனம் எழுதி தந்தான், அதாவது தன் பூனா சாம்ராஜ்யத்தை ஆங்கிலேயர் களுக்கு எழுதித் தந்து தான், அதற்காக ஆண்டொன்றுக்கு எட்டு லட்சம். ரூபாயை தங்கள் வாழ்வாதாரப் பணமாகப் பெற்றான் மன்னன் பாஜிராவ் பெஷாவா!

இது நடந்தது 1817 டிசம்பரில்

## வாழ்வாதாரப் பணத்தை ஆங்கிலேயர்களுக்காக...?

பெஷாவா மன்னர் தான் சரணடைந்ததால் கிடைத்தப் பணத்தின் ஒரு பெரும் பகுதியை - ஆங்கிலேயர் களின் ஆட்சி இங்கே நிலைபெறுவதற் காகவே செலவு செய்தார்.

பெஷாவா மன்னர் பாஜிராவ் பெஷாவா ஆங்கிலேயர்கள் சீக்கியர் களை - அழிக்கப் புறப்பட்ட போது, தனக்குக் கிடைத்த எட்டு லட்சம் ரூபாயிலிருந்து, பணத்தைத் தந்து ஊக்கப்படுத்தினார்.

அதேபோல், ஆங்கிலேயர்கள், ஆப் கானிஸ்தானை ஆக்கிரமிக்கச் சென்றபோது, தங்கள் சேமிப்பிலிருந்து பணத்தைத் தந்ததோடு, தங்களுடைய பாதுகாப்பிற்காகத் தந்திருந்த படைகளையும் அனுப்பினார்கள்.

இப்படி தங்கள் ஆட்சி வீழ்ந்தபின் ஏனைய ஆட்சிகளை - அதாவது ஏனைய

இந்திய மன்னர்களின் ஆட்சியை வீழ்த்து வதற்காகப் பாடுபட்டார்கள், பணம் தந்தார்கள் இந்த பெஷாவாக்கள்.

**வி.டி. சவார்கர்:**



இந்துத்துவா இந்து ராஷ்டிரா இவற்றை தன் நச்சு மூளையில் தயாரித்தவர். வி.டி. சவார்கர்.

இவர், பெஷாவா மன்னர்கள் மனு ஸ்மிருதி சட்டங்களைச் செயல்படுத்திய போதே வானளாவப் புகழ்ந்தவர். ஆனால் ஜனவரி 1, 1818 காலைப் பத்து மணிக்கு ஆங்கிலேயர்களிடம் சரணடைந்தபின் பெஷாவா மன்னர் செய்த கீழறுப்பு வேலைகளை கண்டித்தார். 1851 இல் பெஷாவா சாம்ராஜ்யத்தின் கடைசி மன்னர் பாஜிராவ் பெஷாவா ஐஐ இறந்தார். அப்போது வி.டி சவார்கர் அவருக்காகக் கண்ணீர் வடிக்க வேண்டும் என நான் கருதவில்லை என்றார். இந்த அளவுக்கு பெஷாவா மன்னர்கள் நாட்டின் துரோகிகளாக வாழ்ந்தார்கள்.

**(SOURCE: V.D. SAVARKAR - THE WAR OF INDIAN INDEPENDENCE - 1857. PP. 27. 8th Edition 1970)**

**அம்பேத்கர் அவர்கள்:**

டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தாம் பெஷாவா மன்னர்களின், அத்தனை, பித்த லாட்டங்களையும் உலகத்தின் பார்வையின் கீழ் கொண்டுவந்தவர்கள். பெஷாவா மன்னர்கள் காலத்தில் தான் இந்தியாவில் மனுஸ்மிருதி மிகுந்த கண்டிப்புடன், செயல்படுத்தப்பட்டு வந்தது என்பதையும் கண்டுபிடித்து அறிவித்ததும் அவர்தான்.

அந்த அடிப்படையில் பெஷாவா மன்னர்களின் பிற்றை நாள் பித்தலாட்டங் களைப் பட்டியல் போட்டு விட்டுச் சொன்னார், நல்ல காலம் இந்த பெஷாவாக் கள் 1857 வரை வாழ்ந்திட வில்லை. அப்படி வாழ்ந்திருந்தால் அவர்கள், முதல் விடுதலைப் போர் என அழைக்கப்பட்ட சிப்பாய் கலகத்தையும் தங்கள் கீழறுப்பு வேலைகளின் வழி வீழ்த்தி இருப்பார்கள். இந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றாய் நின்று ஆங்கிலேயர் களை எதிர்த்த அந்தப் போரும் பாதியிலேயே பாழ்பட்டுப் போயிருக்கும்.

இவற்றையெல்லாம் விளக்கிக்கூறும் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் 1817-18 களில், ஆங்கிலேயர்களின் படையில் அங்கம் வகித்த மகார் பிரிவினர் எடுத்த முடிவு சரியான முடிவுதான் என வாதிட்டார்.

காரணம் மஹார் படைபிரிவினருக்கு வேறுவழிகள் இருக்கவில்லை. மஹார்களை - மனிதர்களாக மதிக்க விரும்பாத பெஷாவா மன்னர்களை மஹார் படைப் பிரிவினர் ஆதரித்திருக்க இயலாது, காரணம், மஹார் களும் ஏனைய தாழ்த்தப்பட்ட மக்களும், பெஷாவாக்களின் இந்து ராஷ்டிராவில் அனேக அநீதிகளுக்கும் அவமானங்களுக்கும் ஆளானார்கள்.

ஆனால் எதிர்புறத்தில், அவர்களைத் தங்கள் பட்டாளத்துப் படை விரர்களாய் பவனி வரச் செய்த ஆங்கிலேயர்கள், அவர்களுக்கு அனைத்து அங்கீகாரத்தையும் தந்தார்கள் - சுதந்திரமான அவர்களின் வாழ்க்கையில் அவர்கள் எங்கேயும் தலை யிடவில்லை. உண்மையைச் சொன்னால் பல நூற்றாண்டுகளுக்குப்பின் அவர்கள் மனிதர் களாக மதிக்கப்பட்டு அந்த அடிப்படையில் பல பொறுப்புகளும் தரப்பட்டது, ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் தாம், ஆகவே மஹார் படைப்பிரிவின் முடிவை தவறு எனச் சொல்லிட இயலாது. அவர் களுக்கு அன்றைய சூழ்நிலையில் வேறு வழிகள் இருக்கவில்லை.

**(SOURCE: DR. AMBEDKAR, Annihilation of Caste PPA Bheem Patrika Publications, Nokodar Road Jullenda, Punjab)**

## அருண்ஷோரியின் பழிமொழிகள்



அருண்ஷோரி, என்றொரு இந்து ராஷ்டிர எழுத்தாளர். இவர், தொடக்கக் காலத்தில் 'ஹிந்து இசம்' என்றொரு நூலை எழுதினார். அந்த நூலில், இன்று இசத்தைப் பின்பற்றுபவர்கள், வாழ்க்கையின் எந்தப் பகுதியிலும் முன்னேறிட மாட்டார்கள், என எழுதினார்.

அப்போது அது அவருக்கு பெருமளவில் பணத்தைப் பெற்றுத்தந்தது. பின்னர் உயர் ஜாதி மக்களிடமிருந்து வந்த எதிர்ப்பால் துவண்டு போனார்.

பின்னர் பத்திரிகை உலகில் பிரவேசித்தார். பல ஊழல்களை உலகறிய செய்தவர் என்ற பட்டத்தைப் பெற்றார். அத்தோடு அஞ்சா, நெஞ்சன், நீதிக்காகவும், நாட்டுக்காகவும் எதையும் செய்வார் என்ற பாராட்டையும் பெற்றார்.

ஆனால் விரைவிலேயே அவர் தான் சங்கப்பரிவாரக் கும்பலைச் சார்ந்த ஒரு வகுப்புவாதிதான் என்பதை நிரூபித்தார். அருண்ஷோரி தன்னுடைய எழுத்துப்போரை, மராட்டிய மாநிலத்தின் அப்போதைய முதல்வர் அப்துல் ரஹ்மான் அண்டுலேயுடன் தான் தொடர்ந்தார். அவருடைய எழுத்துக்களால் அதிகமான நெருக்கடிகளைச் சந்தித்தவர் இந்த முஸ்லிம்தான். அப்போது இவருடைய எழுத்துக்களையும் அதனை வெளியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் - ஐயும் விரும்பிப்படித்து வியந்தவர்களில் நாமும் உண்டு.

அப்போதெல்லாம் அருண்ஷோரியை ஊழலுக்கு எதிரான ஒரு பெரும் கதாநாயகன் என்றே எல்லோரும் நினைத்தார்கள். வியந்து பாராட்டினார்கள்.

காலப்போக்கில் இவருடைய எழுத்துக்களில் உண்மையைவிட பொய்களே அதிகமாக விரவி வந்தன. ஆதாரமில்லாத செய்திகளையெல்லாம் இருவடைய எழுத்துக்களால் ஆதாரப் பூர்வமானவை என எடுத்துக் கொண்டோர் ஏராளம்! ஏராளம்!

இந்நிலையில்தான் இவர் பாபரி மாஸ்ஜித் பற்றிய கட்டுரை ஒன்றை இந்தியன் எக்ஸ்பிரஸ் இன், முதல் பக்கத்தில் தொடங்கி நடுப்பக்கம் வரை நீட்டி முழங்கினார். கட்டுரைக்கு "பாபரி மஸ்ஜித் எங்கே இருந்தது பாய்?" என்று தலைப்பிட்டிருந்தார்.

கட்டுரையில், முஸ்லிம் சமுதாயத்தின் பெரும் மதிப்பையும், மரியாதையையும், பெற்ற அலிமியான் அவர்களை வம்பிற்கிழுத்திருந்தார்.

அந்தக் கட்டுரையில், அலீமியான் என்ற அபுல் ஹஸன் அலீ நத்வி அவர்களின் தந்தையார் பாபரி மஸ்ஜித் பற்றிய நூல் ஒன்றை எழுதி இருந்தாகவும். அதில் பாபரி மஸ்ஜித் பற்றி குறிப்பிடும்போது அவர் பாபரி மஸ்ஜித் என்றொன்று இருக்கவே இல்லை எனக் குறிப்பிட்டதாகவும், எழுதி இருந்தார்.

இந்தக் கருத்துக்கு சாட்சியாக அலீமியான் அவர்களின் தந்தை எழுதிய நூலில் பல மேற்கோள்களைக் காட்டியிருந்தார். அந்த மேற்கோள்கள் உருதுமொழியில் இருந்தது எனக் கூறி அவற்றிற்கு ஆங்கில மொழியாக்கங்களும் தந்திருந்தார்.

ஆனால் அலீமியான் அவர்களின் தந்தை அப்படியொரு நூலையே எழுதவில்லை. அதன்பின் அருண்ஷோரி உருது மொழியில் இருப்பதாகச் சொன்னதும் பொய். பார்சி மொழியில் எங்கிருந்தோ ஒரு பகுதியை எடுத்து ஆதாரமாகக் காட்டிவிட்டார்.

அருண்ஷோரியின் பொய்யையும், பொய்யான மேற்கோள்களையும், கட்டுரை வெளிவந்த அன்றே அலீமியான் அவர்களின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டது. அலீமியானின் தந்தை அப்போது உயிரோடு இல்லை. அதனால் கட்டுரையில் இடம் பெற்ற பொய்களை உலகுக்குத் தோலுரித்துக்

காட்டிட வேண்டிய பொறுப்பு அலீமியான் மீதே வீழ்ந்தது அதனை தயங்கிடாமல் செய்தார்கள் அலீமியான் அவர்கள்.

கட்டுரை வெளிவந்த அன்று மாலையே, இந்தியன் எக்ஸ்பிரஸ் கட்டுரையாளர்களின் இருப்பிடமாகிய மும்பை நோக்கிப்பறந்தார் கள், தள்ளாத வயதில் அலீமியான் அவர்கள்!

மும்பைச் சென்றதும், கோயங்காவைச் சந்தித்து உண்மையை எடுத்துச் சொன்னார் கள். கோயங்கே கேட்ட கேள்விகளுக்கு அருண்ஷோரியால் பதில் சொல்லிட இயலவில்லை. அன்றே கோயங்கோ அருண் ஷோரியை இந்தியன் எக்ஸ்பிரஸிலிருந்து வெளியேற்றினார். அத்தோடு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டார். கோயாங்கோவின் அந்த அறிக்கையோடு அருண்ஷோரி இன் பத்திரிகை உலக வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்தது.

ஆனால், அருண்ஷோரியின் பொய் களுக்குச் சங்கப் பரிவாரம், குறிப்பாக பாரதீய ஜனதா கட்சி, தகுந்த சன்மானம் கொடுத்தது. வாக்பேயின் அமைச்சரவையில், அருண் ஷோரிக்கு அமைச்சர் பதவி வழங்கப்பெற்றது. அதே வாஜ்பேயின் ஆட்சியில்தான் அரசுக்கு சொந்தமான ஆலைகளையும் பொது நிறுவனங்களையும் தனியாருக்கு விற்பனை செய்யும் பாதகம் நடைபெற்றது.

இந்த அமைச்சகத்தின் - அமைச்சராக அருண்ஷோரி நியமிக்கப்பட்டார். தனியார் நிறுவனங்களிடம் கோடி கோடியாக லஞ்சம் வாங்கிக் கொண்டு, அரசு நிறுவனங்களைத் தாரை வார்த்துத் தந்தார். ஊழலில் சிக்கி விழிபிதுங்கி நின்றபோது தான், ஆட்சிக் காலம், முடிந்தது. அடுத்து வந்த காங்கிரஸ் கட்சி, அருண்ஷோரி பாணியில் கொள்ளை யடிப்பதில் ஆர்வங்காட்டியதே அல்லாமல், அருண்ஷோரி வகையறாக்களுக்கு எதிரான வழக்குகளை நடத்துவதில் ஆர்வங்காட்டிட வில்லை. ஆனால் தப்பித்துக் கொண்டார் அருண்ஷோரி.

2014 ஆம் ஆண்டு தேர்தலில் அருண்ஷோரிக்கு போட்டியிடும் வாய்ப்பே வழங்கப்படவில்லை.

இப்படி லஞ்சத்திற்கு எதிரான ஹீரோ லஞ்சத்தாலேயே அழிந்தார்.

## விஷமம்

ஆனால் அருண்ஷோரி பாசிசத்தின் மீதுள்ள தனது அலாதியானப் பிடிப்பைக் காட்டிட ஒரு நூலை எழுதினார். அதன் பெயர் தவறான கடவுள்களை வழி படுவது “Workshiping false Gods” இது டாக்டர் அம்பேத்கர் அவர்களை மையப் படுத்தி எழுதப்பட்ட நூல். அம்பேத்கரும், தலீத் மக்களும் ஆங்கிலேயர்களுக்குத் தூபம் பாடியவர்கள். அவர்கள் இந்தியாவின் விடுதலைப் போரைப்பற்றிக் கிஞ்சிற்றும் கவலைப்படவில்லை. தங்கள் இனத்தின வாழ்வையே மையமாகக் கொண்டவர்கள் என இழித்துப் பேசிவிட்டு, நாம் முன்னர் குறிப்பிட்ட பெஷாவா மன்னர் விவகாரத்தை வம்பிழுக்கின்றார்.

பெஷாவா மன்னர்களை வீழ்த்தி பூனா பேரரசை ஆங்கிலேயர்களுக்குப் பெற்றுத் தந்தவர்கள் தலீத்கள் எனப் பழித்துரைக் கின்றார். அத்தோடு அந்த மஹார்களின் செயலை அம்பேத்கர் அங்கீகரித்ததால், அவரும் ஆங்கிலேயர்களுக்குத் துணை போனவர் தாம், என்கின்றார்.

அந்த நூல் அதாவது தவறான கடவுள் களை வணங்குவது என்பது, அருண் ஷோரியை வைத்து சங்கப் பரிவாரம், விளை யாடிய விளையாட்டுத்தான். ஆனால் அதற்குப் பதில் 800 வால்மீகிகள் உத்திரப்பிரதேசத்தில் இஸ்லாத்தை ஏற்றார்கள்.

இவர்கள், நீண்ட நாள்களாகவே நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவிருக் கின்றோம் என்பதைப் பறைசாற்றி வந்தார்கள்.

அவர்கள் தங்கள் இல்லங்களிலிருந்து அகற்றப்படாமலிருக்க கண்டெடுத்த வழி இது என அனைவராலும் பரவலாகக் கருதப்படுகின்றது. உத்திரப்பிரதேசத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மற்றொரு பெயர்தான் வால்மீகிகள்.



# காஷ்மீரில் தொடரும் இன ஒழிப்புகள்!

இந்தியாவில் முஸ்லீம்கள் அதிகமாக வாழ்ந்துவரும் மாநிலம் காஷ்மீர். இதனால் நமது அதிகார வர்க்கத்தினர் அதிகமாக குறிவைத்துக் கொலை செய்யும் மாநிலமும், காஷ்மீர்.

கொலைகளைச் செய்யும் போது, முஸ்லிம் இளைஞர்களே அதிகமாகக் குறிவைத்து கொலை செய்யப்படு கின்றார்கள்.

இதைத்தான் 24-5-2015 அன்று கஷ்மீரில் நமது அதிகார வர்க்கத்தினர் நிறைவேற்றி யுள்ளார்கள். அன்று அமைதியாகச் சென்று கொண்டிருந்தது. ஓர் ஊர்வலம். நமது அதிகார வர்க்கத்தினர், கஷ்மீர் தலைவர்களில் ஒருவரும், சமூக ஆர்வலரு மான, மிர்வைஸ் உமர் என்பவரைக் கொலை செய்தார்கள் அன்று, அதன் நினைவாகத்தான் அந்த ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது.

அதில் சென்று கொண்டிருந்த இளைஞர்களையாய் பார்த்து குண்டுமழை களை - கொத்துக்குண்டுகளைப் பொழிந் தார்கள், இராணுவத்தினர். குண்டுகளை முஸ்லிம் இளைஞர்களின் முகங்களை நோக்கியே பொழிந்து கொண்டிருந்தார்கள்.

இதனால் முகம் சிதறிய இளைஞர்கள் பல நூறு பேர். கண் பார்வை இழந்தவர்கள் பலர்.

இப்படிக் குண்டடிபட்ட முஸ்லிம் இளைஞர்களை ஆஸ்பத்திரிகளில் அனுமதித் தால், அவர்கள், ஆஸ்பத்திரிகளிலிருந்து (மருத்துவமனைகளிலிருந்து) தப்பித்து ஓடி விடுகின்றார்கள்.

காரணம் கேட்டால், நாங்கள் குண்டடி பட்டுக்கிடக்கின்றோம் என்று கூட பார்க் காமல் கைது செய்து அழைத்துச் சென்று காணமலாக்கி விடுவார்கள், என்கின்றார்கள். இன்னும் சிலர், கைது செய்து வைத்துக் கொண்டு பெரிய தொகைகளை லஞ்சமாகக் கேட்பார்கள் என்றும் கூறியுள்ளார்கள். செய்தி ஆதாரம் (THE HINDU May 25, 2015)

இவையெல்லாம், காஷ்மீர் பார்வை யாளர்கள் நமக்குத் தவறாமல் சொல்லிக் கொண்டிருக்கும் செய்தியை மட்டுமே உண்மைபடுத்துகின்றது. அது கஷ்மீரை முஸ்லிம்கள் இல்லாத கஷ்மீராக மாற்றிடும் முயற்சிதான்.

இதைத்தான், முந்தைய பாரதீய ஜனதா கட்சி ஆட்சியும், தொடர்ந்து வந்த காங்கிரஸ் ஆட்சியும், அதனை தொடர்ந்து ஆட்சியைப் பிடித்துவிட்ட பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சியும் செய்து வருகின்றது.

## இராணுவ அமைச்சர் மனோசிந் பரிக்கர் தந்த உற்சாகம்

21-5-2015 அன்று மத்திய இராணுவ அமைச்சர், புது டெல்லியில் வைத்து இப்படிக் கூறினார். இஷ்வாளிகளுக்கு எதிரி இஷ்வாளிகள் என்றொரு அறிக்கையை வெளியிட்டிருந்தார். அதில் கஷ்மீரில் ஆயுதந்தாங்கி சிலர் போராடுகின்றார்கள். அவர்களுக்கெதிராக ஆயுதங்தாங்கி போராடிட குடிமக்களிடமும் ஆயுதங்களைத் தரப் போகின்றேன் என்றார்.

**- THE HINDU - 23-5-2015**

இதனால் கஷ்மீரிலுள்ள இராணுவத் தினரும் காவல்துறையினரும் உற்சாகம் பெற்றார்கள். மத்திய இராணுவ அமைச்சரின் அறிக்கை வெளிவந்த மூன்றாம் நாள் ஒரு துப்பாக்கிச் சூட்டை நடத்தி, பல முஸ்லிம் இளைஞர்களின் வாழ்க்கையை பறித்திருக் கின்றார்கள். பலரை முடமாக்கி இருக் கின்றார்கள். பலரை குருடாக்கி இருக் கின்றார்கள். பலரைப் பிணமாக்கி இருக் கின்றார்கள்.

## 2005 ஏப்பிரல் 18இல் 2 பள்ளி மாணவர்கள் கொலை

தன் புத்தகங்களைச் சுமந்துகொண்டு பள்ளிக்கூடம் நோக்கி நடந்து கொண்டிருந் தான் சுஹைல் அஹமத் சாஃபி வயது 16. பத்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந் தான். அவன் நடந்து செல்வதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த காவலன் ஒருவன் தன் கையில் இருந்த துப்பாக்கியில் அவனைச் சுட்டான். அவன் உடம்பிலிருந்து இரத்தம் பீறிட்டுப் பாய, இரத்த வெள்ளத்தில் அவன் துடித்துக்கிடந்தான். பின்னர் உயிர் பிரிந்தது.

அவனை சுட்ட காவலனும் அவனோடு சீருடையில் நின்ற காவல்துறையினரும், அந்தப் பள்ளி மாணவன் துடிப்பதையும் மடிவதையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இந்த பட்டபகல் படுகொலை பட்காம் என்ற காஷ்மீர் மாநிலத்தில் நடந்தது என்றால், அடுத்த கொலையொன்றை அதே நாளில் புல்வாமா மாவட்டத்தில் இன்னொரு காவலர் செய்து காட்டினார். அங்கே இவர்களுடைய துப்பாக்கிக்கு இரையானவர், ஹாலித் முஃப்பர்.

இவர்களைப் பிணமாக்கியப் பின்னர் கஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் முழுகடை அடைப்பு நடைபெற்றது. மக்கள் வழக்கம் போல் ஊர்வலமாக வந்தார்கள். காவல் துறையினர் தந்த அடிகளை வாங்கிக் கொண்டு வீட்டுக்குள் அடைந்து கிடந் தார்கள்.

ஹுரியத் என்ற கஷ்மீர் அமைப்புகளின் கூட்டமைப்பு, இந்தக் கொலைகளைக் கண்டித்துவிட்டு ‘புல்வாமா வாருங்கள்’ என்று கஷ்மீர் மக்களை கொலை நடந்த புல்வாமா மாவட்டத்திற்கு அழைத்தார்கள். ஆனால் காவல்துறையினரும் இராணுவத் தினரும் தந்த நெருக்கடியால், அந்த ஆர்ப் பாட்டம் நடைபெறவில்லை. எல்லா மக்கள் இயக்க தலைவர்களும் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டனர்.

## கஷ்மீர் மக்களின் விரக்தி:

தங்களைப் பிணங்களாகக் குவிக்கும், இராணுவம், அதற்குப் பக்கத் துணையாக நிற்கும், அரசு, அனைத்திற்கும் துணைநிற்கும் நீதித்துறை, இவற்றால் விரக்தியின் விளிம் பிற்கே அந்த மக்கள் சென்றுவிட்டார்கள்.

தங்கள் ஆண்களைத் தினம் தினம் இழந்து கொண்டிருக்கும், அந்த மக்கள்,

மார்க்க அறிஞர்களிடம், தற்கொலை செய்து கொள்ள "பஃத்வா" என்ற மார்க்க தீர்ப்பை கேட்டார்கள். ஆலிம்கள் மார்க்க அறிஞர்கள் - அவர்களுக்குப் பொறுமையையே உபதேசம் செய்தார்கள். மிகக் குறுகியதொரு காலக் கட்டம் மட்டுமே, நிலைக்கக்கூடிய, இந்த உலகில் ஏற்படும், கஷ்டங்களுக்காகவும், நஷ்டங்களுக்காகவும் மறுமை என்ற நிரந்தர வாழ்க்கையை இழந்துவிட வேண்டாம் என்றே உபதேசித்தார்கள்.

அரசு செய்யும் அநியாயங்களுக் கெதிராக அந்த மக்கள் வெகுண்டெழுந்த போதெல்லாம், அவர்கள், பிரிவினைவாதிகள், பாகிஸ்தானின் தூண்டுதலால் போராடு கின்றார்கள் என்றெல்லாம் பழித்து பயங்கர ஆயுதங்களைக் காட்டினார்கள்.

அதெல்லாம் வேண்டாம், நாங்கள் நீங்கள் சொல்லும் ஜனநாயகத்தின் அடிப் படையிலேயே ஆர்ப்பாட்டங்கள் நடத்து கின்றோம், என அந்த மக்கள் வீதிகளிலே அணி திரண்ட போது, அந்த மக்களில் இளைஞர்களையே குறிவைத்துத் துப்பாக்கி யால் சுட்டார்கள்.

இப்படி எந்தப் பக்கம் திரும்பினாலும் மரணம், பிணம். ஏற்கெனவே காரணமற் போனவர்களில் முஸ்லிம் இளைஞர்களின் எண்ணிக்கை லட்சத்தைத் தாண்டுகின்றது. இதனால் பாதி விதவைகள். பல்கிப் பெருகி வருகின்றார்கள் - இது பற்றிய விரிவான அறிக்கை ஒன்றை நாம், நூலாக "கஷ்மீரின் பாதி விதவைகள்" என்ற பெயரில் வெளியிட்டி ருக்கின்றோம். வாசகர்கள் - அதனை வாங்கிப் படியுங்கள், ஏனைய மக்களுக்கும் - குறிப்பாக சகோதர சமுதாயத்தைச் சார்ந்த மக்களுக்கும் படிக்கத் தாருங்கள். இது நீங்கள் அந்த மக்களுக்குச் செய்யும் கடைசி சேவையாக இருக்கும் - அல்லாஹ் நம்மை - மன்னிப் பானாக!

**கஷ்மீரின் ஆட்சி**

கஷ்மீரில் ஜனநாயகம் என்ற பெயரில் தேர்தல்கள் நடக்கின்றன. முன்னர் உமர் அப்துல்லாஹ் என்பவர் முதல்வராக இருந்தார். காங்கிரஸ் கட்சியுடன் கூட்டு வைத்திருந்தார். இதனால் கஷ்மீரில் காங்கிரஸ் கட்சி தனது கொலைபாதகச் செயல்களைத் தாராளமாகச் செயல்படுத்தி இவர் ஆட்சி யிலிருந்த 2010 ஆண்டில் மட்டும் 120 பேர் அரசு தரும் கணக்கின்படி கொலை செய்யப் பட்டார்கள்.

கொலை செய்யப்பட்ட 120 பேரும் முஸ்லிம் இளைஞர்கள். அப்போது மத்தியிலே ஆட்சி செய்து கொண்டிருந்த காங்கிரஸ் அரசு என்ன சொன்னதோ அதையெல்லாம் ஊரெல்லாம் விளம்பிக் கொண்டிருந்வர்தான். இந்த உமர் அப்துல்லாஹ் - இவருக்கு மனைவிகளை மாற்றிக் கொண்டிருக்க வில்லை ஆட்சியில் இருந்த நாட்களில்.

அப்போதெல்லாம் - அதாவது, உமர் அப்துல்லாஹ் ஆட்சிச் செய்து கொண்டிருந்த போதெல்லாம் நடந்த கொலைகளை ஓர் எதிர்க்கட்சி அபாரமாக கண்டித்துக் கொண்டிருந்தது. அதுதான் 'PDP' என்ற மக்கள் ஜனநாயக கட்சி அதன் தலைவர் மஃஹ்பூபா முஃப்த்தி.

மஹ்பூஃபா முஃப்தி எழுப்பிய எதிர்ப்பு குரல் மக்கள், இவரிடம் ஏதேனும் மனிதாபிமானம் - மனித உயிர்களின் மேல் மரியாதை இருக்கும், என எதிர்பார்த்தார்கள். அதனால் உமர் அப்துல்லாஹ்வை தோல்வி யடையச் செய்து மஹ்பூஃபா வுக்கு வாக்களித் தார்கள்.

தேர்தலில் 28 இடங்களை வென்ற முஃப்த்தி முக்தியின் கட்சி பெரிய கட்சி அதிக இடங்களை வென்ற கட்சி, என்ற அளவில் ஆட்சி அமைக்கும் வாய்ப்பைப் பெற்றது.

பாரதீய ஜனதா கட்சி 25 இடங்களை மட்டுமே வென்றது. இதரக் கட்சிகளில் காங்கிரஸ் 10 இடங்களையும், தனிப்பட்ட முறையில் சில முஸ்லிம்கள் 8 இடங்களையும் வென்றார்கள். இந்த 18 பேரும் மஹ்பூபா முஃப்த்தி ஆதரவு தருவதாக அறிவித்தார்கள்.

ஆனால் ஆடு கசாப்புக்கடைக் காரனைத் தான் நம்பும் என்ற வழக்குப் படி அவர் குஜராத் இனப்படுகொலைப்புகழ் மோடியைத் தான் நம்பினார். மோடி கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைத்தார். அன்று முதல் கஷ்மீரில் பிணங்கள், விழுந்து கொண்டே தான் இருக்கின்றது.

கஷ்மீரில் ஒரு நிர்வாகம், அதாவது ஒரு மாநில அரசு இருக்கின்றது என்பதை சட்டை செய்யாமல் மத்திய இராணுவ அமைச்சர் அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கின்றார்.

பள்ளிக்குச் செல்லும் மாணவர் களையும், தங்கள் வெறுப்பை காட்டிட வீதிக்கு வந்த மக்களில் முஸ்லிம் இளைஞர் களையும் கொலை செய்துவிட்டு, தீவிரவாதி களை ஒழிக்க மக்களிடமே துப்பாக்கியைத் தருவோம், என மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டுக் கொண்டிருக்கின்றார். ஆகவே அங்கே நேரடி யான பாசிச ஆட்சி, அதாவது மோடி ஆட்சி தான் நடந்து கொண்டிருக்கின்றது.

### முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லாஹ்வின் புதிய கண்டுபிடிப்புகள்

காஷ்மீரின் முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லாஹ் 24-5-2015 அன்று திடீரென ஓர் அறிவிப்பைச் செய்தார். அதில், “நாடாளு மன்ற தாக்குதல் அப்சல் குருவை தூக்கிலேப் போட்டது ஓர் அரசியல் கொலை என்றார்.

அத்தோடு பிரிதொரு தகவலையும் தன் நாறவாய் திறந்து நவின்றார். அதில் அப் போதைய உள்துறை அமைச்சர் சுசில்குமார் ஷிண்டே என்னிடம் கடைசி நேரத்தில் தான் தகவல் சொன்னார். அதில் நான், அதாவது சுசில் குமார் ஷிண்டே - எல்லா உத்தரவு களிலும் கையெழுத்துப் போட்டு விட்டேன். அப்சல் குருவை தூக்கில் போடுவதால், ஏற்படும் மக்கள் கொந்தளிப்பை நீதான், அடக்க வேண்டும் என்றார். எனக்கு எந்த கால அவகாசத்தையும் தந்திடவில்லை” என்று உளறி உள்ளார்.

**(The Hindu; 25-5-2015)**

நீதானே அப்போது முதலமைச்சராக இருந்தாய்” அன்றே இதைச் சொல்லிட வேண்டியது தானே - இத்தனை நாள் ஏன் வாய் திறக்கவில்லை எனக் கேட்டதற்கு: ஆமாம், என்கு எந்த மாற்று வழியையும் சொல்ல வில்லை. பாரதீய ஜனதா கட்சி அப்போதைய எதிர்கட்சி தந்த அழுத்தங்களால் தாம் அப்போது அப்சல் குருவை தூக்கிலே போட்டார் என்கின்றார்.

இப்படி குரைப்பது அரசியலில் நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு அலைபவர்களுக்கு வயிற்றுப்பிழைப்பு - ஆனால் அன்று அப்சலை தூக்கிலிட்ட நாளில், மாநில அரசு எப்படிக் கணக்கில் கொள்ளப்பட்டது, என்பதை அறிந்திட இஃதோர் வாய்ப்பு அவ்வளவு தான்.

ஆனால் 26/11 (2008) என்று அடையாளப்படுத்தப்படும், மும்பைத் தாக்குதலையும், 2011 டிசம்பர் 13 இல் நாடாளுமன்ற தாக்குதலை நடத்தியதும், அரசாங்கத்தின் ஏற்பாடு தான். என்று பொடா என்ற காட்டுமிராண்டிச் சட்டத்தை நிறைவேற்றிட, பிரிதொன்று சட்டத்திற்கு எதிரான செயல்பாடுகளின் தடை சட்டத்தை, மாற்றி, மற்றொரு பொடா போல் அதை ஆக்கிட இதை இந்த உண்மையை நாட்டு மக்களுக்கு அறிவித்தவர்கள். இரண்டு மத்திய அரசின் செயலர்கள். ஒருவர், ஆர்.வி. எஸ். மணி மற்றொருவர், சத்திஷ் ஷர்மா. இதனை நாம் வைகறை வெளிச்சம் இதழில் தெளிவாக ஆதாரத்துடன் வெளியிட்டுள்ளோம் - வாசகர்கள் இந்த செய்தியின் அடிப்படை ஆதாரமான TIMES OF INDIA: 14/7/2013- ஐ படிக்கவும்.

மொத்தத்தில் முஸ்லிம்கள் இல் லாத கஷ்மீரை உருவாக்கும் திட்டம், தங்கு தடையின்றி நடைபெற்று வரு கின்றது.

இதில் இப்போதைய பாசிச ஆட்சியின் பங்களிப்பைக் கேட்கவா? வேண்டும்.

**MGM**




# தனிப்பட்ட கடமைகளுக்கே முன்னுரிமை பொதுக்கடமைகளை விட!

ஒருவர் தன்னுடைய தனிப்பட்ட கடமைகளுக்கே (ஃபர்ளு அய்ன்) முன்னுரிமை தரவேண்டும் (ஃபர்ளு கிஃபாயா எனும்) பொதுக்கடமைகளை விட.

இதற்குக் காரணம் சமுதாயத்தில் யாரேனும் சிலர் செய்வதன் மூலம் பொதுக் கடமை அனைவர் சார்பிலும் நிறைவேறி விடும் ஆனால் தனிக்கடமைகளை இவரே நிறைவேற்றியாக வேண்டும் என்பதே.

இதை முன்னர் விரிவாகப் பார்த்தோம். இப்போது, ஒரு மனிதன் மீதான தனிப்பட்ட 'ஃபர்ளு அய்ன்' எனும் கடமைகளே பல தரத்தில் இருக்கின்றன என்பதையும் அவற்றில் எதற்கு முதலிடம் தரவேண்டும் என்பதையும் படிக்கவிருக்கிறோம்.

ஒவ்வொரு மனிதன் மீதும் இரு வகையான 'தனிப்பட்ட கடமைகள்' (ஃபர்ளு அய்ன்) உள்ளன.

ஒன்று அவன், தன்னைப் படைத்த அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமை கள். இவை 'ஹீகூகுல்லாஹ்' எனப்படும்.

மற்றொன்று சகமனிதனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள், இவை ஹீகூகுல் இபாத்' எனப்படும்.

ஒரு கட்டத்தில் இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றை மட்டும் செய்யமுடியும் என்ற நிலை வந்தால் எதற்கு முதலிடம் தரவேண்டும்?

நம்முடைய மார்க்கத்தின் ஏராளமான சட்டதிட்டங்கள் சகமனிதனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளுக்கு பெரும் மதிப்பளித்திருப்பதை நாம் காணலாம்.

ஏனென்றால் அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமையாக மட்டும் ஒரு செயல் இருக்கிறது. அதில் சகமனிதனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் ஏதும் கலந்திருக்க வில்லை என்றால் அப்படிப்பட்ட ஒரு செயலை ஒருவன் நிறைவேற்றத் தவறினால் அல்லாஹ் தன் பெருந்தன்மையினால் அவனை மன்னிக்க வாய்ப்பு உண்டு.

ஆனால் சக மனிதனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைத் தவறவிட்டால்

இறைவன் அதை மன்னிப்பதில்லை. பாதிக்கப் பட்டவன் மன்னித்தால் தான் அல்லாஹ் மன்னிப்பான்.

மார்க்க அறிஞர்கள் இப்படிக் கூறியுள்ளனர்:- "அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளெல்லாம் பெருந் தன்மை, நீக்குப்போக்கு இவற்றின் அடிப் படையில் அமைந்துள்ளன. சகமனிதனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளோ சுய நலத்தின் மீதல்லவா அமைந்துள்ளன!"

இதற்கொரு உதாரணம் பாருங்கள். கடன் இருக்கும்போது 'ஹஜ் ஜீக்குப் போகலாமா?

வாங்கிய கடனைத் திருப்பித்தருவது கடமை. 'ஹஜ்' ஜீம் கடமை. (அது அவருடைய முதல் ஹஜ் என்றால்)

இப்போது அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய ஹஜ் என்ற கடமையைவிட மனிதனுக்குரிய கடமைக்கே, கடனைத் திருப்பித்தருவதற்கே முதலிடம் தரவேண்டும்.

கடன் தந்தவர் அனுமதியளித்தால் மட்டுமே இவர் 'ஹஜ்' ஜீக்குச் செல்ல வேண்டும்.

ஒரு வேளை அது தவணைக்கடனாக இருந்தால், திருப்பித் தருவதற்கு இன்னும் நிறைய கால அவகாசம் இருந்தால் திருப்பித் தரும் சக்தியும் இருந்தால் கடன் இருக்கும் போதே 'ஹஜ்' ஜீக்குச் செல்லலாம்.

இதோ ஒரு நபிமொழி பாருங்கள்:- ஒருவர் நபி (ஸல்) விடம் "அல்லாஹ்வின் திருத்தூதரே, அல்லாஹ்வின் பாதையில் போரில் நான் வீர மரணமடைந்தால் என் பாவங்களுக்கெல்லாம் அது பரிகாரமாகிவிடுமா?" என்று கேட்டார்.

அதற்கு, "ஆம், நீ அல்லாஹ்வின் பாதையில் நிலைகுலையாமல் விரண்டு ஓடாமல் நின்று போராடிக் கொல்லப் பட்டால் உன் பாவங்களுக்கு அது பரிகார மாக அமையும்" என்று கூறினார்கள்.

பின்னர் அவரிடம் "எப்படிக் கேட்டாய்?" என்று நபி (ஸல்) கேட்க, அவர் அதே கேள்வியைத் திரும்பக் கேட்டார். உடனே பெருமானார் (ஸல்) அவர்கள் ஏற்கனவே கூறிய பதிலைத் திரும்பவும் சொல்லி அடுத்து இப்படிச் சொன்னார்கள்.

கடனைத்தவிர "இதை ஜீப்ரீல் (அலை) என்னிடம் இப்போது சொன்னார்" என்றார்கள். (நூல்:- முஸ்லிம்)

அல்லாஹ்வின் பாதையில் போராடி இன்னுயிர் துறப்பது இறைவனின் நெருக்கத்தை ஒருவர் பெறுவதற்குரிய உன்னதமான வழி இதைவிட ஏற்றமான வழி ஏதுமில்லை.

இதுவேகூட ஒருவர் வாங்கிய கடனைத் திருப்பித் தராத குற்றத்துக்குப் பரிகாரமாகாது என்றால்.... சகமனிதர்களுக்குரிய கடமைகள் குறிப்பாக பொருள் சார்ந்த கடமைகளின் முக்கியத்துவத்தை அறிந்திட இந்த நபி மொழியே போதுமானது.

இதைவிட அதிர்ச்சியூட்டும் நபி மொழியொன்று இதோ!

பெருமானார் (ஸல்) கூறினார்கள்: "சுப்ஹானல்லாஹ்! என்னே ஆச்சரியம்!! வாங்கிய கடனை திருப்பித் தராமலிருப்பது பற்றி எத்துணை பெரிய எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது!" என் உயிர் யாரிடம் உள்ளதோ அந்த இறைவன் மீது சத்தியமாக, ஒருவர் அல்லாஹ்வின் பாதையில் கொல்லப் பட்டு பிறகு உயிர் தரப்பட்டு பிறகு கொல்லப்பட்டு பிறகு உயிர் தரப்பட்டு பிறகு கொல்லப்பட்டால் கூட அவர் மீது கடன் இருந்தால் அதை நிறைவேற்றாமல் அவர் சுவனம் செல்லமாட்டார்" (நூல்:- அஹ்மது, ஹாகிம், நஸயீ)

இதே போலத்தான் போரில் கிடைத்த போர்ச் செல்வங்கள் (கனீமத்) கையாடல் செய்வதும்,

இந்த கனீமத் எனும் போர்ச் செல்வங்கள் போரில் பங்கேற்ற போராளிகள் அனைவருக்கும் பொதுவானவை. அவை அதற்குரிய முறைப்படி பங்கு வைக்கப்படும்.

அப்படி பங்கு வைக்கப்படும் முன்னரே ஒரு போராளி அதில் கையாடல் செய்துவிட்டால் அது எவ்வளவு சிறிய அற்பப்பொருளாக இருந்தாலும் சரிதான் அந்தக் கையாடல் அந்தப் போராளிக்குரிய நற்கூலியையும் பறித்துவிடும் ஜிஹாத் எனும் அறப்போராட்டத்தில் பங்கேற்ற பெருமையையும் சிறப்பையும் குலைத்துவிடும்.

பின்னர் அந்தப் போரில் அவர் கொல்லப்பட்டு உயிர்த் தியாகியானால் கூட அதன் பலன் அவருக்குக் கிடைக்காது. உயிர்த்தியாகத்தின் கூலியும் கிடைக்காது.

இதோ பாருங்கள்; நபி (ஸல்) அவர்களிடமிருந்த போர்ச் செல்வங்களுக்கு அதிகாரியாக ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் பெயர் கிர்கரா (ரழி).

அவர் இறந்து விட்டார். அவரைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறிய போது "அவர் நரகவாசி" என்றார்கள், உடனே நபித் தோழர்கள், அவரிடமுள்ள குற்றம் என்ன என்று பார்த்திடத் தொடங்கினார்கள். போர்ச் செல்வத்தில் இருந்து போர்வையை அவர் கையாடல் செய்திருப்பதைக் கண்டார்கள்.

**(நூல்:- புஹாரீ)**

ஹைபர் போரில் நபித்தோழர்களில் ஒருவர் இறந்துவிட்டார். இந்த மரணச் செய்தியை நபி (ஸல்) விடம் தோழர்கள் கூறினார்கள்.

அப்போது நபி (ஸல்) அவர்கள் "உங்கள் தோழருக்கு நீங்களே தொழுகை நடத்திக் கொள்ளுங்கள்" என்றார்கள் இதைக் கேட்ட நபித்தோழர்களின் முகங்கள் மாறிவிட்டன. அதை அறிந்த பெருமானார் (ஸல்) அவர்கள் "உங்களின் தோழர் அல்லாஹ் வின் பாதையில் ஜிஹாதில் இருக்கும்போதே கையாடல் செய்துவிட்டார்" என்றார்கள்.

உடனே நபித் தோழர்களெல்லாம் இறந்தவரின் பொருள்களை ஆய்வுச்செய்தனர். அதிலே இரண்டு திர்ஹம்களுக்குக் கூட பெருமதியில்லாத, ஹைபர் வாழ் யூதர் களிடமிருந்து போர்ச் செல்வமாகப் பெற்ற ஒரு சிறு தோல் பொருள் இருப்பதைக் கண்டார்கள்.

**(நூல்:- மாலிக், அஹ்மது, அபூதாவூத், நஸயீ, இப்னு மாஜா)**

இருதிர்ஹம் பெருமதியுள்ள பொருள் என்பது ஒரு விஷயமே அல்ல எனினும் நபி (ஸல்) அவர்கள் அவருக்கு இறுதித் தொழுகை நடத்த மறுத்துவிட்டார்கள்.

காரணம், பொதுச் சொத்து மீது ஆசைப்படக்கூடாது என்று எச்சரிப்பதற் காகவே. இதில் சிறிய பொருள் பெரிய பொருள் என்றெல்லாம் பார்க்க முடியாது.

இப்னு அப்பாஸ் (ரழி) கூறினார்கள். உமர் (ரழி) என்னிடம் இப்படிச் சொன்னார் கள் அதாவது; "ஹைபர் போர் நடைபெற்ற நாளில் நபித்தோழர்களில் சிலர் நபி (ஸல்) விடம் வந்து, "இவர் உயிர்த் தியாகியாகி விட்டார். இவர் உயிர்த் தியாகியாகி விட்டார்" என்று கூறிக்கொண்டே இருந்தனர். இந்த வரிசையில் ஒருவரின் பெயரைக் கூறி "இவரும் உயிர்த்தியாகியாகி விட்டார்" என்றனர்.

உடனே நபி (ஸல்) அவர்கள், "அப்படியல்ல. (அதன் கூலி அவருக்குக் கிடைக்காது) ஏனென்றால் ஒரு நீளமான அங்கி அல்லது ஒரு போர்வையை அவர் கையாடல் செய்துவிட்டதால் அவர் நரகத்திலிருப்பதை நான் கண்டேன்" என்று கூறிவிட்டு பிறகு, "கத்தாபின் மகனே.... நீங்கள் மக்களிடம் சென்று இறை நம்பிக்கை யுள்ளவர்களைத் தவிர வேறு எவரும் சுவனத்தினுள் நுழைய முடியாது என்று அறிவித்து விடுங்கள்" என்று கூறினார்கள்.

(உமர் (ரழி) யிடம் கேட்டு இப்னு அப்பாஸ் (ரழி) கூறியதாக முஸ்லிம் என்ற நூலில் இத்தகவல் இடம் பெற்றுள்ளது)

இந்த நபிமொழிகளெல்லாம் நமக்கு போதிப்பது என்ன?

சகமனிதனின் உரிமைகளுக்கென தனியானதோர் மரியாதை உண்டு. குறிப்பாக பொருள் செல்வம் குறித்த உரிமைகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

அவை தனி மனிதனின் செல்வமாயினும் சரி, பொதுச் சொத்தாயினும் சரி, அநியாயமாக அவற்றில் கையாடல் செய்வதற்கு எவருக்கும் அனுமதியில்லை. முறை தவறிய வழியில் அதை எடுப்பது கூடாது.

அது எவ்வளவு சிறிய அற்பப் பொருளாக இருப்பினும் சரியே.

சின்னஞ்சிறிய பொருளைத் திருடத் துணிந்தவன் பெரிய பொருளைத் திருடத் தயங்க மாட்டான்.

சிறியவைதான் பெரியவற்றுக்குக் காரணம். பொரி நெருப்புதான் பெரும் நெருப்பாய் வளர்க்கிறது.

சிறு தொடக்கமே முக்கியம், அதுவே பெரிதாகிறது. என்பதைத் தான் அந்த நபிமொழிகள் உணர்த்துகின்றன.

எனவே இறைவனுக்குரிய கடமைகளைவிட அடியார்கள், சகமனிதர்களுக்குரிய கடமைகளே முதன்மையானவை.

**தமிழ் வடிவம் - இல்யாஸ் ரியாஜி.**

தொடரும். . .


# கலந்தர் ஹஜ் டிராவல்ஸ்

3312, தெற்கு 2 ம் வீதி, பெரியபள்ளிவாசல் எதிரில் புதுக்கோட்டை - 622001

போன் : 04322 222467

செல் : 9443252614, 8189963755

( இந்திய - சவுதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது ) E - Mail : kalandharhaj@gmail.com

## 2016 உம்ரா பயண அழைப்பு

இன்ஷா அல்லாஹ் 2015 டிசம்பர் மற்றும் 2016 ஜனவரி முதல் ஜூலை ( ரமலான்) வரை ஒவ்வொரு மாதமும் உம்ரா பயண ஏற்பாடுகள்

2015 டிசம்பர் முதல் 2016 ஜனவரி மாதம் முடிய

விமான டிக்கெட், விசா, மக்கா & மதினாவில் தங்குமிடங்கள், உணவு, பஸ் போக்குவரத்து அனைத்தும் உள்பட

# ₹ 49,900

பதிவு செய்ய கடைசி நாள் 31 -06 - 2015

திருச்சியை சுற்றியுள்ள மக்களுக்கு திருச்சி விமான நிலையத்தில் இருந்து உம்ரா செல்ல ஏற்பாடு செய்து தரப்படும்.

உரிமையாளர் : மவ்லவி அல்ஹாஜ் K. முஹம்மது அப்துல்லாஹ் மன்பஈ

# ஐரோப்பாவின் அறிவியல் வழிகாட்டி இஸ்லாம்



இஸ்லாத்தின் வரலாற்று பக்கங்கள் இரண்டு நிறங்களை கொண்டதாகும். முதலாவதானது கருப்பு. அது அறிவு ஜீவிகளின் பேனா மை. இரண்டாவதானது சிகப்பு. அது தியாக செம்மல்களின் செங்குருதி. இப்படியான இரண்டு தன்மைகளை உள்ளடக்கியது தான் முஸ்லிம்களின் கடந்த கால வரலாறு.

முஸ்லிம்கள் எட்டு திக்கிலும் வீறு கொண்டு வெற்றி முரசு கொட்டிய காலத்தை நாம் உற்று நோக்கினால் நமக்கு புலப்படுவது இஸ்லாமிய அறிவியலின் முதிர்ச்சியும், முஸ்லிம் அறிஞர்களின் அறிவு ஞானமும் தான். அந்த அளவிற்கு மருத்துவம், கணிதம், புவியியல், உயிரியல், வானசாஸ்திரம் என எல்லா துறைகளிலும் அறிவு பெட்டகமாக விளங்கும் ஐரோப்பாவிற்கே அறிவியலை தந்தது முஸ்லிம்கள்தான் என்றால் அது மிகையாகாது.

ஜவஹர்லால் நேரு தன்னுடைய உலக சரித்திரம் என்னும் நூலில் கூறுகிறார் : “ஸ்பெயினில் 700 வருஷத்து அரபிய ஆட்சி ஆச்சர்யத்தை பயப்பதாக இருக்கிறது. அதைவிட பெரிய ஆச்சரியம் ஸ்பானிய அரபியரின் உயர்ந்த நாகரீகமும் கலைப் பண்புமே ஆகும். அன்றைய ஐரோப்பா முழுவதும் அறியாமையிலும் போரிலும் அந்தகாரத்திலும் மூழ்கிக்கிடந்த போது மேற்கு உலகத்துக்கே அறிவு, நாகரீகம் இவற்றின் ஒளியை அணையாது காத்து வந்தது இஸ்லாமேயாகும். **(உலக சரித்திரம் - பக்கம் 316)**

எம்.என். ராய் தன்னுடைய ‘The Historical Role of Islam’ என்னும் நூலில் கூறுகிறார். ஐரோப்பாவில் அறிவியலின் காலகட்டம் கிட்டதட்ட ஐந்து நூற்றாண்டுகள் ஆகும். அதாவது ஐரோப்பா அறியாமையின் இருளில் மூழ்கியிருந்த காலகட்டம். ஆனால் அப்பாஸியர்களுடைய ஃபாத்திமிகளுடைய, அமவிகளுடைய ஆட்சியின் கீழ் ஆசியாவிலும், ஆப்ரிக்காவிலும், ஸ்பெயினிலும், கல்வியும், நாகரீகமும் தளைத்து விளங்கியது. ஸமர் கண்டும், புகாரா முதல் பெஸுஃம், கொர்டோவாவும் வரை வானியலும் கணிதமும் வேதியலும், இயற்பியலும், மருத்துவமும், கலையும், கற்கவும் கற்பிக்கவும் செய்தது.

கிருஸ்தவ திருச்சபை அறிவியல் விஞ்ஞானிகளின் அறிவை தீயிட்டுக் கொளுத்தவும், விஞ்ஞானிகளை நாடு கடத்தவும் செய்தபோது அவர்களை இருகரம் நீட்டி வரவேற்றதும் அவர்களின் அறிவுதாகம் தீர்த்து அவர்களைச் சமுதாயத்திற்கு அறிவு ஒளி கொடுத்ததும் ஹாரூன் ரஷீது மற்றும் கலிஃபா மஹ்மூன் போன்ற முஸ்லிம் கலிஃபாக்கள் ஆவார்கள். இதனை எம்.என். ராய்

தன்னுடைய நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார். "நாடுகடத்தப்பட்ட அறிஞர்களை கலீஃபாக்கள் வரவேற்று பாதுகாத்தது மட்டுமல்ல, முந்தைய கால அறிஞர் பெருமக்களின் கிரந்தங்களை படிக்கவும் சேகரிக்கவும் ரோம சாம்ராஜ்ஜியத்தின் பல பகுதிகளுக்கு அனுப்பி வைத்தனர். அரசின் செலவில் பல பாடசாலைகளை ஏற்படுத்தி சமூகத்தின் பலதரப்பட்ட மக்களையும் அதாவது, அரச குமாரனிலிருந்து, ஆண்டிகுமாரன் வரை கல்வி கற்க ஏற்பாடுகளைச் செய்தார்கள்"

(The Historical Role of Islam page)

அறிவியலும், விஞ்ஞானமும் கற்பிப்பது மார்க்கரீதியான கடமையாக அவர்கள் கருதினார்கள் சிலர். சுயமாக அதில் பங்கெடுத்தார்கள். இதை எம்.என். ராய் இவ்வாறு குறிப்பிடுகிறார், "விஞ்ஞானத்தை போதிப்பது மட்டுமல்ல அதில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டவர் அப்பாஸிய கலிஃபாவான மஹ்மூன்"

(The Historical Role of Islam)

விஞ்ஞான வளர்ச்சிக்கும், தலைமைக்கும் வேண்டி பல முஸ்லிம் ஆட்சியாளர்கள் உழைத்தார்கள். ஆப்பிரிக்காவில் ஃபாத்திமி முஸ்லிம்களும், ஸ்பெயினில் அமலி முஸ்லிம்களும் இதற்கு உதாரணங்கள் ஆகும். கெய்ரோவிலுள்ள நூலகத்திற்கு ஒரு லட்சத்திற்கும் அதிகமான கிரந்தங்கள் இருந்த போதும் கொர்டோவாவில் ஆறு லட்சத்திற்கும் அதிகமான கிரந்தங்கள் இருந்தன.

ராபர்ட் ப்ரிஃபால்ட் தன்னுடைய Making of Human என்னும் நூலில் கூறுகிறார், "அரேபியர்களின் வானவியல் ஒரு கோபர் நிகஸையோ அல்லது நியூட்டனையோ உருவாக்கவில்லை. என்றாலும் அரபிகளின் பங்களிப்பு இல்லாமல் ஒரு கோபர் நிகஸோ, நியூட்டனோ பிறந்தே இருக்க முடியாது."

**விஞ்ஞான துறைக்கு அரபிகள் வழங்கிய சேவைகள் ஈடுஇணையற்றதாகும். பிளாட்டோ, அரிஸ்டாடில், யூக்லிட், அப்பளோனியஸ், டோளமி, தஹிப் போகிராற்றஸ், ஹாலன் போன்ற அறிவியல் ஞானிகளின் நூல்கள் அவர்களுடைய தாய் மொழியிலிருந்து முதன்முதலாக மொழி பெயர்க்கப்பட்டது அரபு மொழியில் ஆகும்.**

அன்றைய ஐரோப்பாவிற்கு அரபிகளிடமிருந்து கிடைத்த மருத்துவமும், கணிதமும் மட்டுமல்ல வானியலும், இயற்பியலும், வேதியியலும், புவியியலும் இன்னும் தொழில் நுட்பங்களும்தான்.

**(1bid பக்கம்9)**

அரேபிய தீப கற்பத்தில் இஸ்லாமியச் சுடர் வெளியானது முதல் உலகம் பல பயன்பாடுகளைக் கண்டது. ஷிர்க் எனும் கொடிய காரிருளில் இருந்து சுவனப் பாதைக்கு அது கொண்டு செல்லப்பட்டது. இஸ்லாம் வெளிப்பட்டு ஐம்பது ஆண்டுகளில் இஸ்லாமிய சமூகம் கிழக்கில் இந்தியா, பாரசீகம், முதல் அட்லாண்டிக் சமுத்திரம் வரையும் மேற்கில் வட ஸ்பெயின் வரையும் சென்றடைந்தது.

மதீனா, கூஃபா திமஷ்கஸ், பக்தாத், பஸரா, சமர்க் கெய்ரோ, கிர்னடா, கொர்தோவா டொலிடோ போன்ற முக்கிய நகரங்கள் இஸ்லாமிய கலாச்சாரத்தின் மத்திய நிலையங்களாக விளங்கின. அத்துடன் இஸ்தான்புல் ஸ்கான்தாந்திநோபிள் உட்பட மேலும் பல இஸ்லாமிய நகரங்கள் இவற்றுடன் இணைந்து கொண்டன.

இவ்வளவு குறுகிய காலத்தில் எந்த ஒரு சமூகமும் அடைந்து கொள்ளாத நாகரீகப் பண்பாட்டை முஸ்லிம்கள் அடைந்து கொண்டனர். இவர்களின் பண்பாடு ஆய்வுகள் மருத்துவம், வானியல், புவியியல், என அனைத்து துறைகளிலும் பல நூற்றாண்டுகள் பன்நெடுங்காலமாக உலகின் நாலா திசைகளிலும் ஒளி ஊட்டியது.

இன்று நவீன உலகின் நாகரீகத்தைக் கண்டு மனிதர்கள் வியப்பது போன்று அன்று இஸ்லாமிய நாகரீகம் கண்டு வியப்படைந்தனர். இஸ்லாமிய நாகரீகத்தில் இருந்து ஊற்றெடுத்ததுதான் இன்றைய நாகரீகம் என்பார்கள். உலகின் மத்திய



காலப்பகுதி இஸ்லாமிய எழுச்சியின் முக்கிய பகுதியாக வர்ணிக்கப்படுகின்றது.

ஸ்பெயினில் 800 ஆண்டுகள் இஸ்லாமிய ஆட்சியின் போது நாகரீகத்தின் உச்சத்தை முஸ்லிம்கள் மாத்திரம் நுகர வில்லை. மாற்றமாக இருளில் மூழ்கிக் கிடந்த ஐரோப்பாவும், அதன் குடிகளும்தான் நுகர்ந்தார்கள்.

## இருளில் மூழ்கிக் கிடந்த ஐரோப்பா

வரலாற்று ஆசிரியர்கள் ஐரோப்பாவை முக்கிய மூன்று காலக்கட்டங்களாகப் பிரித்து நோக்குகின்றனர்.

1. ஆரம்பகால ஐரோப்பா, 2. மத்திய கால ஐரோப்பா, 3. இறுதிகால ஐரோப்பா

(ஆதாரம் : http://www.qeyamhome.net/ detials.aspxpageid=1920&lasttype-2)

கி.பி. 500 முதல் 1500 வரையிலான காலப்பகுதி ஐரோப்பாவின் இருண்ட காலம் என வர்ணிக்கப்படுகின்றது. நாகரீகம், பண்பாடு என்பது அற்றுப்போய் மனித உரிமைகள் பறிக்கப்பட்டு நிலமாணிய நில பிரபுத்துவ முறையால் ஐரோப்பா சீரழிந்து சின்னா பின்னப்பட்டுக் கிடந்தது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் இஸ்லாமியச் சுடரையும் அதன் பண் பாட்டையும் அந்தலூஸியா (ஸ்பெயின்) வழியாகவும், பின்னர் செசிலித் தீவு வழியாகவும் அது நுகர ஆரம்பிக்கின்றது. சிலுவைப் போர்கள், அவற்றிற்கு முன்னர் முஸ்லிம் நாடுகளுக்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் காணப்பட்ட தூதரகங்கள் மூலம் ஐரோப்பா அனுபவ ரீதியாக இஸ்லாமிய நாகரீகத்தைக் காண ஆரம்பிக்கின்றது. இதில் ஐரோப்பிய நகரங்கள் அனைத்தும் சம நிலையில் காணப்படவில்லை. மாற்றமாக சில நகரங்கள் பாரிய செல்வாக்கிற்கு உள்ளானது. அதில் அந்தலூஸியா (ஸ்பெயின்) முக்கிய நகரமாகும். அதன் பின்னர் செசிலித்தீவு காணப்படுகின்றது.

(ஆதாரம் :http://www.qeyamhome.net/ details.aspx? pageid=1920&lasttype2)

இஸ்லாமிய வெற்றிக்கு முன்னால் ஐரோப்பியர் வறியவர்களாகவும், விவசாயி களாகவும் அவர்கள் தமது நிலப்பரப்பில் அரைவாசியைக் கூட விவசாயம் செய்து கொள்ள வசதியற்றவர்களாக இருந்தனர்.

ஐரோப்பா காடுகள் சதுப்பு நிலங்களாக காணப்பட்டது. போர்கள் காரணமாக ஜனத்தொகை குறைந்தவர்களாகவும் இருந் தனர். ஒருவரின் சராசரி வயது எல்லை முப்பதை தாண்டுவதும் கடினம். நோய்கள், பட்டினிச் சாவுகள் அதிகரித்துக் காணப் பட்டது. அவர்களில் 20 சதவிகிதம் குறை வானோர் 16 கி.மீ. தொலை தூரத்திற்கு அப்பால் தமது சொந்த ஊரைவிட்டும் கடந்து பயணம் செய்ததில்லை.

## அந்தலூஸியாவில் (ஸ்பெயின்) காணப்பட்ட இஸ்லாமிய கல்வி நிலையங்கள்

ஐரோப்பாவின் மூலை முடுக்குகளில் இருந்தெல்லாம் மாணவர்கள் அந்தலூஸியா வை (ஸ்பெயின்) நோக்கி கல்விக்காகப் புறப்பட்டனர். கிறிஸ்தவ மதகுருக்கள் அரபு மொழியைக் கற்றனர். கொர்தோவா நூல் நிலையத்தில் காணப்பட்ட அரபு இலத்தீன்

மொழியாக்கத்தில் காணப்பட்ட பைபிளை இஸபெல்லாவின் பிரதம மதகுருவான யோவான் கி.பி.764ம் ஆண்டு அரபு மொழிக்கு பைபிளை மொழிமாற்றம் செய்தார். அவ்வாறே தந்தை விசாண் என்பவர் கிறிஸ்தவ தேவாலயங்களின் சட்ட விதிகளை அரபு மொழிக்கு மாற்றம் செய்து, பிரதம மதகுருவான அப்துல் மலிக் அவர்களிடம் கவிதைகளில் அவற்றை ஒப்படைத்ததாகக் கூறப்படுகிறது.

(ஆதாரம் : https://ar.wikipedia.org/wiki/)

முஸ்லிம்களின் ஆட்சியில் இலத்தீன் மொழியிலான நூல்களை மொழிப்பெயர்ப்புச் செய்வது முக்கியமானதொரு இடத்தை வகித்தது. அதற்கு தர்ஜுமா இயக்கம் என்றே பெயர் சொல்லப்பட்டது. அது இலத்தீன் மொழியில் காணப்பட்ட நூல்களை அரபுக்கு மொழி மாற்றம் செய்ததால் அரிஸ்டோடில், ஜாலீனோஸ் பிளாட்டோ போன்றவர்களின் தத்துவக் கருத்துக்கள் வீண்போவதில் இருந்து பாதுகாத்தது மட்டுமின்றி இஸ்லாமிய நாகரீகம் பண்பாடு ஆகியவற்றைத் தெரிந்து வருவதற்காக தூதுக்குழுக்களை அரசர்கள் அனுப்பிய பல நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

முஸ்லிம் ஸ்பெயின் ஆட்சியின் இவ்வாறான நிகழ்வுகள் சர்வசாதாரணமாக நடந்துள்ளன. பவேரியா ஃபிலிப் மன்னன் கொர்தோவாவில் காணப்படும் நாகரீக எழுச்சி பற்றி ஆய்வு செய்திடவும், அங்குள்ள திட்டங்கள் பற்றி கேட்டறியவும் உமைய்யா ஆட்சியாளரான முதலாவது ஹிஷாமை (கி.பி.711-751) சந்திப்பதற்கு அனுமதி வேண்டினார். அதற்கு அவரது வேண்டுதலை ஹிஷாம் ஏற்றுக்கொண்டு பதில் அனுப்பினார். வில்யம் என்பவரின் தலைமையில் தூதுக்குழுவை அனுப்பினார். இவர் நம்பிக்கையான ஒருவர். முஸ்லிம்களின் பண்பாட்டு நாகரீக வளர்ச்சி பற்றி ஒளிவு மறைவின்றி எடுத்துக்கூறும் பண்பாளர். அதனால் வில்லியம் அல்அமீன் என முஸ்லிம்களால் அழைக்கப்பட்டார். இதன் பின்னர் அந்தலூஸியாவை (ஸ்பெயின்) நோக்கி ஐரோப்பியர் தூதுக்குழுக்களாக படை எடுத்துச் சென்றனர்.

கி.பி. எட்டாம் நூற்றாண்டு இங்கிலாந்து மன்னன் தனது சகோதரனின் மகள் டோண்ட் என்பவரது தலைமையில் இளவரசர்களின் பெண்மக்களில் எட்டு இளம் யுவதிகளை இஸபெல்லா நகருக்கு அரண் மனைத் தலைவர் ஸ்பெரிக் என்பவரோடு அனுப்பியதோடு உமைய்யா கலீஃபா ஹிஷாமுக்கு மடலும் கொடுத்தனுப்பியதாக வரலாறு குறிப்பிடுகின்றது.

(ஆதாரம் : http://upu.edu.sa/page/ar/175-797)

## ஐரோப்பிய கருத்தியலில் காணப்படும் இஸ்லாமிய செல்வாக்கு!

### அரபு மொழி இலக்கியம்

ஒரு காலத்தில் ஐரோப்பியாவில் உள்ளோர் முஸ்லிம் நாடுகளை நோக்கிப் படை எடுத்தனர். அங்குள்ள நிர்வாக முறைகள், தேசிய உற்பத்திகள், விவசாயம், கல்விப் போதனை அனைத்தையும் உற்று நோக்கினர். அவர்களின் மொழியான அரபு மொழி கற்றாலே அன்றி எதுவும் ஆகாது என்ற முடிவில் அரபைக் கற்றனர். பின்னர் அதில் இருந்து தமது மொழிகளுக்கு மொழி மாற்றம் செய்து பயன்பெற்றனர்.

அதன் தாக்கம் கி.பி. பதினோராம் நூற்றாண்டு முதல் காணப்பட்டதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. ஐரோப்பியர் அரபு இலக்கியத்தை ரசிப்பதே இதற்கு காரணமாகும். அதில் காணப்படும் காதல் மற்றும் புகழ்பாட்டுக்களையும் அந்தலூஸியா (ஸ்பெயின்) உணர்ச்சிக் கவிதைகளையும் அவர்கள் அதிகம் நேசித்தது மற்றொரு காரணமாகும்.

ஸ்பெயின், பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளில் அதன் செல்வாக்கு காணப்பட்டது. சமூகவியல், குடும்பவியலில் காணப்படும் தாக்கத்தை நன்கு உணர்ந்த ஐரோப்பியர்கள் இப்னு ஹஸ்ம் போன்ற அறிஞர்களின் கருத்துக்களால் பெரிதும் கவரப்பட்டனர்.

அரபு மொழியில் வெளிவந்த ஆயிரம் இரவுகள் கதைத் தொடர் ஐரோப்பாவில் பல தடவைகள் அச்சிடப்பட்டிருப்பது இதை இன்னும் உறுதி செய்கின்றது. அவ்வாறே அரபுக்களிடம் காணப்பட்ட மகாமாத் என்ற கவிதைத் தொகுப்புக்களை ஒத்த அமைப்பில் ஐரோப்பியர் கவிதைகள் அமைந்திருந்தன. குறிப்பாக கற்பனையாக எழுந்த இலக்கியக் கதைகள், கவிதைகள் அவர்கள் மத்தியில் பரவிக்கிடந்தன.

வாண்டி என்ற ஐரோப்பிய கவிஞர் அரபு இலக்கியத்தில் அபார ஈடுபாடு காட்டினார். அவர் இஸ்லாமிய நாகரீகத்தின் வளர்ச்சியின் போது செசிலித்தீவில் வாழ்ந்த வர். அவரது எழுத்துக்கள் இப்னு அரபி என்ற அரபுக்கவிஞனின் கவிதைகளுக்கு ஒப்பான தாக இருந்ததாக குறிப்பிடுகின்றனர். மட்டு மின்றி, அவர் இஸ்ரா மிஃராஜ், மற்றும் மறுமை நாள் பற்றிய நம்பிக்கையிலும் கவரப்பட்டிருந்தார். அப்படி பார்க்கின்ற போது ஐரோப்பாவின் மத்திய காலப்பகுதியில் அரபு மொழியின் செல்வாக்கை குறைத்து மதிப்பிட முடியாததாகும். அத்தோடு அரபு மொழியின் பல சொற்கள் ஐரோப்பிய நடைமுறையில் இன்னும் காணப்படுவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

## கணிதவியல்

கணிதத்தில் பொதுவாக கோத்திர கணிதம், அகூரகணிதம் போன்ற கணித முறைகளை அறிமுகப்படுத்திய முஸ்லிம்கள் பூஜ்ஜியத்திற்கு அர்த்தம் கொடுத்தனர். அல்ஜிப்ரா என்ற கணிதமுறையை அறிமுகப் படுத்தி அறிஞர் குவாரிஸ்மி அவர்கள்தான் பூஜ்ஜியத்திற்கு அர்த்தம் தந்தவர். இவரது முயற்சியினால் எண்களின் ஒழுங்கமைப்பு (1,2,3,4) முதலில் அரேபியர்களிடமும் பின்னர் ஐரோப்பியர்களின் அன்றாடப் பாவனைக்கு வந்தது. அன்று முதல் இன்றுவரை நடைமுறையில் இருப்பது இஸ்லாத்தின் செல்வாக்கைப் பறைசாற்ற போதுமானதாகும்.

12-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இவரது பல நூல்கள் மொழியாக்கம் செய்யப்பட்டன. குறிப்பாக அல்ஜிப்ரா கோத்திர கணித நூலான Algebric Notation என்ற நூல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அது கி.பி. 19-ம் நூற்றாண்டு வரை ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் போதிக்கப்பட்டது என்பது மற்றொரு அம்சமாகும்.

## வானியல்

விண்ணின் இயக்கம், நட்சத்திரங்கள், கோளங்கள் போன்றவற்றின் ஓட்டங்கள், அசைவுகள், நகர்வுகளுடன் தொடர்புடைய ஆராய்ச்சிக்கு வானியல் எனப்படுகின்றது. அல்குர்ஆனின் கட்டளைக்கு உட்பட்டு இத்துறையில் ஈடுபட்ட முஸ்லிம் கள் கிரேக்க, பாரசீக, இந்திய நூல்களின் துணைக் கொண்டு இவற்றில் ஈடுபட்டனர். அவற்றின் மீது மாத்திரம் தாங்கி இருக்காது மனித இனத்திற்கு பயனுள்ள தமது பல கண்டுபிடிப்புகளையும் இதில் அதிகமாக இணைத்து அதை விருத்தி செய்தனர். கலீஃபா அபூஜஃபர் அல்மன்சூரின் காலத்தில் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட நட்சத்திரம் பற்றிய இருநூல்கள் அரபிக்கு மொழியாக்கம் செய்யப்பட்டது.

## மருத்துவம்

மருத்துவத்தில் பல அறிஞர்கள் பிரசித்தி பெற்று விளங்கினார்கள். இப்னுசீனா, ராஸி, இப்னு அந்நஃபீஸ், அபுல்காஸிம், அஸ்ஸஹ் ராவி, இப்னுல் பைதார், ஹுனைன் பின் இஸ்ஹாக், அப்தல்லதீஃப் அல்பக்தாதி போன்றோர் பிரசித்தி பெற்று விளங்கி னார்கள்.

இப்னு சீனாவில் கானுன் என்ற நூல் 19ம் நூற்றாண்டு வரை ஐரோப்பிய பல்கலைக் கழகங்களின் பாடப்புத்தகமாக போதிக்கப் பட்டது பற்றி மருத்துவ உலகில் சுட்டிக் காட்டப்படுகின்றது. அவ்வாறே மற்ற அறிஞர்களின் நூல்களும் குறிப்பிடத் தக்கவையாகும்.

அரபு மருத்துவர்கள் தாவரங்கள், மூலிகைகளில் இருந்து தயாரிக்கப்பட்ட மாத்திரைகள், மிருகங்களில் இருந்து

தயாரிக்கப்பட்ட மாத்திரைகள் உபயோகித்த தோடு அவற்றை வகைப்படுத்தியும் 600 வகையான நோய்கள், சிகிச்சை மாத்திரை களை அறிமுகப்படுத்துவதில் அரேபியர் அபார திறமை உடையவர்களாக விளங்கினர்.

இப்னுல் பைத்தாரின் மருத்துவ நூல்கள் ஐரோப்பிய உலகில் பல நூற்றாண்டுகள் போதிக்கப்பட்டிருப்பது அதன் செல்வாக்கை எடுத்துக் காட்டுகின்றது.

(ஆதாரம் :http://www.qeyamhome.net/ details.aspx?pageid=1920&lasttype2)

அவ்வாறே இயற்பியல் மற்றும் இரசாயனவியல் போன்ற துறைகளிலும் முன்னோடிகளாக முஸ்லிம்கள் விளங்கினர். இயற்பியலில் இப்னு சீனா, ஹஸன் பின் ஹை பைநூனி போன்ற அறிஞர்கள் இதில் பிரசித்து பெற்று விளங்கினார்கள். ஜாபிரி ஹய்யான், மற்றம் அபூபக்கர் அல்ராஸி, இப்னுல் பைத்தார், தாவூத் அல்தாகி, பக்தா இப்னுமையின் இரசாயனவியலில் பிரசித்தி பெற்று விளங்கினர்.

## விவசாயம்

விவசாயத்தையும் அரபுக்கள் ஸ்பெயி னில் அறிமுகம் செய்தனர். கிராம்பு, ஏலக்காய் போன்ற விவசாயப் பொருட்கள் ஸ்பைனுக்கு எடுத்துச் சென்று தரிசு நிலங்களாகக் காணப் பட்ட ஐரோப்பிய நிலத்தை பசுமையானதாக மாற்றியமைத்தார்கள்.

அரபு ஆட்சியின் கீழ் உள்ள நாடுகளில் இருந்து அரிசி, கோதுமை, கரும்பு, திராட்சை, கொய்யா, ஆப்பிள், மாதுளை போன்ற பழங்களை ஐரோப்பாவிற்கு எடுத்துச் சென்று விவசாயத்தை அறிமுகம் செய்தார்கள் முஸ்லிம்கள்.

விவசாயத்தின் முன்னேற்றம் கருதி கால்வாய்கள் தளங்கள், நீரோடைகள் போன்றவற்றை அமைத்து நீர்ப்பாசனத் திட்டத்தின் முன்னோடிகளாக விளங்கி னார்கள்.

(ஆதாரம் :http://www.qeyamhome.net/ details.aspx?pageid=1920&lasttype2)

இப்படியாக இன்றைய அறிவியல் பெட்டகமாக விளங்கும் ஐரோப்பா இருளிலிருந்து வெளிச்சத்தை இஸ்லாத் திடமிருந்தே பெற்றுக்கொண்டது. ஒட்டு மொத்த உலகிற்கும் ஒளியூட்டிய இஸ்லாமியர் தன்னிலை மறந்து தங்களது கடந்தகால வரலாற்றை அறியாது காரிருளில் மூழ்கி நிற்கின்றனர். நாளை விடியும் இஸ்லாமியர் களின் வைகறை வெளிச்சமானது உலகிற்கு கடந்த காலத்தைப் போன்று ஒளியூட்ட வேண்டுமானால் முஸ்லிம்கள் தங்களது கடந்த கால வரலாற் றினை படித்து தங்களின் முன்னோர்கள் அடைந்த பேற்றினை பெற மீண்டும் ஒரு இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத் தினை கட்டிட வேண்டும். அது மீண்டும் மனித குலத்திற்கு பல பயன்பாட்டினையும் தந்திட வேண்டும். அதற்காய் ஓய்வுக்கு ஓய்வு கொடுத்து உழைப்போம்! இறைமறைக் கொண்டு வெல்வோம்.

**ஹாரிஸ் முஹம்மது**

# வரபெற்றோம்




**ஒரு வீணையின் விசும்பல்**

(சிறுகதைகள்)

**விலை – 100.00**

# டீஸ்டா செடல்வாட் உடன் ஒரு நேர்காணல்



# மோடியின் குற்றம் மறுக்க முடியாத ஆதாரம்

ஆர்.எஸ்.எஸ். மதவெறியர்களுக்கு அஞ்சாமல் 2002 குஜராத் இனப்படு கொலைக்கு எதிராக போராடி வரும் தீஸ்தா சேதல்வாத் சென்னை வந்திருந்த போது வினவு செய்தியாளர்களுக்கு அளித்த நேர்காணலின் 3ம் பகுதி.

**மதவெறியருக்கெதிரான நீண்ட போராட்டத்திற்கு எப்படி வந்து சேர்ந்தீர்கள்?**

மதவாதத்துக்கு எதிரான எங்கள் போராட்டத்தை 1985-86 வாக்கிலேயே தொடங்கி விட்டோம். அந்த நேரத்தில்தான் பாபர் மசூதியின் கதவுகள் திறந்து விடப் பட்டிருந்தன. ஷா பானு வழக்கு தொடர்பான அடிப்படைவாத பிரச்சாரம் நடந்து கொண்டிருந்தது. இரண்டுமே சரிசமமான வெறித்தனம் கொண்டவை.

நான் அப்போது இந்தியன் எக்ஸ்பிரசில் வேலை செய்து வந்தேன். ஜாவித், சாய்நாத், குமார் கேட்கர் உள்ளிட்ட நாங்கள் சிலர் சேர்ந்து மதவாதத்துக்கு எதிரான பத்திரிக்கை யாளர்கள் என்ற அமைப்பை தொடங்கி னோம். "முஸ்லிம்களை தாக்குவதற்கு இந்துக் கள் ஆயுதம் ஏந்த வேண்டும்" என்றும், "காஷ்மீர் பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட் படுத்தப்பட வேண்டும்" என்றும் பேசிய வெறுக்கத்தக்க பேச்சுக்கள் மராத்தி நாளிதழ்களில் பேனர் தலைப்பு செய்திகளாக வெளியாகின. ஆனால், அரசு எந்த நட வடிக்கையும் எடுக்கவில்லை மும்பை மற்றும் மகாராஷ்டிராவின் பிற பகுதிகளிலிருந்து 110 பத்திரிக்கையாளர்களின் கையொப்பங்களை சேகரித்து, "இத்தகைய ஊடக துஷ்பிரயோகங் களை தடுக்க வேண்டும். ஊடகங்கள் வெறுப்பு பிரச் சாரத்துக்கு பயன்படுத்தப்படக் கூடாது. முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து நடவடிக்கை எடுங்கள்" என்று மாநில அரசிடம் மனு கொடுத்தோம்.

அதைத் தொடர்ந்து, அத்வானியின் ரத யாத்திரை 1992-93 மும்பையில் வன்முறைகள் நடந்தன. அது கொடூரமானதாக இருந்தது. மொத்த நகரமும் இரண்டாகப் பிளவுப் பட்டதோடு தெருக்களில் மரணம் கோர தாண்டவமாடியது. இஸ்லாமிய சமூகத்தைப்

பற்றி மிக நச்சுத்தனமான கருத்துக்கள் பேசப்பட்டன.

அப்போது ஜாவித் சண்டே அப்சர் வரிலும், நான் பிசினஸ் இந்தியாவிலும் வேலை செய்து கொண்டிருந்தோம்.

மும்பை கலவரங்கள் தொடர்பாக நான் பிசினஸ் இந்தியாவின் இரண்டு இதழ்களுக்கு அட்டைப் படக்கட்டுரைகளை தயாரித்தேன். காணாமல் போனவர்கள், குடும்பங்கள் இயல்பு நிலைக்கு திரும்புவதில் உள்ள பிரச் சனைகள் பற்றி தொடர்ந்து எழுத விரும்பி னேன். ஆனால் வெகுஜன ஊடகங்கள் ஒரு பிரச்சனையை இறுதிவரை முழுமையாக பின் தொடர விரும்புவதில்லை. பரபரப்புக்காக ஓரிரு பெரிய கட்டுரைகள் வெளியிடுவதை ஏற்றுக் கொள்வார்கள். அதற்கு மேல் போனால் அனுமதிக்க மாட்டார்கள்.

மத வன்முறைக்கான சூழல் உருவா வதை கவனிப்பது வன்முறைக்கான முன் தயாரிப்புகளையும், வன்முறையின் விளைவு களையும் பற்றி எழுதுவது என்று செயல்பட விரும்பினோம் நாங்கள். அதனால்தான், வேலையைவிட்டு விலகி, “கம்யூனலிசம் காம்பட்” இதழை தொடங்கினோம்.

### 2002 குஜராத் இனப்படு கொலை வழக்குகளில் குற்றவாளி களுக்கு எதிராக சாட்சி சொன்ன பாதிக்கப்பட்ட பெண்கள் எப்படி இருக்கிறார்கள்?

நரோடா பாட்டியாவைச் சேர்ந்த பெண்கள் தினக் கூலி வேலை செய்பவர்கள். குல்பர்க் சொசைட்டியில் பாதிக்கப்பட்டவர் கள் போல நடுத்தர வர்க்கத்தினர் இல்லை. சர்தார்புரா போன்ற இடங்களில் செய்ததைப் போல அவர்கள் வேறு இடங்களுக்கு குடிபெயர முடியாது. அவர்கள் திரும்பி அதே பகுதிக்குத்தான் போக வேண்டும். மாயா கோத்னானி இப்போது பிணையில் வெளி வந்து அதே பகுதியில் வசித்து வருகின்றது.

### 2002 கலவரத்திற்கு பிறகு அகதி முகாமில் இருக்கும் முஸ்லிம் மக்களின் குழந்தைகள்!

அவர்கள் தினமும் காலையில் வேலைக்கு போகும் போது கிண்டல் செய்து அச்சுறுத்தப்படுகின்றனர். எப்போதெல்லாம் விஷயம் கைமீறி போகிறதோ, அப்போது அவர்களுடன் போலீஸ் நிலையத்துக்குச் சென்று புகார் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்வதுதான் எங்களால் முடிந்த சிறிய உதவி. ஆனால் அவர்கள்தான் அந்த தினசரி சித்திரவதையை அனுபவிக்கின்றனர். உச்ச நீதிமன்றம் குஜராத் படுகொலை வழக்குகளை விசாரிக்க ஒரு சிறப்பு நீதிமன்றத்தை அமைத்து, நீதிபதி ஜோஸ்னா யக்னிக்கை நீதிபதியாக நியமித்து, விசாரணையை கண்காணித்து வந்தது. நரோடாபாட்டியாவில் பாதிக்கப் பட்டு பிழைத்திருப்பவர்களிடம் பேசினால் அந்த நீதிபதி பற்றி மனமுருகி பேசுவார்கள். ஏனென்றால் வழக்கு விசாரணையின் போது எதிர் தரப்பு வக்கீல் அவர்களை துன்புறுத்து வதை அவர் அனுமதிக்கவில்லை. நீதிமன்ற விசாரணைகளில் தலித் பெண்கள், தலித் உழைப்பாளிகள் சாட்சிக் கூண்டில் நிற்கும் போது இந்த அமைப்பு அவர்களை துன்புறத்து கிறது. நீதிமன்ற சூழலே அவர்களுக்கு பகையானதாக உள்ளது. ஆனால் ஜோஸ்னா யக்னிக், ஒரு கேள்விகூட வரம்பு மீறுவதை அனுமதிக்கவில்லை. பெண்கள் சாட்சி சொல்ல தைரியம் பெற்றனர். தமது தாய் களுக்கு, தமது மகள்களுக்கு நடந்த பாலியல் வன்முறைகளை குறித்துக் கூட பேசினர். நீதிமன்றம் அளித்த தைரியத்தில் தான் அவர்களால் பேச முடிந்தது.

### மோடியை விடுவிக்கும் கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்புக்குப் பிறகு ஜாகியா ஜாஃப்ரி எப்படி உணர்கிறார்?

2003-ல் குற்றப் பதிவு செய்ய ஜாகியா ஜாஃப்ரிக்கு நாங்கள் உதவிய போது, உளவுத்துறை அறிக்கைகளிலிருந்து ஆதாரங் களையும் மறு முறையீட்டுக் கட்டத்தின் போது சிறப்பு புலனாய்வு குழுவின் ஆவணங் களையும் திரட்டினோம். மோடி மீது வழக்கு தொடருவதற்கு போதுமான ஆதாரங்கள் அவற்றில் இருந்தன.

அதிகாரபூர்வ பதிவுகளின்படி கோத்ரா வின் ஆட்சியர். அப்போது உள்துறை அமைச்சக பொறுப்பை வைத்திருந்த மோடிக்கு கோத்ரா நிகழ்வைப் பற்றி தகவல் தெரிவித்திருக்கிறார். அவர் உடனடியாக விஸ்வ இந்து பரிஷத் தலைவர் ஜெய்தீப் படேலை அழைக்கிறார். (காவல் துறை ஆலோசனை கூட்டத்தை கூட்டவில்லை). அது தொடர்பான தொலைபேசி அழைப்பு பதிவுகள் உள்ளன. பின்னர் ஜெய்தீப் படேல் கோத்ராவுக்கு செல்கிறார். சுகாதாரத் துறை அமைச்சர் அசோக் பட்-ம் கோத்ராவுக்கு போகிறார். கொல்லப்பட்ட சடலங்களின் பிரேத பரிசோதனை இந்துத்துவா கும்பலின் முன் திறந்த வெளியில் நடத்தப்படுகிறது. குழந்தைகள், பெண்கள் உடல்கள், சிதைக்கப்பட்ட சடலங்களை பயன்படுத்தி உணர்ச்சிகளை தூண்டிவிட்டனர். பிரேத பரிசோதனை திறந்தவெளியில் செய்யப் படுகிறது என்று மோடிக்கும் தெரியும்.

பின்னர் ஆட்சியர் அலுவலகத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. உடல்களை அகமதா பாத்துக்கு எடுத்துச் செல்லும்படி உத்தரவிடப் படுகிறது. இவை அனைத்தும் வழக்கு தொடுப்பதற்கு போதுமான ஆதாரங்கள். இது தொடர்பான வழக்கு இப்போது குஜராத் உயர் நீதிமன்றத்தில் உள்ளது. அதை விசாரிக்க எந்த நீதிபதிக்கு தைரியம் உள்ளது? என்று தெரியவில்லை.

நேற்று நீங்கள் காவல்துறை உயரதிகாரி ஸ்ரீகுமார் பற்றி பேசினீர்கள். சஞ்சீவ் பட் அளித்த வாக்குமூலத்தின் முக்கியத்துவம் என்ன?

சஞ்சீவ் பட் மகத்தான தைரியத்தைக் காட்டியுள்ளார். முதலமைச்சர் வீட்டில் பிப்ரவரி 27 மாலை நடந்த கூட்டம் தொடர்பான விஷயத்தில் அவருடையது முக்கியமான சாட்சியமாக இருக்கும்.

ஸ்ரீகுமார், ராகுல் சர்மா 2002 முதலே ஒரு நிலைப்பாடு எடுத்து நானாவதி கமிஷன் முன்பு பிரமாண பத்திரம் தாக்கல் செய்தனர். ஆனால் சஞ்சீவ் பட் 2002ல் பேசவில்லை.

**சஞ்சீவ் பட்**



2009ம் ஆண்டு சிறப்பு விசாரணை குழு விசாரணை நடந்த போது பிப்ரவரி 27 அன்று முதலமைச்சர் வீட்டில் நடந்த கூட்டம் பற்றி ஹரேன் பாண்டியா தீர்ப்பாயத்திடம் கூறியிருந்ததை முன்னிட்டு உளவுத்துறை அதிகாரிகளின் வாக்கு மூலங்களை சிறப்பு விசாரணைக் குழுவின் மல்ஹோத்ரா பதிவு செய்யும் போது நவம்பர் 2009ல் தான் முதல் முறையாக சஞ்சீவ் பட் தனது வாக்குமூலத்தை கொடுத்தார்.

அதுவரை பேசாததற்கான அவரது விளக்கம் என்னவென்றால், “கேள்வி கேட்கப்படும்போது மட்டும்தான் ஒரு காவல்துறை அதிகாரி பேச வேண்டும்” என்பது. அதை குறை சொல்ல முடியாதது தான். ஸ்ரீகுமார், ராகுல் சர்மா போன்றவர் கள் அதை ஒரு தார்மீக பிரச்சினையாக அரசியல் சட்ட பிரச்சனையாக பார்த்தனர். சஞ்சீவ் பட்டைப் பொறுத்த வரை தேவைப்படும் போது அவர் அதைச் சொல்வார்.

**குஜராத் இனப்படுகொலைகளில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பற்றிய மதிப்பீடுகள் வேறுபடுவதைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?**

எங்கள் கணக்குப்படி காணாமல் போனவர்களையும் சேர்த்தால் 1900-2000 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். நாங்கள் குற்றப்பத்திரிக்கை வாரியான எண்ணிக் கையை தொகுத்திருக்கிறோம். ஒரு மாதத்துக் குள் அவற்றை வெளியிடுவோம்.

இந்த ஆதாரபூர்வமான தகவலை, நாடாளுமன்றத்தின் முன்னும் வைக்க விரும்புகிறோம். இது தொடர்பான வரலாற்றை நேர் செய்ய வேண்டும்.

**நன்றி - வினவு**

# SP பட்டிணம் காவல் நிலையப்படுகொலையில் உண்மையை சொல்லுமா காவல்துறை ?

கடந்த வருடம் அக்டோபர் மாதம் 14ம் தேதி ராமநாதபுரம் மாவட்டம் SP பட்டிணம் காவல் நிலையத்திற்கு இழுத்துச் செல்லப்பட்ட செய்யது முகம்மது என்னும் இளைஞனை, அந்தக் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் காளிதாஸ் மிகக் கொடூரமாகத் துன்புறுத்திய பின் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்.

இது தொடர்பாக அந்தக் காவல் நிலையத்தில் (FIR No.) குற்ற எண் 91/14, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு (Cr.P.C.) 176(1)ன் கீழ் வழக்குப் பதிவு செய்து அந்த சார்பு ஆய்வாளர் காளிதாஸ் பணியிடைநீக்கம் செய்யப்பட்டு, ராமநாதபுர குற்றவியல் நீதித்துறை நடுவர் வேலுச்சாமி அவர்கள் விசாரணை மேற்கொண்டார்கள்.

அதே நேரம், சென்னை உயர் நீதிமன்ற மதுரைக்கிளையின் உத்தரவைத் தொடர்ந்து இந்த வழக்கு மேற்சொன்ன காவல் நிலையத்திலிருந்து CB-CID பிரிவிற்கு மாற்றப் பட்டு புலன்விசாரணை செய்யப் பட்டது.

இந்நிலையில் ராமநாதபுர குற்றவியல் நீதித்துறை நடுவர் வேலுச்சாமி அவர்கள் விசாரணை முடித்து **CB-CID** வசம் தன்னுடைய 35 பக்க விசாரணை அறிக்கை யைக் கொடுத்து இது அப்பட்டமான கொலை, உடனே அந்த காளிதாஸ் மீது கொலை வழக்குப் பதிய வேண்டுமென்று உத்தரவிட்டதன் பேரில், ஸுஸு பட்டிணம் காவல் நிலையத்தில் பதியப்பட்டிருந்த குற்ற எண். 91/14ல், F.I.R. பிரிவு 176(1), மாற்றப்பட்டு இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு (**IPC**)302(கொலை)ன் கீழ், அது கொலை வழக்காகப் பதியப்பட்டு விட்டதாக ஏப்ரல் மாதம் 18ம் தேதி வெளியான தி ஹிந்து, மாலைமலர் போன்ற நாளிதழ்களிலும் வேறு சில நாளிதழ்களிலும் செய்திகள் பிரசுரிக்கப் பட்டன.

ஆனால், நாம் விசாரித்த வரை அது போல ஏதும் நடக்கவில்லை என்று தெளி வானது. அப்படியானால் காவல்துறையினர் எந்த வழக்கும் பதியாமல் இது போல பொய்யான செய்திகளைப் பத்திரிக்கை களுக்கு கொடுத்திருக்கின்றனரா? என்பதை அறிய வேண்டி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அந்தத் தகவல்களைக் கோரியிருந்தோம்.

அதற்கு 28.04.2015 அன்று பதிலனுப்பி யுள்ள காவல் துறை அதிகாரிகள், SP பட்டிணம் காவல் நிலையத்தில் காளிதாஸ் மீது எந்த வழக்கும் பதியவில்லை என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து நாம் தி ஹிந்து ஆங்கில நாளிதழுக்கு விளக்கம் கோரி கடிதமும் அனுப்பியுள்ளோம்.

இது போல இல்லாததை இருப்பது போலவும், இருப்பதை இல்லாததுபோலவும் காவல்துறையினர் சொல்வது நமக்கு ஒன்றும் புதிதல்ல. ஆனால் பொதுமக்களாகிய நாம், காவல் துறையினர் சொல்வதை அப்படியே கண்ணை மூடிக்கொண்டு நம்பலாமா?

வெடி பொருட்கள் வைத்திருந்ததாக பொய்யான ஒரு நாடகத்தை அரங்கேற்றி 5 நபர்களை கைது செய்து, அதன் மூலம் ஒரு பேரியக்கத்தையே தடை செய்ய முயன்ற காலம் முதல் நாம் காவல்துறையின் செயல்களை நன்கு அறிந்திருப்பதால், இந்த விஷயத்தை தீர விசாரித்து பொதுமக்களுக்கு உண்மையைக் கொண்டு சேர்க்க வேண்டு மென்று முயன்றதில், அல்லாஹ் நமக்கு வெற்றியைத் தந்துள்ளான்.

இனியும் இது போல காவல்துறையினர் சொன்னால் அதனை ஒன்றுக்கு இருமுறை உறுதி செய்து விட்டு, அதன் பிறகு அவர்கள் சொல்லும் சங்கதிகளை செவியேறுங்கள்.

இல்லையேல் நாம் முட்டாள்களாகி விடுவோம்.

**நமது நிருபர் - முகம்மது ரிஸ்வான்**



# குஜராத்தான ஹரியானா. . ?

நமது நாட்டின் ஹரியானா மாநிலம்.

இந்த மாநிலம் நமது தலைநகர் டெல்லிக்கு பக்கத்தில் இருக்கின்றது.

இந்த ஹரியான மாநிலத்தில் அத்தாலி என்றொரு கிராமம், இந்தக் கிராமமே டெல்லியிலிருந்து 25 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கின்றது.

இங்கே பல நூறு ஆண்டுகளாக முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அங்கே வாழும் இந்துக்களும், பிற ஜாதியினரும் நல்ல உறவோடு அண்ணன் தம்பிகளாக வாழ்ந்து வருகின்றார்கள்.

அங்கே பெரும்பான்மை சமூகமாக ஜாட்கள்தாம் வாழ்ந்து வருகின்றார்கள்.

எல்லா ஜாதிகளுமாய் இணைந்து 13,000 பேர் வாழ்ந்து வருகின்றார்கள். அதில் 1000 பேர் முஸ்லிம்கள்.

இந்த கிராமத்தில் அன்று தொட்டே ஒரு பழக்கம். அது ஜாட்களின் குழந்தைகள் பெரும்பாலும் முஸ்லிம்களின் மடியிலும், வீடுகளிலும்தான் தங்கள் இளமைப் பொழுதைக் கழிப்பார்கள்.

இதில் ஜாட்களும், முஸ்லிம்களும் ஒரு வரலாற்றையே படைத்துவருகின்றார்கள்.

இந்நிலையில்தான் ஆர்.எஸ்.எஸ். வகுப்புவாத இயக்கம் அங்கே தன் விஷமப் பிரச்சாரத்தை தொடங்கியது.

சந்தடியில்லாமல் இம் மக்களை முஸ்லிம்கள் என்றும் அல்லாதவர்கள் என்றும் பிரித்து பிளந்து போடும் பிரச்சாரத்தை மேற்கொண்டார்கள். இந்தப் பிரச்சாரம் ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்புத் தொடங்கிய காலந்தொட்டே நடந்து வருகின்றது. எல்லோரிடமும் அன்புடன் வாழ்ந்த முஸ்லிம்கள் இதைக் கண்டு கொள்ளவில்லை.

சாதாரணமாக ஆர்.எஸ்.எஸ்.இன் விஷமப் பிரச்சாரம் உண்மையைச் சொன்னால் இந்தியாவின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வேட்டு வைக்கும்

இந்தப் பிரச்சாரம் இரகசியமாகவே நடை பெறுகின்றது.

இந்தப் பிரச்சாரங்கள் எந்த அளவுக்கு வெறுப்பும், காட்டும், கசப்பும் நிறைந்தது என்பதை நாம் அத்தாலியில் இப்போது நடந்த கலவரங்கள், குஜராத் இனப்படுகொலைகள், காசிம்புரா, பாகல்பூர், மும்பை, தமிழ்நாடு (1982), கர்நாடகா (1984), மீரட், முசாபர்நகர் போன்ற இடங்களில் நடக்கும் நிகழ்வு களிலிருந்துதான் அறிந்திடவும், தெரிந்திடவும் முடிகின்றது.

இந்த வெறுப்புப் பிரச்சாரத்தை வெளிக்காட்டிடும் ஓர் நிகழ்வுதான் மே25, 2015 இல் நடைபெற்றது. அத்தனை முஸ்லிம்களும் ஒட்டுமொத்தமாக விரட்டப்பட்டு விட்டார் கள்.

**விஷமத்தின் தொடக்கம்**

அத்தாலி கிராமத்தில் 1000 முஸ்லிம்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால் அவர்களுக்குத் தொழுகை நடந்திட ஓர் பள்ளிவாசல் இல்லை.

பொருளாதார ரீதியாக அவர்களை நடுத்தர மக்கள் என்று மட்டும் குறிப்பிடலாம். அவர் நீண்ட நாட்களாகச் சேர்த்து வைத்த சேமிப்புத் தொகையிலிருந்து பணம் தந்து ஓர் இடத்தை 2009 இல் வாங்கினார்கள். பள்ளிவாசல் ஒன்றை நிறுவி தொழுதிட.

இல்லையேல் அவர்கள் 13 கிலோ மீட்டர் கடந்து பாலாபாக் என்ற இடத்திற்கு வந்து தான் தொழுகையை நிறைவேற்றிட வேண்டும்.

2009 ஆம் ஆண்டு இடத்தை வாங்கிய உடனேயே அதில் ஒரு சிறு குடிசைப் போட்டு தொழுகையைத் தொடங்கினார்கள்.

அப்போது தான் அண்ணன் தம்பி களாய் வாழ்ந்தவர்களின் நயவஞ்சகம் முஸ்லிம்களுக்குத் தெரிந்திட வந்தது. ஆர்.எஸ்.எஸ்.ஆல் தூண்டப்பட்ட இந்துக்கள் அங்கே பள்ளிவாசல் வந்திடக் கூடாது என்று ஆட்சேபனைகளை எழுப்பினார்கள்.

முஸ்லிம்கள் தங்கள் கடந்த நட்பையும் அன்பையும் காட்டி இத்தனை தலை முறைக்குப் பின் நாங்கள் எங்கள் அடிப்படை கடமையை நிறைவேற்றிட ஓர் பள்ளிவாசலை



எழுப்புகின்றோம். தயவு செய்து ஆட் சேபனைகளை எழுப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டனர்.

ஆனால் வகுப்பு வெறியையே வளர்த்து வாழ்ந்து பழகிப்போன ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சார்ந்தவர்கள், சமாதானத்தின் பக்கம் அந்த மக்களைச் சாய்ந்திட விடவில்லை. அவர்கள் கலவரத்தைத் தூண்டிடவே முனைந்தார்கள்.

இதில் முஸ்லிம்கள் சமூக நல்லிணக்கத் தோடு அந்தப் பள்ளி வாசலை எழுப்பிட அந்த மக்களிடம், அதாவது அன்றுவரை நண்பர் களாக இருந்தவர்களிடம் மண்டியிட்டுக் கேட்டார்கள் என்கின்றது ஆங்கில இதழான பிரண்ட் லைன் ஏடு. பார்க்க பிரண்ட லைன் ஜூன் 26,2015. (இதில் நம்மால் கிஞ்சிற்றும் உடன்பட்டிட இயலவில்லை)

முஸ்லிம்கள், அந்த மக்கள் நமது இடத்தில் நமது பணத்தில் கட்டிடும் பள்ளிவாசலை அந்த மக்கள் தடுக்கமாட்டார் கள் என்றே எண்ணினார்கள்.

ஆனால், அந்த மக்கள் கீழறுப்பு வேலையைத் தான் செய்தார்கள். சந்தடி இல்லாமல் பள்ளிவாசல் கட்டுவதைத் தடுக்க வேண்டும் என்றொரு வழக்கைத் தொடுத்து விட்டார்கள்.

அதனால் நீதிமன்றங்களுக்கு அலைந் திட வேண்டிய அவலத்திற்கு ஆளானார்கள் முஸ்லிம்கள்.

மூச்சுவிடாமல் அலைந்தார்கள் நீதி மன்றங்களுக்கு. பள்ளிவாசலைக் கட்டிட அந்த ஏழை பாழைகள் வைத்திருந்த பணம் வழக்காடு மன்றங்களில் விரயமானது.

ஆனாலும் இறுதியில் வெற்றி பெற்றார்கள். முஸ்லிம்களுக்குப் பள்ளி

வாசலைக் கட்டிட எல்லா உரிமைகளும் இருக்கின்றது என்று மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. தீர்ப்புக் கிடைத்ததும் பள்ளிவாசலை கட்டிடும் முயற்சியில் தங்களை மீண்டும் ஈடுபடுத்தினார்கள் முஸ்லிம்கள்.

சுற்றி சுவர்களை எழுப்பிடும் வேலை நடைபெற்றது. பொறுத்திட இயலவில்லை ஆர்.எஸ்.எஸ். வகையறாக்களால். மாவட்ட நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து எஸ்.டி.எம். என்ற துணை மாவட்ட நீதிபதியிடம் வழக்கொன்றைப் பதிவு செய்தார்கள். முஸ்லிம்கள் தங்களால் இயன்றதையெல்லாம் தந்துதான் மீண்டும் பள்ளி வாசலைக் கட்டிட நிதி தந்தார்கள். ஆனால் இப்போது மீண்டும் நீதிமன்றங்களில் தங்கள் பணத்தை செலவு செய்தாக வேண்டும் என்றொரு நிலை.

ஆனால் என்ன செய்வது? ஆர்.எஸ்.எஸ்.இன் பிடியில் சிக்கிக் கொண்ட இதர சமூகத்தவர்கள் தரும் சிக்கல்கள், சிரமங்கள் இவற்றிலிருந்து விடுபட்டாக வேண்டும். அதனால் வயிற்றை கட்டி, வாயைக்கட்டி பணத்தைத் தந்து வழக்கை நடத்தினார்கள்.

துணை மாவட்ட நீதிமன்றத்திலும் வழக்கை வென்றார்கள். துணை மாவட்ட நீதிபதி தன்னுடையத் தீர்ப்பில் இப்படிக் குறிப்பிட்டார். முஸ்லிம்கள் தங்கள் பள்ளி வாசலைக் கட்டி எழுப்புவதற்கு குறுக்கே நிற்பதற்கு எதுவுமில்லை. இதனிடையே ஹரியானாவில் 2014 இல் நடந்த தேர்தலில் ஆர்.எஸ்.எஸ். முழுநேர ஊழியரான மனோகர் லால் கட்டார் என்பவர் முதலமைச்சர் ஆனார்.

மே 10ஆம் நாள் (2015) அன்று தீர்ப்பு வந்தது. முஸ்லிம்களோ தீர்ப்பு வந்ததும் பள்ளி வாசலை மீண்டும் எழுப்பும் பணிகளில் தங்களை ஈடுபடுத்தினார்கள்.

எல்லாச் சுவரும் எழுப்பப்விட்டது. மேற்கூரை மட்டும் தான் போடப்பட வேண்டும். அது முடிந்தால் ஜூன் திங்களில் தொடங்கவிருக்கும் நோன்பு கால சிறப்புத் தொழுகைகளை தங்கள் சொந்த ஊரிலேயே நிறைவேற்றிடலாம் என்ற முனைப்புடன் பணிகளைத் தொடர்ந்தார்கள். எல்லா நிலையிலும் கட்டுமானம் நடந்து கொண்டிருந்த பள்ளிவாசலில் தொழுதும் கொண்டிருந்தார்கள்.

இந்நிலையில்தான் ஹரியானாவின் பாரதீய ஜனதா கட்சியின் முதலமைச்சர் முன்னாள் ஆர்.எஸ்.எஸ். முழு நேர ஊழியர் மனோகர் லால் கட்டார் அந்தப் பகுதிக்கு வந்தார். வந்தவர் ஆர்.எஸ்.எஸ்., பஜ்ரங்தளம் ஆகிய அமைப்புகளின் தலைவர்களை அழைத்து இரகசிய கூட்டம் ஒன்றை நடத்தி சென்றார். (Radiance Views Weekly 7-13 June 2015)

மத்தியில் 2002 குஜராத் இனப்படு கொலை புகழ் மோடியின் ஆட்சி மாநிலத்தில், அதே போன்ற முழுநேர ஊழியரின் ஆட்சி.

அன்று மோடி எப்படி சங்கப்பரிவாரக் கும்பலை உற்சாகப்படுத்தினாரோ அதே போல் மாநிலத்தில் முதலமைச்சர் அத்தாலி மக்களின் தாலிகளை அறுத்திட எற்பாடு செய்தார்.

மே 25 ஆம் நாள் மாலை தொழுகைக் காக முஸ்லிம்கள் (அசர்தொழுகைக்காக) முஸ்லிம்கள் பள்ளிவாசலை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். வரும் வழியில் பஜ்ரங்தள், ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள், கத்தி, வாள், கேஸ் சிலிண்டர் இவற்றையெல்லாம் ஒன்று திரட்டி கொண்டு வந்தார்கள்.

பல பெண்கள் கச்சைக் கட்டிக் கொண்டு இந்த ஆயுதங்களைப் பகிர்ந்து தந்து கொண்டிருந்தார்கள்.

முஸ்லிம்கள் இவை தங்களைத் தாக்கிடத்தான் என்பதை உணர்ந்தார்கள். அதனால் காவல் நிலையத்திற்குத் தொடர்ந்து தொலைபேசியில் செய்திகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

காவல் நிலையம் ஆறு கிலோ மீட்டர் தொலைவில் தான் இருந்தது. ஆனால் காவல் நிலையத்திற்கு ஏற்கெனவே இந்துத்துவ தீவிரவாதிகள் செய்திகளைச் சொல்லி விட்டார்கள். அதனால் காவல்துறையினர் எப்போது தொலைபேசி தொடர்பு கொண்டாலும் இதே வந்து கொண்டிருக் கின்றோம் என்றே பதில் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

(ஆதாரம் : Front Line, June 26, 2015, Radiance Views Weekly 7-13 June 2015)

அசர் என்ற மாலைத் தொழுகையை தொழுதுவிட்டு வெளியே வந்த முஸ்லிம்களை தாக்கிடத் தொடங்கினார்கள்.

முஸ்லிம்கள் அடிகளை வாங்கிக் கொண்டே விரண்டோடினார்கள்.

வயதான முஅத்தின் - பள்ளி ஊழியர், வயதான நிலையில் நம்மைத் தாக்கிட மாட்டார் என நம்பினார். அத்தோடு அங்கு ஆயுதங்களோடு நின்றவர்களில் பலர், அவருக்குப் பழக்கமானவர்கள், சிலர் சற்று நெருக்கமானவர்கள், அதனால் தனக்கு எந்த பாதகமும் நடக்காது என்றே நினைத்தார்கள்.

ஆனால் ஒரு பெண் தீவிரவாதியின் தலைமையில் வந்த அந்த ஆண்கள் அந்த வயதான முஅத்தினின் அதாவது பள்ளி ஊழியரின் கைகளைப் பிடித்து இழுத்து வந்து கைவிரல்களைத் தாங்கள் கொண்டு வந்த கோடாரியால் துண்டித்தார்கள். அவர் மூர்சையாகி வீழ்ந்தார். அப்படியே போட்டு விட்டார்கள். இரத்தம் வழிந்தோடிக் கொண்டே இருந்தது.

அடுத்து மூலையில் பதுங்கிக் கொண்டிருந்த இமாமமைப் பிடித்து வந்தார்கள். அவருடைய குதிகாலைக் தாங்கள் கொண்டு வந்த கோடாரியால் வெட்டித் துண்டாக்கினார்கள்.

அப்படியே போட்டுவிட்டுச் சென்றார்கள். அவருடைய காலிலிருந்து இரத்தம் ஓடிக்கொண்டே இருந்தது.

இப்படி உடலின் உறுப்புகளை வெட்டி இரத்தத்தை கசியவிட்டால் அவர்கள் சற்று நேரத்தில் தாமாக இறந்து விடுவார்கள் என்று இந்துத்துவ தீவிரவாதிகளுக்குத் தரப்படும் பயிற்சிகளுள் ஒன்று என்பது பின்னர் தெரியவந்தது.

பள்ளிவாசல் ஊழியர்கள் இரண்டு பேரையும் வெட்டி விட்டு தாங்கள் கொண்டு வந்த காஸ் சிலிண்டரை வைத்து வெடிக்கச் செய்தார்கள். கட்டுமானம் நடந்து கொண்டிருந்த பள்ளிவாசலின் பகுதிகள் இடிந்து தரை மட்டம் ஆனது. இடிபாடுகளுக்கிடையில் இரண்டு ஊழியர்கள்.

இவற்றையெல்லாம் கண்ணுற்ற முஸ்லிம்கள் சற்று பலமாக கட்டப்பட்ட வீடுகள் என்று தாங்கள் நினைத்த முஸ்லிம் வீடுகளில் சென்று தஞ்சம் புகுந்தனர்.

காஸ் சிலிண்டர்கள் அங்கேயும் நகர்ந்து வநதனர். இதனால் பின் வாசல்கள்



வழியாகவும் முன் வாசல் வழியாகவும் முஸ்லிம்கள் சிதறி ஓடினார்கள்.

அடுத்த நாளும் சில வீடுகளில் மின் விசிறிகள் சுழன்று கொண்டிருந்தன. இது அவர்கள் எந்த நிலையில் தங்கள் வீடுகளை விட்டுவிட்டு ஓடினார்கள் என்பதைக் காட்டுகின்றது.

பூட்டி இருந்த வீடுகள், பூட்டாத வீடுகள் எல்லாமே கேஸ் சிலிண்டர்களால் இடித்துத் தள்ளப்பட்டன. ஓரிரு மணி நேரத்திற்குள் பள்ளிவாசலைச் சுற்றி இருந்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான 20 வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன.

இதனிடையே பள்ளிவாசலுக்குப் பக்கத்து இடத்தில் கோயில் ஒன்றையும் கட்டி முடித்து பூஜா, புனஸ்காரங்களையும் தொடங்கிவிட்டனர்.

தப்பிப் பிழைத்த பல முஸ்லிம்கள், காவல் நிலையத்தில் தஞ்சம் புகுந்தனர்.

சில இளைய இந்துத்துவ தீவிரவாதிகள் முஸ்லிம் பெண்களைக் கற்பழிக்கவும் செய்தனர். இதில் வயதான மூதாட்டி ஒருவர் “என் மடியில் தவழ்ந்து வளர்ந்த பையன் ஒருவன் என்னைக் கற்பழிக்கவும், கொலை செய்திடவும் முயற்சி செய்தது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது என்றாள்.” எல்லாம் முடிந்த பின்னர் காவல் துறையினர் வந்தார்கள். மறுநாள் கொலை பாதகச் செயல் களைச் செய்தவர்கள் கத்திகளோடும், வாள்களோடும் உலா வந்து கொண்டிருந்தார்கள்.

சிலரை காவல்துறையினர் பிடித்துச் சென்றார்கள். ஆனால் உடனே விட்டு விட்டார்கள்.

**தொடர்ச்சி 56ம் பக்கத்தில். . . .**

# தலித் மக்கள் வாழத்தகுதியற்றவர்களா?

**வே**லூர் மாவட்டம், அரக்கோணம் தாலுகாவிலுள்ளது அத்திப்பட்டு என்னும் கிராமம். ஊரினுள்ளே ஆதிக்க சாதியினரும், காலனியில் தலித் மக்களுமாக இங்கு வாழ்கிறார்கள். இவர்களின் முக்கியத் தொழில் விவசாயம்.

அத்திப்பட்டு கிராமத்திலிருந்து சுமார் 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ளது பூண்டி. இங்கு தனியார் மணல் குவாரியில் பொறுப்பிலிருக்கும் ஆதிக்க சாதியைச் சார்ந்த கரி காலன் என்பவரால் பிரச்சினை விசுவரூபமெடுத்துள்ளது.

பூண்டியிலிருந்து மண்ணெடுத்துச் செல்லும் லாரிகள், ஊரைச் சுற்றிச் செல்ல வேண்டுமென்ற நிபந்தனையில் மாவட்ட நிர்வாகத்திலிருந்து மண் குவாரிக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஆதிக்க சாதியைச் சார்ந்த கரிகாலன், நிபந்தனைகளையெல்லாம் காற்றில் பறக்க விட்டுவிட்டு, ஊருக்குள்ளேயே மணல் லாரிகளைக் கொண்டு செல்ல உத்தரவிட்டுள்ளார்.

தினமும் பல லாரிகள் செல்வது அங்குள்ள பள்ளிக்குழந்தைகளுக்கும் பொது மக்களுக்கும் இடையூறாக இருந்ததால், அத்திப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த சில இளைஞர்கள் அதனை காவல் நிலையத்திற்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் கொண்டு சென்றுள்ளனர். அவர்களின் அந்த முயற்சி செவிடன் காதில் ஊதிய சங்காகிப்போனதால் அவர்களே களமிறங்கி ஊருக்குள் வரும் லாரிகளை வழிமறித்து இனி ஊருக்குள் லாரிகள் வந்தால் சிறைபிடித்து விடுவோமென்று எச்சரிக்கை செய்து அனுப்பியுள்ளனர்.

இதனை செவியுற்ற கரிகாலன், தலித்துக்கள் நம்மிடமே வாலாட்டுகின்றனரா என்று எழுந்த அகங்காரத்தால் இந்த விஷயம் ஊர் பாதை, மணல் என்பதைத் கடந்து சாதி உணர்வாகப் பொங்கியதன் விளைவு, தலித்துக்கள் வசிக்கும் காலனிக்கு ஒரு பாடம் புகட்ட முடிவு செய்துள்ளார். உடனே அது தொடர்பாக காவேரிபாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் காண்டீபன் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் மோகனுக்கு கொல்லைபுறமாக தகவல் சொல்லப்பட்டு (அவர்களிருவரும் ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர்கள்). அவர்களிருவரும் அந்த தலித் காலனி இளைஞர்களின் நியாயமான பேராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க சூளுரைத்துள்ளனர்.

அதன் தொடர்ச்சி கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 22ம் தேதி இரவு சுமார் 11 மணியளவில் காலனிக்குள் நுழைந்த காவல் படையினர் கையில், பூவரசன் தவிர வேறு இளைஞர்கள் யாரும் சிக்கவில்லை.

பூவரசனை அவருடைய வீட்டிலேயே பிடித்த காவல்படை, அங்கேயே அவரை நையப்புடைத்து இழுத்துச் சென்றுள்ளனர். காவல் நிலையம் சென்ற பிறகு, கத்திவிடாமலிருக்க வேண்டி வாயில் இரண்டு லத்திகளை வைத்து, மிருகத்தை விட கேவலமாக அடித்துத் துவைத்துள்ளனர். அடிக்கும் போதே பரத்தே... பையா, உங்களுக் கெல்லாம் அவ்வளவு கொழுப்பாடா? என்று கேட்டுக் கொண்டே விழுந்தது மொத்த அடியும் உதையும்.

அடியும் உதையும் முடிந்து அவர்கள் கைகளெல்லாம் வலி எடுத்தவுடன், நாயைக் கட்டி வைப்பதைப் போல பூவரசனை கட்டி வைத்துள்ளனர். வெளியே நின்றிருந்த அவருடைய அப்பா அம்மா மற்றும் உறவினர்களை பூவரசனை சந்திக்க அனுமதிக்க வில்லை.

அதன் தொடர்ச்சியாக அவர் மீது பொய்யான வழக்கைப் பதிந்தனர்(குற்ற எண்.393/2014, U/s.294(b) & 506(i) of IPC). காவல்துறையினர் அந்த இரவு நடத்திய காட்டுமிராண்டி தாக்குதலால் பூவரசனுக்கு ஏற்பட்ட கால் எலும்பு முறிவைத் தொடர்ந்து, அவரை வாலாஜாபேட்டை குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைக்க அவசர சிகிச்சை ஊர்தியில் அழைத்துச் சென்றுள்ளனர்.

நீதிமன்றத்தில் பூவரசனை குற்றவியல் நடுவர் அழைத்த பொழுது, அவர் அவசர

ஊர்தியில் இருப்பது சொல்லப்பட்டதும், நான் அவரை அந்த வாகனத்திலேயே சந்திக்கிறேன் என்று அவர் சொன்னதும், ஆய்வாளர் காண்டீபனும் அவருடைய தொ(கு)ண்டர் படையும் அந்த அவசர சிகிச்சை ஊர்தியையே கடத்திச் சென்றுள்ளனர்.

அந்த வாகனத்தில் பூவரசனுடன் அவருடைய அப்பாவும் இருந்துள்ளார். மருத்துவமனைக்கு அல்லாமல் அவசர சிகிச்சை ஊர்தி வேறெங்கோ செல்வதை உணர்ந்த பூவரசனும் அவருடைய அப்பாவும் வாலாஜாபேட்டை குற்றவியல் நீதிமன்றத்தி லிருந்த அவர்களுடைய வழக்குரைஞருக்கு தகவல் கொடுத்துள்ளனர். உடனே அந்த வழக்குரைஞர் அவருடைய அலைபேசியை குற்றவியல் நடுவரிடமே கொடுத்து நிலைமையை விளக்கியதும் குற்றவியல் நடுவர் அவர்கள் அலைபேசியை கடத்தல் மன்னன் காண்டீபனிடம் கொடுக்கச் சொல்லி, இன்னும் சில மணித்துளிகளில் நீங்களும் அந்த அவசர சிகிச்சை ஊர்தி அதனுள் இருப்பவர்களுடன் இங்கு வரவில்லையென்றால் நிலைமை பாராதூரமாகிவிடும் என்று சொன்ன உடன் காண்டிபன் நீதிமன்றம் சென்றுள்ளார். அதற்கிடையே, “பூவரசா, நான் செய்த தெல்லாம் தவறு தான் என்னை மன்னித்து விடு. நான் அடித்ததை நீதிபதியிடம் சொல்லி விடாதே” என்று மன்னிப்பு கேட்டுள்ளார்.

ஆனால் அவசர சிகிச்சை ஊர்தியில் குற்றவியல் நடுவர் அவர்களை சந்தித்த பூவரசன் தனக்கு நேர்ந்த அனைத்து விதமான சித்திரவதைகளையும், ஜாதியைச் சொல்லி இழிவு படுத்தியதையும், சொன்னதைத் தொடர்ந்து அவரை பிணையில் விட்ட குற்றவியில் நடுவர், அவருக்கு தகுந்த சிகிச்சையளிக்கவும் உத்தரவிட்டார்.

அதன் தொடர்ச்சியாக அரசு மருத்துவ மனைக்கு பூவரசனை அழைத்துச் சென்ற இந்த காவல் கும்பல், அங்கும் மருத்துவர்களுடன் கைகோர்த்துக் கொண்டு தங்களுடைய சேட்டையைக் காண்பித்துள்ளனர். மருத் துவர்களும் உனக்கு ஒன்றுமில்லை. நீ நன்றாக இருக்கிறாய் என்னும் ரீதியில் எந்த சிகிச்சை யும் மேற்கொள்ளாமல் மெத்தனமாக பொழுதைக் கடத்தியுள்ளனர். அதன் பின் ஒரு வழியாக பூவரசன் குடும்பத்தினர் வேறொரு மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். அங்கு கால் முறிவு, முதுகெலும்பு பிரச்சினை போன்ற காயங்களுக்கு சிகிச்சையளிக்கப் பட்டுள்ளது.

அதன் பின்னர் இந்தக் கொடுமை களையெல்லாம் விளக்கி 26.09.2014 அன்று வேலூர் மாவட்ட காவல் கண்காணிப் பாளருக்கும், உள்துறை செயலாளருக்கும் பூவரசன் புகார் அனுப்பியுள்ளார். அந்தப் புகாரின் மீது எந்த நடவடிக்கையும் மேற் கொள்ளப்படாததால் உட்கோட்ட துணைக் கண்காணிப்பாளர், நுண்ணிறிவுப் பிரிவு (DSP, CBCID) பதவிக்குக் குறையாத ஒரு அதிகாரியைக் கொண்டு இந்தப் புகாரை விசாரணை செய்ய வேண்டும். மேலும் எனக்கு உண்டான இழப்புகளுக்கு ரூபாய் 50 லட்சம் நஷ்டஈடு தரவேண்டும் என்ற கோரிக்கையுடன் சென்னை உயர்நீதி மன்றத்தில் செயலுறுத்தும் நீதிப் பேராணையை (Writ of Mandamus no.33793/2014) பூவரசன் தாக்கல் செய்துள்ளார்.

அதனை விசாரித்த சென்னை உயர்நீதி மன்றம் பூவரசனுக்கு நிகழ்ந்த கொடுமைகளை ஊர்ஜிதப்படுத்துமளவு சாட்சியங்களுள்ள தென்றும் அவருக்கு நிகழ்ந்த கொடுமைகள் குறித்து முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்து உட்கோட்ட துணைக் கண்காணிப்பாளர், நுண்ணிறிவுப்பிரிவு பதவிக்குக் குறையாத ஒரு அதிகாரியைக் கொண்டு விசாரணை செய்ய வேண்டுமென்றும், மேலும் பூவரசன் மீது பதியப்பட்ட வழக்கையும் குற்ற எண். 393/ 20914 - காவேரிப்பாக்கம் காவல் நிலையம்) அதே அதிகாரி விசாரணை செய்ய வேண்டு மென்றும் அவருக்கு உண்டான காயங்களுக்கு இடைக்கால இழப்பீடாக 2 லட்சமும் வழங்கி இடைக்கால உத்தரவை நீதிபதி சிவஞானம் அவர்கள் கடந்த பிப்ரவரி 6 அன்று பிறப்பித்துள்ளார்கள்.

அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதி லிருந்து எந்நேரமும் பூவரசன் வீட்டிற்கு காவல் துறையினர் படையெடுத்தவண்ணமும், சமூக விரோதிகளைக் கொண்டு மிரட்டியும், 60 லட்சம் ரூபாய் வரை பேரம் பேசி பணத்தாசை காண்பித்தும், எல்லா வகை யிலும் அவருக்கு நிம்மதி கொடுக்கக் கூடாதென்ற எண்ணத்தில் நடந்து கொண்டுள்ளனர்.

சம்பவம் நடந்து கிட்டத்தட்ட 9 மாதங்கள் கடந்த நிலையிலும் அவரும் அவருடன் லாரிகளை வழிமறித்த விவேகானந்தன் என்பவரும் அவர்களுடைய வீடுகளுக்குச் செல்லாமல் தலைமறைவாகவே வாழ் கின்றனர்.

நீதிமன்றம் உத்தரவிட்டு 3 மாதங் கள்கடந்த நிலையிலும் அந்தக் காவல் கும்பல் இன்னும் காவேரிபாக்கம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து நீதியை நிலை நாட்டுகிற தென்றால் இன்னும் CBCID விசாரணை தொடங்கவில்லை என்பது புலனாகிறது.

அந்த நீதிமன்ற உத்தரவில் குறிப்பிட்டி ருந்ததைப்போல, லலிதகுமாரி எதிர் உத்திர பிரதேச அரசு மற்றும் பலர் என்னும் வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய வழிகாட்டுநெறி முறைகளின் படி, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 154ன், கீழ் காவேரிப்பாக்கம் ஆய்வாளர் சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்கள் மீது இன்னுமா முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்யப்படவில்லை?

நீதிக்காகப் போராடும் பொழுது, ஜாதியை சொல்லியடித்தால் என்ன செய்வது?

இஸ்லாத்தின் செய்திகள் எட்டாத, அத்திப்பட்டு போன்ற கிராமங்கள் இன்னுமா இருக்கின்றன?

**நமது நிருபர் - முஹம்மது ரிஸ்வான்**

---

**53ம் பக்கத்தின் தொடர்ச்சி. . .**

காவல்துறையினரின் கண்களின் முன்னாலேயே ஆலோசனைக் கூட்டம்ட ஒன்றை நடத்தினார்கள், கொலைகள், கொள்ளைகள் ஆகியவற்றை செய்தவர்கள்.

மொத்த முஸ்லிம்களையும் அப்புறப்படுத்திவிட்ட மமதையில் இந்துத்துவ தீவிரவாதிகளின் அமைப்பாகிய பஜ்ரங்தளம், கலவரம் நடந்த அடுத்த நாளே வீதிவீதியாக சென்று உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டு வந்தனர்.

முஸ்லிம்கள் தங்கள் அண்டை வீட்டார் ஆயுள் கால நண்பர்கள் இவர்கள் தங்களிடம் அந்த நாளில் நடந்து கொண்டதைப் பார்த்து வேதனைப்பட்டனர். வெட்கப்பட்டனர். இனி நாங்கள் அந்தக் கிராமத்திற்கு செல்லமாட்டோம் என்று கூறியுள்ளனர்.

## பத்திரிகைகள் பார்த்த விதம்

பத்திரிகைகள் பல ஹரியானா அத்தாலியில் நடந்ததைக் கோரமாக குறிப்பிட்டிருந்தன.

ஆனால் அத்தனை பத்திரிகைகளும் கலவரம், எதிர்வரும் தேர்தலை மையப்படுத்தி நடந்தது எனப் புதிய காரணத்தைக் கற்பித்தன.

உண்மை அதுவல்ல, இந்து மகாசபை காலந்தொட்டு ஆர்.எஸ்.எஸ். பஜரங்தளம் ஆகியவை வழியாக சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்பு பிரச்சாரங்கள் நடந்து கொண்டிருக்கின்றது. இது 200 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கின்றன. இந்த வெறுப்புப் பிரச்சாரங்களின் விளைவுதான் இந்த கலவரங்கள். அதிலும் பெண்களே முன்னின்று நடத்தும் கலவரங்கள். பெண்களுக்கும் பெரிய அளவில் இராணுவ பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வந்த இதழ்களில் பிரண்ட் லைன் என்ற ஏடுதான் பெண் தீவிரவாதிகளின் அட்டகாசங்களைத் தலைப்பாகத் தந்து கட்டுரையை வெளியிட்டது.

இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவெனில் வட இந்தியாவில் காவல் துறை முற்றாக இந்துத்துவத் தீவிரவாதிகளின் கைத்தடியாக செயல்பட்டு வருகின்றன.

மோடி பதவி ஏற்ற பின், நீதித்துறையில் இந்துத்துவத் தீவிரவாதிகளால் நிரப்பப்பட்டு வருகின்றன.

தமிழகத்தைச் சார்ந்த சதாசிவம் முதன்மை நீதிபதியாக இருந்து பின்னர் பதவிப் பிச்சைகளுக்காக அலைந்து கிடைத்ததை யெல்லாம் கட்டிக் கொண்டது. நீதித் துறையை நிதித்துறையாக மாறிப்போனது. நீதிதுறையின் அவமானம்.

இதில் சிறுபான்மையினர் தங்கள் பாதுகாப்பிற்கு என்ன செய்வது என தத்தளித்து நிற்கின்றார்கள்.

மோடி ஆட்சியில். . . . .?

**எம்.ஜி.எம்.**

# பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி

**ஆங்கிலம் : கரன் ஆம்ஸ்டிராங் தமிழில் மு. குலாம் முஹம்மத்**



**இன்றைய நவீன உலகைப் பற்றி யார் மேற்கொள்ளும் பார்வையும் முழுமையானதோர் பார்வையாக அமைந்திடாது அவர் இஸ்லாத்தை புரிந்திடவில்லை என்றால்,**

**ஆனால், இஸ்லாத்தைப் புரிந்திட வேண்டும் என்றால், நாம் முஹம்மத்(ஸல்)ஐ புரிந்திட வேண்டும். முஹம்மத்(ஸல்) ஐ ஓர் இறைத்தூதர் என்ற அளவிலும், ஒரு மனிதர் என்ற அளவிலும் புரிந்திட வேண்டும்.**

**இந்த உலகிற்கு மதங்களைக் கொண்டு வந்தவர்களில் மிகவும் அதிகமாக அறியப் படுபவர் முஹம்மத் (ஸல்) அவர்கள். அவர்களைப் பற்றி ஏராளமான இலக்கியங்கள் கிடைக்கின்றன. அவற்றில் மிகச் சில இலக்கியங்களே அவரது வாழ்க்கையை நமக்கு நிறைவான கோணத்தில் நமக்குச் சொல்லுகின்றன. எஞ்சியன வேண்டுமென்றே திரிக்கப்பட்டு தவறான எண்ணங்களையும், சிந்தனைகளையும் விதைக்கின்றன.**

**ஆனால் கரன் ஆம்ஸ்டிராங்கின் இந்த வரலாறு அந்தக் கண்ணியமிக்க மனிதரின் வாழ்க்கையை நடுவு நிலையோடு நம்முன் சமர்ப்பிக்கின்றது.**

**இந்த நூல் பற்றி ஆங்கில நாட்டு பத்திரிகை - SUNDAY TIMES**

# மக்கத்து மக்களின் இன்னொரு குணம்

பாலைப் பெருவெளியில் வாழும் மக்கள் எந்தச் சூழ்நிலையையும் தாங்கிடும் நெஞ்சுரம் கொண்டவர்களாக இருந்திட வேண்டும். எந்தச் சூழ்நிலையையும் தாங்கிக் கொண்டு நம்மால் முன்னேற முடியும் என்ற நம்பிக்கை, மனவலிமை அவர்களுக்கு முக்கியம்.

ஏனெனில் எப்போதும் மனித வாழ்க்கைக்கு எதிரான சூழ்நிலையைத் தான் அவர்கள் எதிர் கொள்ள வேண்டியிருந்தது. பாலைவனத்தில் அந்த மனவலிமை உடையவர்களே அங்கே வாழ்ந்திட முடிந்தது.

ஆனால் அந்தக் காட்டரபிகள் இந்த மனவலிமையை ஆணவமாக ஆக்கிக் கொண்டு அடாத செயல்களைச் செய்து கொண்டிருந்தார்கள். அடுத்தவரை அடித்துப் பிடுங்கித் தின்பதைத் தங்கள் வழக்க மாகவும், வாழ்க்கைப் போக்காகவும் ஆக்கிக் கொண்டார்கள்.

அவர்கள் வீண் பெருமைக்காகவும், வெற்றுக் கௌரவர்த்திற்காகவுமே வாழ்ந் தார்கள்.

இந்த ஆணவம், பெருமை இவற்றை யாரேனும் சீண்டிவிட்டால் அல்லது இடறி விடுவார்கள் என அவர்கள் கருதினால்

உடனேயே வெகுண்டெழுவார்கள். ஆயிரம் கொலை செய்திடவும் அஞ்ச மாட்டார்கள். ஒரு வீரன் தன்னைத் தாக்கிய பின்னரே தன் எதிரியைத் தாக்கிட வேண்டும் என்பது ஒரு வீரனுக்கு அழகல்ல. மாறாக தன்னைத் தாக்கிடும் முன்பே தன் எதிரியைத் தாக்குபவனே மாவீரன் எனப் பொருள்பட பாடிய கவிதைகள் ஏராளம். இவை அன்று புழக்கத்திலும் இருந்தன.

இப்படி மனிதனை மனிதன் மாய்க்கும் பண்பற்ற காட்டுமிராண்டித்தனத்தை அவர்கள் கௌரவம், வாழ்வின் நோக்கம் என்றெல்லாம் எடுத்துக் கொண்டார்கள்.

இப்படி அநியாயமான சண்டைகளில் செத்து மடிபவர்கள், தங்கள் மரணங்களுக்குக் காரணம் கண்டுபிடித்திட இயலவில்லை. இப்படித்தான் வாழ்க்கை என எடுத்துக் கொண்டார்கள். இதற்கு விதி எனப் பெயர் வைத்தார்கள். அதன் நடைமுறை விளக்கம் வெந்ததை உண்போம், வந்ததை அனுபவிப்போம், வெட்டினால் மடிவோம் என வாழ்ந்திட தலைப்பட்டார்கள்.

இந்த உலகில் இருக்கும் போது யாரேனும் தாக்கி மடிவதற்குள் அனுபவித்து விடுவோம் என அனுபவிக்கத் தலைப் பட்டார்கள்.

அவர்களுக்கு வாழ்க்கையை அனுபவிப்பது என்பது மதுவிலும், மங்கையிலும் மட்டற்றுத் திளைப்பதுதான். ஆகவே, அவர்கள் அந்தக் காட்டரபிகள் எந்த ஒழுக்கத்தையும் பற்றிக் கவலைப்படவில்லை.

இந்த குளறுபடியான வாழ்க்கையிலிருந்தும் கொலைபாதக வாழ்க்கையிலிருந்தும் தப்பித்து வேறு வகையான அமைதியான வாழ்க்கையை அமைத்திட சிலர் முன்வந்திடச் செய்தார்கள். இதற்காக இவர்கள் முதன் முதலில் இந்தக் குரூர சூழ்நிலையிலிருந்து வெளியேறிடத் துடித்தார்கள்.

பாலைவனத்தின் இதரப் பகுதிகளில் சென்று குடியேறிடத் தலைப்பட்டார்கள். ஆனால் அந்தப் பகுதிகளில் தண்ணீர் கிடைப்பது மிகவும் கடினமானது. அத்தோடு மழைக்காலம் என்றொன்று இல்லை என்றும் ஆனது. அப்படியே பொய்த்தாலும் எப்போது பெய்யும், எப்போது பொய்க்கும் என்பதை அறிந்திடவில்லை. விவசாயத்தை நம்பிட இயலாது என்பதால் வயிற்றுப் பிழைப்பிற்கு எதுவும் இல்லை என்றானது.

ஆகவே மக்காவை விட்டு விட்டு வெளியே சென்று குடியமர்வது என்பது அந்த மக்களுக்கு முடியாத ஒன்றாகவே இருந்தது.

அவர்கள் குலங்களாகவும், கோத்திரங்களாகவும் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். அதனால் குலம் ஒன்றாக இடம் பெயர்ந்து வாழ்ந்தால் மட்டுமே அவர்களால் வாழ்ந்திட இயலும் என்ற நிலை.

இடம் பெயர்ந்து வாழ்ந்திட விழையும் குலத்தவர்கள் மிகவும் வசதி படைத்தவர்களாக இருந்தால் மட்டுமே அது முடியும். அதாவது வேறு இடங்களில் சென்று குடியமர்ந்திட இயலும் என்ற நிலை.

ஆனால் தாயீஃப், என்ற இடத்திற்கு குடிபெயர்ந்து சென்றவர்கள், அங்கே தங்களைக் குடியமர்த்திக் கொண்டு சற்றே செழிப்பாகவும் அமைதியாகவும் வாழ்ந்திட முடிந்தது.

இன்னும் சில கோத்திரர்கள் ரோம பைசாந்தியர்களின் பக்கத்திலேயே போய் விட்டார்கள். அங்கே இருந்தவர்கள் ரோமாபுரியின் எல்லையோரங்களில் அவர்களைக் குடியமர்த்தினார்கள். அவர்களைக் கொண்டு தங்கள் எல்லைகளைப் பாதுகாத்திடும் அளவில் பார்த்துக் கொண்டார்கள்.

ஏதேனும் தாக்குதல் நடந்தால் அதாவது, ரோமப் பேரரசு மீது ஏதேனும் தாக்குதல் நடந்தால் அது முதலில் இந்த நாடோடி அரபுக்கள் மீதுதான் நடக்கும். இவர்களைத் தாண்டி ரோமாபுரிக்குள் எதிரிகள் படை புகுந்திடும் முன் ரோமர்கள் சுதாரித்துக் கொள்வார்கள். தங்களைத் தயார்படுத்திக் கொள்வார்கள்.

இப்படி இந்த மக்களை ரோமர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள்.

இப்படித்தான் அரபுக்களின் கெடுபிடிகளிலிருந்தும், குரூரமான கொலைகளிலிருந்தும் தப்பித்திட விழைந்தவர்கள், அதாவது வலிமை இல்லாத குலங்களும் கோத்திரங்களும் வாழ்ந்திட முடிந்தது.

இந்த நிலையில்தான் ஓர் புதிய உத்தியை அரபுக்கள் கண்டு பிடித்தார்கள்.

இதனை அடுத்த இதழில் காணலாம்.

இன்ஷா அல்லாஹ்!

# தரீக்குல் குர்ஆன்



இல்யாஸ் ரியாஜி

**2:114**

**இன்னும் அல்லாஹ்வுடைய பள்ளிவாசல்களில் அவனுடைய திருப்பெயர், அவற்றில் புகழப்படுவதைத் தடை செய்து, அவற்றைப் பாழ்படுத்துவதில் முயல்கின்றவனைவிடப் பெரிய அநியாயக்காரன் யார்? அவர்கள், அச்சமுடையவர்களாகவே தவிர அவற்றில் நுழைவது அவர்களுக்கு ஆகுமானதல்ல - (அவ்வாறில்லா) அவர்களுக்கு இவ்வுலகில் இழிவுண்டு மறுமையில் அவர்களுக்கு கடுமையான வேதனையுமுண்டு.**

**2:115**

**கிழக்கும், மேற்கும் அல்லாஹ்வுக்கே (சொந்தம்) நீங்கள் எந்தப் பக்கம் திரும்பினாலும் அங்கே அல்லாஹ்வின் (சங்கையான) முகம் இருக்கிறது. நிச்சயமாக அல்லாஹ் விசாலமானவன்; எல்லாம் அறிந்தவன்.**

இன்னும் அல்லாஹ் வுடைய பள்ளிவாசல்களில் அவனுடைய பெயரைச் சொல்லித்துதிப்பதைத் தடுத்து அவற்றைப் பாழாக்க முயல்பவனை விட பெரிய கொடுமைக்காரன் யார் இருக்க முடியும்! இத்தகையோர் அச்சத்துடனேயன்றி (பள்ளிவாசல்களில்) அவற்றில் நுழைவதற்குத் தகுதியற்றவர்கள். இவர்களுக்கு இவ்வுலக வாழ்வில் இழிவுதான். மறுமையில் இவர்களுக்கு கடும் வேதனையுண்டு.

கிழக்கும் மேற்கும் அல்லாஹ்வுக்கே சொந்தம். நீங்கள் எந்தப்பக்கம் திரும்பினாலும் - அங்கே அல்லாஹ்வின் திருமுகம் இருக்கிறது. அல்லாஹ் தாராளமானவன். எல்லாம் அறிந்தவன்.

**விரிவுரை**

ஷஹீது ஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார்கள்; இந்த (114-115) இரு வசனங்களிலும் முஸ்லிம்கள் தொழுகையில் முன்னோருக்கும் கிப்லா திசை மாற்றப்பட்ட சட்ட நிகழ்வுடன் தொடர்புடையவை என்பது தான் நம் அறிவுக்கு உடனடியாகத் தோன்றும் விளக்கம். (நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)

அல்லாஹ்வை வணங்குவதற்காக மனித இனத்துக்காக முதல் முதலில் பூமியின் மேல்

எழுப்பப்பட்ட முதல் இறையில்லம் கஅபா எனும் பள்ளிவாசல்.

நபி (ஸல்) அவர்களும் முஸ்லிம்களும் மக்காவில் வாழ்ந்து கொண்டிருந்த போது இந்த கஅபாவையே தொழுகையில் முன்னோக்கி வந்தனர்.

ஹிஜ்ரத் எனும் தியாகப் பயணம் மேற்கொண்டு மதீனாவுக்கு வந்த பின்னர் ஜெருசலத்தில் அமைந்துள்ள பைத்துல் முகத்தஸ் ஐ முன்னோக்கினர்.

மீண்டும் கஅபா வை முன்னோக்கித் தொழுதிட நபி (ஸல்) விரும்பினார்கள். அவர்களின் விருப்பத்தை அல்லாஹ் நிறைவேற்றினான். கஅபாவை நோக்கித் தொழுதிடக் கட்டளையிட்டான். இதுவே கிப்லா மாற்றம் எனப்படும்.

இவ்வாறு கிப்லா மாற்றப்பட்டது யூதர்களுக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில் பைத்துல் முகத்தலை புனித ஆலயம் என்று யூதர்களும் நம்பினர். தாம் புனிதமாகக் கருதும் ஆலயம் நோக்கி முஸ்லிம்கள் தொழுவது யூதர்களுக்குப் பெருமையாக இருந்தது.

எனவே கிப்லா மாற்றப்பட்டது யூதர்களுக்குப் பிடிக்கவில்லை. அது மாத்திரமன்று. மனிதர்கள் இறைவனை வணங்குவதற்காக பூமியில் முதலில் கட்டப் பட்ட கஅபா வை நோக்கி முஸ்லிம்கள் தொழுவது யூதர்களுக்கு அறவே பிடிக்க வில்லை.

கஅபாவை முன்னோக்கும் பெருமை மிக்க வாய்ப்பு யூதர்களாகிய நமக்குக் கிடைக்காமல் முஸ்லிம்களுக்குக் கிடைத்து விட்டதே என்று பொறாமை கொண்டனர்.

முஸ்லிம்கள் தொழுகையில் கஅபா வை முன்னோக்குவதை எப்படியாவது தடுக்க வேண்டும் என்று விரும்பினர். திட்ட மிட்டனர். சதி செய்தனர் யூதர்கள்.

இதையே அல்லாஹ்வின் திருப்பெயர் கூறப்படுவதைத் தடுப்பதற்காகவும் பள்ளி வாசல்களைப் பாழாக்க முயல்வதாகவும் இவ்வசனம் கூறுகிறது.

ஷஹீது ஸய்யத் குதுப் (ரஹ்) கூறுகின்றார்கள்:- இவ்விரு (114, 115) வசனங்களும் இறக்கப்பட்டதற்கு இஃதன்றி வேறு காரணங்களும் இருப்பதாக பல அறிவிப்புக்கள் உள்ளன.

எப்படிப் பார்த்தாலும் இவ்வசனம் பள்ளிவாசல்களில் அல்லாஹ்வின் திருப்பெயர் உச்சரிக்கப்படுவதைத் தடுப்பது அவற்றைப் பாழாக்க முயல்வது பற்றிப் பொதுவாகக் கூறுகிறது.

மேலும் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்வோருக்குரிய தண்டனை பற்றியும் கூறிவிட்டது.

“இத்தகையோர் அச்சத்துடனேயன்றி பள்ளிவாசல்களில் நுழைந்திடத் தகுதியற்றவர்கள்” என்கிறது.

அதாவது அல்லாஹ்வின் திருப்பெயர் உச்சரிக்கப்படுவதைத் தடுக்கின்ற இவர்கள், நிம்மதி கிடைக்காமல் தடுக்கப்பட்டு விடுவார்கள். அமைதியிலிருந்து விலக்கப் பட்டவர்கள். விரட்டப்பட்டவர்கள்.

அல்லாஹ்வின் இல்லம் தரும் பாதுகாப்பு, அபயம் இவற்றைக் கொண்டு தம்மைக் காத்துக் கொண்ட நிலையில் தான் இவர்கள் அல்லாஹ்வின் இல்லத்தினுள் வரமுடியும் என்று கூறும் அளவுக்கு அச்சத்தின் பிடியில் இவர்கள் இருப்பார்கள்.

இவ்வாறு அல்லாஹ் கூறுவதுபோலவே நடந்தது.

ஆம்! நபி (ஸல்) அவர்களையும் அவர்களைப் பின்பற்றிய முஸ்லிம்களையும் புனிதப்பள்ளி வாசலுக்கு (கஅபாவுக்கு) வரவிடாமல் தடுத்தனர் குரைஷிகள்.

பின்னர் என்ன ஆயிற்று? மக்கா வெற்றி கொள்ளப்பட்ட ஆண்டில் நபி (ஸல்) யின் சார்பில் ஒருவர் இப்படி அறிவித்தார். “யாரெல்லாம் புனிதப்பள்ளி வாசலில் நுழைகின்றார்களோ அவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு உண்டு”.

இவ்வறிப்பைக் கேட்ட குறைஷி இனத்தின் பெருந்தலைகள் அபயம் தேடி

புனிதப் பள்ளி வாசலுக்குள் புகுந்து கொண்டனர்.

இவ்வசனம் இவர்களை இன்னும் கூடுதலாக எச்சரிக்கிறது. இப்படியும் நடக்கும் என்கிறது.

"அவர்களுக்கு இவ்வுலக வாழ்வில் இழிவும் மறுமையில் கடும் தண்டனையும் உண்டு" என்று எச்சரிக்கிறது.

மேலும் "இத்தகையோர் அச்சத்துடனன்றிப் பள்ளி வாசல்களில் நுழைந்திடத் தகுதியற்றவர்கள்" என்ற வாக்கியத்துக்கு வேறொரு விளக்கமும் இப்படிக் கூறப்படுகிறது.

அதாவது; அல்லாஹ்வைப் பற்றிய அச்சத்தோடும் அவனுடைய ஆற்றலுக்குப் பணிந்த வண்ணமும் தான் பள்ளி வாசலுக்குள் இவர்கள் நுழைந்திட வேண்டும். இதுவே பள்ளிவாசலுக்கு உரிய சரியான ஒழுக்கம்.

இந்த விளக்கமும் இவ்விடத்துக்குப் பொருந்தவே செய்கிறது.

**வசனம் 115ன் விளக்கம்**

இவ்விரு வசனங்களும் கிப்லாமாற்றம் குறித்த சட்டத்துடன் தொடர்புடையவை என்ற முடிவுக்கு நாம் வந்ததற்குக் காரணமே இந்த இரண்டாவது வசனம்தான்.

இனி முஸ்லிம்கள் தொழுகையில் கஅபா வை முன்னோக்க வேண்டும் என்ற கட்டளை வந்த பிறகு யூதர்கள் என்ன கூறினார்கள் தெரியுமா?

இதுவே (கஅபா) சரியான கிப்லா என்றால் ஏற்கனவே பைத்துல முகத்தஸ் நோக்கித் தொழுத தொழுகையெல்லாம் பாழாகிவிட்டது. அவற்றுக்கு அல்லாஹ் விடம் எந்த மதிப்புமில்லை. அவை முஸ்லிம்களின் கணக்கில் வராது என்றனர்.

இவ்வசனம் யூதர்களின் இந்தவாதம் தவறானது. பொய்யானது என்கிறது. அதாவது (அல்லாஹ் கூறியபடி) எந்தத் திசையை முன்னோக்கினாலும் சரி, வணங்கக்கூடியவர் முன்னோக்கும் திசையில் அல்லாஹ் இருக்கிறான்.

எந்தத் திசையை முன்னோக்கித் தொழுதாலும் அங்கே அல்லாஹ் இருக்கின்றான் என்றால் குறிப்பிட்ட ஒரு திசையை மட்டுமே முன்னோக்க வேண்டும் என்று ஏன் கட்டளையிட்டிருக்கின்றான் என்றால் அந்த ஒரு திசையில் மட்டுமே அல்லாஹ் இருக்கிறான். வேறு திசையில் அவன் இல்லை என்பதற்காக அல்ல.

மாறாக அது அல்லாஹ் காட்டுகின்ற திசை அதை முன்னோக்குவதில் இறைக் கட்டளைக்குக் கட்டுப்படுவது வெளிப் படுகிறது.

அல்லாஹ் தன் அடியார்களைச் சங்கடத்துக்கு உள்ளாக்க மாட்டான். அவர்களுடைய நற்செயலுகளுக்கான கூலியைக் குறைக்க மாட்டான்.

அவன் தன் அடியார்களின் உள்ளங்களையும் எண்ணங்களையும் நன்கறிந்தவன். அவன் சுட்டிக்காட்டும் திசை நோக்கி அவர்களை எது முன்னோக்க வைக்கிறது என்பதையும் அவன் நன்கறிவான். (நூல்:- ஃபீழிலாலில் குர்ஆன்)

இப்னு அப்பாஸ் (ரழி) கூறினார்கள்:- நபி (ஸல்) அவர்கள் ஒரு படையை (போருக்கு) அனுப்பி வைத்தார்கள். அப்போது கடும் பனி மூட்டம் நிலவியதால் அப்படையினரால் கிப்லாவின் திசையைக் கண்டறிய முடிய வில்லை.

எனவே கிப்லா அல்லாத வேறொரு திசையை (இதுவே கிப்லா என்றெண்ணி) நோக்கித் தொழுது விட்டனர்.

பின்னர் காலையில் சூரியன் உதித்த போது தவறான திசையில் தாம் தொழுதுவிட்டதை அவர்கள் அறிந்தனர். பயணம் முடிந்து (மதீனாவுக்கு) திரும்பிவந்து நபி (ஸல்) விடம் நடந்ததைக் கூறினர்.

அப்போது அல்லாஹ் இந்த (115) வசனத்தை இறக்கியருளினான்.

**(நூல்:- இப்னு கதீர்)**

அல்லாஹ்வே நன்கறிந்தவன்.

**தொடரும்......**

# உச்சநீதிமன்ற வழிகாட்டுநெறிமுறைகள், குப்பைக் கூடைகளுக்குத்தானா?

Rich India என்னும் நிறுவனத்தினர் கோடம்பாக்கம் பள்ளியில் உடற்கல்வி ஆசிரியரைத் தாக்கி படுகாயமுண்டாக்கிய சம்பவத்தில் உடனே நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லப்படுகிற காரணத்தால், தியாகராய நகர் காவல் மாவட்ட துணை ஆணையாளர் (DC) பகலவன் கடந்த நவம்பர் மாதம் இறுதி வாரத்தில் அங்கிருந்து மாற்றப்பட்டுள்ளார்.

அந்த துணை ஆணையாளர் தி நகர் காவல் மாவட்டத்தில் பணியாற்றிய பொழுது, அந்தக் காவல் மாவட்டத்திற்குட்பட்ட, வடபழனி காவல் சரகத்தின் கீழ்வரும், ௬5 விருகம்பாக்க காவல் நிலையத்தைச் சேர்ந்த தலைமைக்காவலர் ராஜா (துறை எண்: 16038) மற்றும் காவலர் குமரேசன் (துறை எண்: 27925) ஆகிய இருவரும் நன்றாக குடித்து விட்டு, விருகம்பாக்கத்தைச் சேர்ந்த ஆஷா என்பவர் நடத்தும் விடுதிக்குச் சென்று அங்கிருந்த பெண்களில் இருவரை மானபங்கம் செய்ய முயன்றுள்ளனர்.

இது தொடர்பாக ஆஷா கொடுத்த புகாரின் பேரில் அந்த இருவரும் பணி யிடைநீக்கம் செய்யப்பட்டு, அது தொடர்பாக வடபழனி காவல் சரக உதவி ஆணையாளர் (AC) விசாரணை மேற்கொண்டுள்ளார். சம்பவம் நடந்து பல மாதங்களாகியும், இன்னும் முதல் தகவல் அறிக்கை கூட பதிவு செய்யாமல் விசாரணை நடந்து வருவதாகவே சொல்லப்படுகிறது.

இந்த சம்பவத்தில், அவர்கள் இருவரும் குற்றம் செய்யும் நோக்கிலே, மற்றொருவரின் வீட்டில் / அலுவலகத்தில் அத்துமீறி நுழைந்துள்ளனர், அதன் பிறகு கற்பழிக்க முயன்றுள்ளனர். இப்படி பல பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்ய வழிவகையிருந்தும், பல மாதங்களாகியும் வழக்குப் பதியாமல் இருப்பது யாரை திருப்திப்படுத்த? என்ற வினா எழுகிறது.

கடந்த 2013ம் வருடம் நவம்பர் மாதம் 12ம் நாள் லலிதாகுமாரி எதிர் உத்திரபிரதேச அரசு மற்றும் பலர் என்னும் வழக்கில் தீர்ப்பு வழங்கிய 5 நீதிபதிகளைக் கொண்ட உச்ச நீதிமன்ற அரசியலமர்வு, அதில் எட்டு வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்துள்ளது. அதில் முதலாம் வழிகாட்டுதலே, கொடுங் குற்றம் (Cognizable Offense) தொடர்புடைய ஒரு புகார் கிடைக்கப்பெற்றால், அதில் முதற்கட்ட விசாரணையேதும் செய்யாமல், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 154வது பிரிவின் கீழ் உடனே முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்ய வேண்டுமென்பதாகும்.

இதே தவறை ஒரு சாதாரண குடிமகன் செய்திருந்தால், அவன் மீது பல பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் இறுதியறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டு, சென்னையிலுள்ள மகளிர் நீதிமன்றம் அவருக்கு ஆயுள் தண்டனையும் வழங்கியிருக்கும்.

மேற்சொன்ன சம்பவத்தில் கூட்டுச்சதி, குற்றம் செய்யும் நோக்கில் அத்துமீறி நுழைதல் மற்றும் கற்பழிப்பு முயற்சி ஆகிய மூன்று பிரிவுகளின் கீழ் வழக்குகளைப் பதிவு செய்ய முகாந்திரமிருந்தும், முதல் தகவல் அறிக்கை கூட பதிவு செய்யாதது, அந்தப் புகாரில் குறிப்பிட்டுள்ள சம்பங்கள் எதுவும் கொடுங் குற்றத்தின் கீழ் வராது என்பதாலா? அல்லது உச்ச நீதிமன்ற வழிகாட்டு நெறிமுறை களெல்லாம் குப்பைக் கூடைகளுக்குத்தான் என்பதாலா? என்பதை அந்தத் துறையினர் தான் தெளிவு படுத்தவேண்டும்.

**நமது நிருபர் முகம்மது ரிஸ்வான்**

# தீன்சுடர் ஜனாப் டி.எம். உமர் ஃபாரூக் அவர்களை அல்லாஹ் அழைத்து கொண்டான்!



**5**.6.2015 அன்று அதிகாலையில் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் அல்லாஹ்வை சென்று சேர்ந்தார்கள்.

இந்தியாவின் ஒரே சமூக பிரச்னை ஜாதியம். அதன் பெயரால் இழைக்கப்படும் அநீதிகள், கொலைகள்.

கொலையும், கொலைபாதகச் செயல் களையும் காட்டியே தலீத் சமுதாயத்தை அடக்கிப்போட்டு அடிமைப்படுத்தி உள்ளார்கள்.

அடங்க மறுத்து அத்தனை அநீதிகளையும் எதிர்த்து நின்றார்கள் டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள்.

ஜாதிய கொடுமைகளுக்கெதிராக அவர் நடத்திய பெரும் போரில் பல வெற்றிகளைக் குவித்தார்கள். என்றாலும் ஜாதிய கொடுமை கள் ஒழிந்தபாடில்லை.

இந்த நாட்டில் வலம் வந்த அத்தனை கொள்கைகளையும் அடியொற்றி வாழ்ந்தார். ஜாதியை ஒழிக்க இயலவில்லை.

இறுதியில் 2007 ஆம் ஆண்டு திருவனந்தபுரம் வந்து திருக்கலிமாவை மொழிந்து இஸ்லாத்தை ஏற்றார். அவரோடு அத்தனைப் போர்களிலும், போராட்டங் களிலும் உடன் நின்ற சிக்கல் நாயக்கன் பேட்டை ஜக்கிரியா பாய் (முன்னாள் கண்ணைய்யா) அந்தப் பயணத்திலும் உடன் வந்தார். அல்ஹம்துலில்லாஹ்.

அது முதல் 52 ஆண்டுகாலமாக தன்னோடு களத்தில் நின்ற அனைவரையும் இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் பெரும் பணியைச் செய்து கொண்டே இருந்தனர்.

தனது இறுதி மூச்சு வரை இதைச் செய்து கொண்டே இருந்தனர்.

அவர்களுக்கு அல்லாஹ் சுவர்க்கத்தில் உயர்ந்த இடத்தை தருவான். அதற்காகப் பிரார்த்திப்போம்.

அவருடைய ஜனாஸாவை அடக்கம் செய்வதில் திருப்பனந்தாள் ஜமாத்தார்கள் காட்டிய அக்கறை, ஆர்வம், அவர் எங்களவர் என்பதை பாங்குற பதிய வைத்தார்கள்.

அவர்களின் இந்த நடவடிக்கைகள் அந்தப் பகுதியைச் சார்ந்த தலீத்துகள் இஸ்லாத்தின் பக்கம் திருப்பிட பெருமளவில் உதவும்.

தீன் சுடர் ஜனாப் டி.எம். உமர் பாரூக் அவர்களின் வாழ்க்கை ஒரு பெரும் சகாப்தம். அவருடன் நீண்ட நாள் வாழ்ந்தவன் என்ற அடிப்படையில் அவரது வாழ்க்கையைப் பற்றி சில தொடர்களை எழுத விழைகின்றேன். இன்ஷா அல்லாஹ் அடுத்து இதழ் முதல் அது தொடரும். . .

**மு. குலாம் முஹம்மத்**

Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.